ஓம்

ஓம் தத்ஸத் பிரஹ்மணே நம:

சுருளி என்று பெயர் வழங்குகின்ற

# ஸ்ரீ சுருளிஸ்தலபுராணம்.

MARAIMALAI
LIBRARY

இஃது

தேவாரநகரம்

ஸ்ரீ சுத்தாத்வைத வேதாந்தாசாரியார்

ஸ்ரீலஸ்ரீ அருட்கவி

ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமிகளால்

அருளிச்செய்ததைக்

காமயமாநகரினுள்ள சீடர்களால்

பெரியகுளம் ஸ்ரீ மீனாம்பிகை அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

1915.

காப்பி 1000

ஏனெனின், முன் திரேதாயுகத்திலுள்ள தசரதகுமாரராகிய ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியும், பின் துவாபரயுகத்திலுள்ள பாண்டுபுதல்வனான ஸ்ரீ பார்த்தனும், முறையே ஸ்ரீ வசிட்டமகாமுனிவரிடமும், ஸ்ரீ பரமகாருண்ய கருணாமூர்த்தியான கண்ணபிரானிடமும், மகாவாக்கியவுபதேசம்பெறுமுன்னே தீர்த்தயாத்திரையுந்தலயாத்திரையுஞ் செய்திருக்கிறார்கள். பின்னுங்கொஞ்சநாளைக்குமுன் சுபானுபவமூர்த்தமாயெழுந்தருளியிராநின்ற தாயுமானவஸ்வாமிகளுமிதுபற்றியே, மூர்த்திதலந்தீர்த்தமுறையாய்த்தொடங்கினற்கு வார்த்தைசொலச்சற்குருவும் வாய்க்கும் பராபரமே, யெனக்கூறியுளார். ஏனெனின் முற்கூறிய தீர்த்தயாத்திரையுந்தலயாத்திரையும் ஆன்மஞானமடைவதற்கும் அவாந்தரசாதனத்தின் முதன்மையாம். மறறேறு இவை நேரே சித்தசுத்தியைக்கொடுப்பதாதலின், அங்ஙனங் கூறியதாம். ஆதலினிவையேமுதன்மையாம் அத்தகைக்ஷேத்திரமும், ஸ்தலமும் இப்புவியின்றென்பாகமான பரதகண்டத்திற்பலவுளது. அவற்றை இங்கு சிலவற்றைக்கூறுதும்.

ஸ்ரீகாசி, அயோத்தி, பிரயாகை, பதரீநாராயணம், பதரீகேதாரம், அரித்துவாரம், பிருந்தாவனம், வடமதுரை, புஷ்கரம், கயை, ஜகந்நாதம், துவாரகை, பண்டரிபுரம், கோகர்னம், அஹோபிலம், திருப்பதி, காளாஸ்திரி, திருவல்லிக்கேணி, மைலாப்பூர், திருவொற்றியூர், திருவண்ணமலை, காஞ்சீபுரம், சிதம்பரம், சீகாழி, மாயூரம், திருவாரூர், திருக்குடந்தை, திருத்தஞ்சை, திருவையாறு, ஸ்ரீரங்கம், திருவானைக்கா, திருக்கூடல், குன்னக்குடி, பழனி, திருப்பரங்குன்றம், இராமேஸ்வரம், ஸ்ரீவில்லிபுத்தூர், திருநெல்வேலி, திருச்செந்தூர், திருவனந்தபுரம், ஜனார்த்தனம். இவைமுதலான ஸ்தலங்கள் இன்னும் பலவுளது. பின்னும், கங்கை, யமுனை, சரஸ்வதி, கோதாவிரி, நிர்மலா, சிந்து, கிருஷ்ணா, துங்கபத்திரை, பற்குனம், கண்டகி, வைகை, காவேரி, தாம்பிரபருணி முதலான தீர்த்தங்கள் இன்னும் பலவுளது. மேற்கூறியஸ்தலங்களெல்லாவற்றினும் தீர்த்தங்களெல்லாவற்றினும் மிக்கமகிமையும், சிறப்பும், பெருமையும் வாய்ந்துள ஓர் முக்கிய ஸ்தலமும் தீர்த்தமுமுளது.

அவை எவையெனில், மகாசிறப்புற்றோங்கிய, பாண்டிவளநாட்டுளே மகாமகத்துவம்பொருந்திய கும்பமுனிவர் வாசஸ்தலமான பொதியாசலத்தின் வடசாரபாகிய சுருளியென்று பெயர் வழங்கும் ஸ்ரீ சுரபிமாமலையென்னுந்தலமும், சுரபிமாநதியெ

ன்னும் தீர்த்தமுமேயாம். இச்சுரபிமாநதியோடு தலைச்சுருளி தீர்த்தம், ஆறுமுகதீர்த்தம், கௌரிதீர்த்தம், ஏகமுகதீர்த்தம். அக்கினிதீர்த்தம், சல்லியதீர்த்தம், மேகதீர்த்தம்; பால்தீர்த்தம், பவளதீர்த்தம், பள்ளிதீர்த்தம், சுகதீர்த்தம், உக்கிரதீர்த்தம், தைலதீர்த்தம், பரசிவதீர்த்தம், கபிலைத்தீர்த்தம், வெள்ளூப்புத்தீர்த்தம், உரோமமுனிதீர்த்தம், கொங்கணதீர்த்தம், தேவையர்தீர்த்தம், முதலான இன்னும் முந்நூற்றறுபதுதீர்த்தங்கள் வந்துசேருகின்றன. முற்கூறிய ஸ்தலங்களெல்லாவற்றினும், தீர்த்தங்களெல்லாவற்றினும், மிகுந்தமகிமையுற்றுப் பெருமையுடைத்தானதென இச்சுரபிமலைக்கேத்திரத்தையும், சுரபிமாநதியையுங்கூறியதெதனாலெனின் அச்சுரபிமாநதியில் வீழ்வுற்ற அசர இலை கோல் முதலிய யாவுஞ்சிறிதுநாளிற் கல்லுருவாயமைகின்றதொன்றே மிகுந்தவாச்சரியத்தை விளைவிக்கின்றது. இத்தன்மைபகிரங்கப்பிரத்தியக்ஷமாம். இக்காரணத்தன்மை மற்றெத்தீர்த்தத்தினுமில்லையாதலின் இதையே மேன்மையெனக்கூறியதாம். இம்மகாமகத்துவம்பொருந்திய சுரபிமாமலையின்பெருமையும் சுரபிமாநதியின் மகிமையும் பாருளோரறியாவாறுமிதுவரை பதுங்கியிருந்தது. இம்மகாசரித்திரத்தை நம்முன்னவர்களான மகரிஷிகளாலே அறிவிக்கப்பட்டிருக்கின்றன அவை இப்போது எனனுடைய ஸ்ரீ குருமூர்த்தமாய்த் தேவாரநகரத்தின்கணெருந்தருளிபிராஜின்ற ஸ்ரீ ல ஸ்ரீ அத்வைத வேதாந்தாசாரியார் அருட்கவி ஸ்ரீநிவாஸய்யங்கார் சுவாமிகள் மூலமாக வெளிவந்தன. இந்நூல் வழிநூலிலிருந்து வந்ததேயாம்.

## இந்நூல் என் குருமூர்த்த சுவாமிகளுக்குக்கிடைத்த விபரம்.

மேற்கூறிய அன்னவர் சிறிது நாளைக்குமுன் ஸ்தலயாத்திரையாகத் தஞ்சைமாநகரம் சென்றிருந்தனர். ஆங்கு சீதாராமய்யரென்னுமோர் கிரந்தபண்டிதர் கிரகத்திற்றங்க நேரிட்டது அப்போது அன்னவர் இன்னவரை யுசாவியபொழுதுமின்னவர் மதுரைமாநகரின் மேற்பான் சுருளியென்னுமோர் தலமுளது. அத்தலத்தினருகாகத் தேவாரநகரமொன்றிருக்கிறது. அத்தலமேயிவன்றலமெனக்கூறினர். பின் அன்னவர் தேவரீர்கூறிய சுருளியென்னுந்தலத்திற்கு வேறுநாமமுளதோவென வினவ இன்னவர் சுரபிமாமலையென்றுகூறுவதுமுண்டு, ஆயின் அந்நாமமறைவாயிருக்கின்றதெனக்கூறினர். உடனே சீதாராமபண்டிதர் தன்னிடம் கிரந்தபாஷையில் சுரபிமாமலையினுற்பத்தி

விபரமும் சுரபிமாநதியின்மகிமையும் இன்னுமற்றுள செய்திகளும் கூறியிருக்கின்றதெனக்கூற அச்சரித்திரத்தை அன்னவர் மூலமாய் இன்னவர் அதற்கு நேராகத்தமிழ்படுத்திச் சுருக்கமாகவெழுதிக்கொண்டு வந்தனராயினும் இந்நூல் ஸ்ரீ மஹாவாதராயணரால் கூறியதெனமாத்திரம் விளங்குகின்றது. இன்னபுராணத்தில் கூறியிருக்கின்றதென விளங்கவில்லை. அந்தவிபரத்தைஇன்னும் நன்றாய்ப்பரிசீலனஞ்செல்து அடுத்த பதிப்பில்விளங்கக்கூறுவர்.

## இன்னூலினுளவிபரமாவன.

ஆதிமனுவைத்தேவர்களும் மானுடர்களும் சுரபிஸ்தலமகிமையையும், சுரபிநதிமகிமையையும் கேட்டல். பின் வாதராயணரால் சூதபுராணிகருபதேசம்பெற்றது. சூதர் நைமிசாரணியஞ்சாரல். நைமிசாரணியமுனிவர் சூதமுனிவரை மஹாவாக்கியவுபதேசஞ்செய்யும்படி வேண்டல். சூதர் சுரபிச்சுகாந்தச்சோலைசென்று சமாதியடையவேண்டுமெனல். அன்னவர்களின்னதைவினுதல்சூதர்மலயமலையிற்சுரபிமலைஉற்பத்திவிபரங்கூறல்சுரபிமாமலையின் வளமையுரைத்தல். சுகாந்தவனப்பெருமை, சுகாந்தச்சோலையளவு, சுந்தரன்றவஞ்செய்த சூழலீதுவெனல், தருக்கள், பற்பம், லேகியம் தைலம், கிருதம், மூலிகை, பச்சைக்கூமாச்சி, மஸ்தான் சமாதி, பண்டாரத்துறை, இவைமுதலான விபரங்களும் அவைகளின் மகிமையும், ஆறுமுகனாலயவிபரம், அவ்விடத்துளமற்றைய ஆலயவிபரம் சுரபிமாவருவியின் விபரம், தீர்த்தவிபரம், தலைச்சுருளிவிபரம், தலைச்சுருளிமகிமை, தலைச்சுருளிக்குச்செல்லும்வழி, தலைச்சுருளிநாதன்பெருமை, அவன் மகிமை சமாதிகூடியிருந்தவிடங்கள், தவஞ்செய்யத்தகுந்த இடங்கள், குகன் பெருமை, அவன் மகிமை, குகைவிபரம், குகைமகிமை, வேலப்பர் விலக்கு விபரம், அதன் மகிமை, சுரபிக்ஷேத்திர விசேஷ நாட்கள், அந்நாளிலங்கு சென்றோர் பெருமை, அவர் மகிமை, அன்னவர்க்காகுபயன் அத்தலத்திற் சிராரத்தஞ்செய்யுங்காலம், அன்னதானமகிமை, அன்னதானப்பயன் யோகவிபரம், யோகமகிமை, சூதன்சீடரை மனத்தினுளவறிதல், சீடர்கள் தங்களனுபவங்கூறல், பின் சூதரின்னவர்களை பஞ்சகோசவிலட்சணங்கேட்டல், சீடர்கள் கூறல், சூதன் சமாதிகூடிச்சீடர்கள் பக்குவமறிதல், சூதன் நைமிசாரணியர்களுக்கு மஹாவாக்கியவுபதேசம் பண்ணல், சூதர் அன்னவரிடங் கைம்மாறு கொள்ளல், சூதன் சமாதியடைதல், நைமிசாரர் சுர

பிமாமலையின் சுகாந்தச்சோலை சென்று சமாதிகூடல், சீவன்
முத்திப்பதம்பெறல், விதேகமுத்திப்பதமடைதல் வாழித்திரு
நாமம்,இத்தகைய அற்புதமானதாயும் மகாமகிமையுற்றதாயுமி
ராநின்ற இத்தலத்துளசாத்திரமானதிதுவரை வெளியாகாம
லிருந்தது, இந்நூல் என் குருமூர்த்தியவர்களிடமிருந்தும் அவர்
கவனிக்கவில்லை. இப்போதும் அவராலிது முயலவுமில்லை.
பின்னித்தலபுராணமியாரால் முயற்சி செய்தானதெனின் அதி
ன் விபரம் மகாமகிமையுள தேவைமாநகரினுற்ற என்னையன்
அருட்கவி ஸ்ரீநிவாசய்யங்கார் சுவாமிகள் மாசி மாதம் முதலில்
யாதொருகாரணமுமில்லாமல் காமயமாநகரம் சென்றிருந்தனர்
அங்கு அன்னவருக்கு ஒருவராவது தெரியாதிருந்ததாயினுமவ
ருக்குமங்குள்ள சில அத்துவிதவபிப்பிராயமுடையவர்கள் இவ
ருக்குச்சீடரானார்கள். அச்சீடர்களும் என்குருநாதனும், அக்
காமயமாநகரினுள வேதாந்தமடமான சென்னைய ஸ்வாமிகள்
மடத்தில் ஒருங்குகூடி வேதாந்த சாஸ்திர விசாரணை செய்து
கொண்டிருந்தோம். அச்சமயம் அச்சீடர்கள் இவரைநோக்கிச்
சுருளியென்றுந்தலத்திற்கு ஓர் புராணமிருப்பின் முக்கியமான
நன்மையாகுமெனக்கூற இவர் அத்தலத்திற்குப் புராணமுள
தெனச்சொல்லியவற்றின் வரலாறுஞ்சொல்ல அச்சீடர்கள் யா
வரும் அந்நகருளோரும் அப்புராணத்தைப் பங்குனி மாதம்
முடிவதற்குட்செய்யுள் வடிவமாகப் பாடியச்சிடவேண்டுமாத
லால் சுவாமியவர்கள் அவசியமாகவப்புராணத்தைப் பாடவே
ண்டுமென வற்புறுத்தினார்கள். பின் என் ஆசான் இப்புராண
மியற்றுவது லோகோபகாரமுமிகுந்த நன்மையுமாமென
வெண்ணி இரண்டரை நாளில் இருநூற்றைம்பது கவிக
ளையும் பாடித் தானே எழுதியுமானதாலிந்தவாக்கு அருள்
வாக்கென்று கூறவேண்டுவதேதவிர வேறு கோதுளதெனக்கூற
விடமில்லை. இதுநிற்க, இம்மகா மகிமையுற்ற சுரபி ஸ்தல புரா
ணத்தை மற்றைய வெவ்வூரானானுமேனச்சிட்டு வெளிப்படுத்த
வில்லையெனினோ இந்நகருக்கு முக்கியமான வோர்காரணமுளது
அவையாவன நூறாண்டிற்குள் சுரபிமா மலையினுள சித்தரொ
ருவர் சுவானுபூதியடைந்துள வனுபூதிமானாகியும், சர்வசித்தி
வல்லவராயுமுள்ளவவரால் இந்தக்காமயமாநகாம் நிருமாணம்
பண்ணப்பட்டதாகையால் இப்பொழுதுமச்சுரபி ஸ்தல புராண
த்தையும் இந்நகரோரானே வெளிப்படுத்தி யச்சிடலாயிற்று,
இந்நகரத்தினிப்போதும் பத்தர்களும் சுத்தர்களும் கருமகாண்
டிகளும் ஆன்மஞானவடைவுளருமாய்ப் பலர் இருக்கின்றனர்,
இதுநிற்க, இன்னூலிலெக்குற்றமிருப்பினும் அக்குற்றத்தை நீக்

இக் குணங்கொள்கவாறு வேண்டினன் ஏனெனின், ஈஸ்வரனிடத்துங் குற்றமுளதெனவுலகோருரைக்குமுறையுளதாதலினம்மனோரிடங் குற்றமுளதெனக்கூறவாவேண்டும், பின் நாயனார் நல்லார் பிறர் குற்றநாடார் நலந்தெரிந்து கல்லார் பிறர் குற்றங் காண்பாரெனக் கூறியுளார் ஆதலின், குற்றநீக்கிக் குணங் கொள்வீர்களாக. இதுவுமென் முருகனருளேயாம்

இங்ஙனம்,

க. சன்னியாசி.

ஓம் நமோ பகவதே வாசுதேவாய.

## சாற்றுக்கவிகள்.

கம்பமாநகரம் நாராயணய்யங்கார் ஸ்வாமிகள் அருளிச்செய்தது

சமிசமிதைசாலவுளசமமானவகத்துடையசாந்தர்சார்ந்த
சமிதமமாச்சகசமதிற்சரசமுறுஞ்சமமுடையோர்சார்வுமிக்கச்
சமியமனுன்மாவான்மாபிரித்ததுவாஞ்சாந்தருளசமமிக்கார்ந்த
சமியமிகுந்தேவாரப்பதிவாழுஞ்சீனிவாசப்பேர்வள்ளல் 1

வித்தரமாஞ்சுரபிமலைச்சரிதைதன்னை
வியாதன்முனமருளியதோர்படியேமிக்கச்
சுத்தியுடன்றமிழ்ப்பாவாலியற்றுமானச்
சுகிர்தகுணமிகுந்தவிசிட்டாத்துவைதி
மத்தரெனும்பதமடைந்தமகிமைமிக்கோன்
மாறில்லாப்பதமாகுஞ்சமாதிபெற்ற
கத்தனெனவதிவானககணமிக்கோன்
காணரியபதமடைந்தகனகத்தோனே 2

இந்நூலாசிரியர் மாணாக்கர் கம்பமாநகரம் மகா-ள-ள-ஸ்ரீ
கூடலிங்கஞ்செட்டியாரவர்களாலியற்றியது

வண்டாருமலர்ச்சோலைவளமலிகற்பநிகராந்தேவாரத்தி
னுண்டானமகிமைமிகுமுத்தமமாமென்னுசான்வியாதன்முன்
னுட், டொண்டாகவுரைத்தவடமொழிநூலைத்துலக்கினனுற்ற
மிழ்ப்பாவாகக், கண்டாருமதிசயிக்குஞ்சீனிவாசாரியனுங்கரு
ணையோனே 1

இந்நூலாசிரியர் மாணாக்கர் கம்பமாநகரம் மகா-ள-ள ஸ்ரீ
கோ. பரமசிவக்கோனாரவர்களாலியற்றியது.

மிக்கமிகமகிமையுறுந்தேவாரத்தின்மேன்மையுறுமென்னுசா
னிந்தநூலைப், பக்கமுயர்வாதராயணனுற்கூறும்பாகமிலாவிதுத
னையேபழக்கமான, தக்கதமிழ்ப்பாவதனுலியற்றியில்லோர்தா
னதுவேயாகமிகமனதேகொண்டு, நக்கனவனருளாலேயருளினு
னென்னுமமிகுஞ்சீனிவாசப்பேரேறே 1



தனன தன தான தத்த
தனன தன தான தத்த
தனன தன தான தத்த—தனதான.

சுருளிமலையானமிக்கத் தருணமிதினைபக்கச்
சுரபிமலையூடுநிற்கத் தாமான

தருதுமதியானபக்கற் றருமதனைதூக்கற்
றெருமதனனூடுமிக்கத் தெளிவோடு

முருகவுனபாதநித்த மருளகலநாளுநத்த
வருளுமதியானபத்த வரியோனே

வரகவிகளாகுமுத்த வளருமிகவானகத்த
மளமனெனவாகுமத்த மதியான

பருகவுனதானதத்தைத் தருகவெனதானதத்தைப்
பருகமதியாமுமெத்தப் பதியோனே

முருகசரணாரவிந்த வருகவெனபாதமுந்த
மருகனரியாகவந்த முருகோனே

அருமைமிகவானவந்த மருகவெனதானதந்த
தருகவெனநானுமுந்த பருவேனே

தரவடிவமானவெந்த னரனனடியானவங்கச்
சுரபிமலையானவெந்தன் பா

ஓம் தத்ஸத்

ஓம் தத்ஸத்பிரஹ்மணே நம:

சுருளி ஸ்தலம்

என்று வழங்குகின்ற

# ஸ்ரீ சுரபி ஸ்தல புராணம்.

———(o)———

## மங்கலம்

### பாயிரம்.

நாகமாமுகனாரணன்மாமரு
காகவென்னகமெண்ணியதாற்றிடப்
போகமாய்மனம்போற்றிடும்போதனே
யேகனேயெனமுன்னவபோற்றியே 1

அரபிமிக்குமருண்மயக்கேத்திரச்
சுரபிமாமிகச்சொல்குவன்முன்னைனாட்
சரதமாமிகச்சாற்றுவியாதன்சொற்
சுருளியென்னுஞ்சுகேத்திரஞ்சொல்லவே 2

பேதமற்றபிரமமுமீசனோ
டாதிமுக்கணனங்கரதேசிக
னாதைமிக்குவினாயகனுண்மையா
மேதைமிக்கற்பகனைமுன்னுவாம் 3

எந்தனையனையீசனின் மைந்தனை
யந்தரத்தனையென் னுடையாவியை
விந்துனாதவிசாதிகமற்றவென்
சொந்தனாதன் றுணையடிசொல்லுவாம் 4

ஆதியம்மையம்போருகவம்மைதா
டாதியம்மையம்போருகவம்மைதா
ளோதியுள்ளவடியவராட்களே
னீதியாய்ப்பணிந்தோதுவனாணரே. 5

என்னையன் றியிலாதவென்னப்பனை
முன்னையோர்தொழூஉதறிவாளனை
கன்னல்போற்சுவைகாட்டிடுந்தேவனை
யென்னசொல்குவனீசனின்மைந்தனை 6

மலைப்பெருநனைமகிழ்வுறுமாமக
ணிலைப்பெருமைநிகழ்த்தவுமாகுமோ
கலைப்பெருமைநிகழ்த்தவுங்காணொணாத்
தலைச்சுருளியினாதனைத்தாழ்குவாம் 7

அருளியமாநெறியனைத்துமனுட்டித்தோர்ந்து
மகண்டபரசிவஞானமடைவாய்த்தேர்ந்து
மொருவமிலாவதையறிந்தவுண்மைமிக்கோ
ருவப்புடனிக்கேத்திரத்திற்றங்களொடும்
பருவமுடனுக்கின்றபாலவேல
பரசிவனேயான்மையனேபரவுமிக்கச்
சுருளிமகக்ஷேத்திரத்தின்வாழுந்தேவே
சுந்தரனேசுகுணகுணக்குகனாந்தேவே 8

நீதனுமிகனிண்ணயனின்மல
னாதன்றாத்தப்பனாதனுமெண்ணொணாப்
பாததாமரையாகும்பரபரப்
பூதனாரணன்பொன்னடிபோற்றுவாம் 9

மலயமாமுனிதாளொடுமற்றுள
னிலையினானிலமிகுஞ்சித்தர்க
ளுலைவிலாதபதினெழுவுத்தம
ரலைவிலாதவவரடியாழ்குவாம் 10

வானமுற்றதென்வாதவூரரடி
யீனமற்றனற்சுந்தரயீசனு
ஞானமிக்கநல்லப்பனாரடி
ஞானசம்பந்தனாரடி நண்ணுவாம். 11

மாசறுமகத்தாஞானமதியுறுலாடசன்னி
யாசியின்பாதமம்மையமைவுறுமிராசவாம்பா
ளேசவிற்றீர்த்தமெல்லாமிவைகளினடியேதாழ்ந்துங்
கூசறச்சுரபிசொல்லக்குறித்தனன்குணங்கொள்வீரே 12

சுருளியின்வாழுந்தேவச்சுரர்களின்பாதத்தோடு
மருளுறுமவர்கள்பாதமம்பிகைதனயர்பாத
மருளறநீக்குகின்றமன்னவர்பாதம்போற்றித்
தெருளுறக்காதைசொல்வேன் தீர்க்கமாமகங்கொண்டோரே 13

னென்னலின்முன்னோர்கூறுநின்மலக்காதைதன்னை
யின்னிலந்தன்னிலேயெனியம்புதற்குமோவாகா
வன்னதேயானாலுந்தானடியனாற்கூறலாகு
மின்னதேதுணியலானேனிதிற்பிழையிருக்குமோதான் 14

பிழையிருக்குமதையெல்லாம்பொறுமையாகப்
பேணுமற்சிறியவர்கள்பிதற்றுவார்க
ளழகல்லபெரியோர்களாசுநீக்கி
யாகுமிகக்குணங்கொள்வாரதுவேபோல
மிழைபெருமின்னூற்கேட்டோர்பார்ப்போர்யாரு
மிதன்பெருமையொன்றுணர்ந்துகுற்றநீக்கிப்
பழயபடிசுரபிமலைநதியின்மேன்மை
பார்க்கினிந்தச்சகத்துண்டோயகருங்காலே 15

ஓம் தத்ஸத்
பிர்ம்மார்ப்பணம்.

ஓம்.

# ஓம் தத்ஸத்பிரஹ்மணே நமஃ

## நூல்

### சுரபிமாமலையினாற்பத்திக்கிரமமுரைத்தல்.

---

முன்னமோர்காலந்தன்னின்முதன் மனுகாலந்தன்னி
னன்னிலையறியாத்தேவமானுடனிகமர்யாரு
முன்னியேமனுவைக்கிட்டிமுறையினாலடியிற்றாழ்ந்து
மென்னதேதெரியாயாங்களியம்புதற்கேளீரென்றே 16

வினவினரெல்லாருந்தான்விழுத்தவமனுவுஞ்சொன்ன
கனமிகுமிவையேசூதன்கருத்தினறிந்தான்முன்னாட்
டுனிமிகுவியாதனாலேதுணிந்தபின்சூழலொன்றி
னனிமிகனாடிச்சூதனாதனேயென்றுபோற்றி 17

அளவிலாமுனிவர்சூழமம்புவிதன்னினாரு
மளவுறுனைம்மிசாரவன்னவரெல்லோருந்தா
னளவிலாப்பெருமைவாய்ந்தவடியினினட்டவங்கங்
களவிலாமனத்தோராகிக்கசிந்துதாட்பணிந்துபோற்றி 18

ஐயனேனாயேங்கட்குமருமைமாவாக்கியத்தைச்
செய்யவேயிங்குவந்தசெல்வனேயெம்மையாண்ட
வையனேசுகனேயந்தோவாதரவாறுமில்லைச்
சையமாமலையேயென்றுசாற்றியேசகசமிக்கோர் 19

உடல்பொருளாவிமூன்றுமுசிதமாத்தந்தோமியாங்க
ணடவுறுஞ்செயற்கணீவாய்னாதனேபரனேயென்று
படபடப்புடனேகேட்கப்பண்ணவன்கூறுகிற்பா
னுடலினையீந்தீரிந்தவுடலெதுவாகுமென்ன 20

அறுவகையுறுப்புனேர்ந்தவசுசியேனிறைந்தவாரு
முறிவுறுமிவையேயன்னகோசமாமுதல்வவென்னப்
பறிமிகும்பிராணகோசம்பார்த்தனனதுவேயாகுந்
தறிவுளகோசமூன்றுத்தணந்திடும்புத்தியொன்றே 21

இத்தகைக்கோசமைந்தாமிருண்மிகும்கோசமொன்று
மத்தனையிவையேகண்டோமருங்கலையாலேயாங்க
ளுத்தமக்குருவேயென்னவுவந்தனன்சூதன்பின்னு
மத்திமச்சாதனங்கண்மருவியமார்க்கஞ்சொல்வீர் 22

சாதனனான்குஞ்சாமிசயம்புவின்விவேகமொன்று
மோதியமில்லாவிந்தச்சகத்தினினுவர்ப்புமொன்று
மாதியாஞ்சமாதியாறுமடைவுறுமுத்தியிச்சை
னீதனையிவையேனான்கானிண்ணயமாகுமையா 23

பின்னையும்பிரமமொன்றேயிரிதுளவனைத்துமித்தை
யென்னதுதிடமேயாகுமிதுமிகுவிவேகமாகு
மன்னவசகத்தினிச்சையற்றதுமண்ணெண்ணொன்றே
டின்னதுமறுப்பதானேயிதுவிரண்டானதானே 24

அகமிகவடங்கலோடுமிந்திரியமொருங்கலோடு
மிகமிகுவாகுங்கன்மவிச்சையேயற்றதொன்றுங்
ககனத்தினில்லாத்தோற்றங்கண்டதுபோன்மனத்தி
னிகருறவந்தகாமமடக்கலுமொன்றுமாகும் 25

சுருதியினிதானந்தன்னைச்சுவிகரித்துள்ளனனும்
பருகவேசுவையைக்கொள்ளல்பாரமார்த்திகமேயான
வுருவிலியாகுமத்தனிடத்தினுமுருவுமிக்க
மருளாறச்சிரத்தைகொள்ளல்மாதவின்னுஞ்சொல்வோம் 26

முடிவுறுஞான்கானோர்ந்தமுத்தியினிச்சைகொண்டோ
மடிவுறுமனத்தோரானமதியிலாவடியேங்கட்குந்
துடிமனமறுத்துத்தள்ளித்துமிகுமாவாக்யத்தை
யடிகளேயருள்வாயென்றுமழுதனரெல்லோருந்தான் 27

தொழுதனர்வீழ்ந்துபின்னுந்துணைக்குருநீயேயன்றி
னழுவுதமேறவேயாகாவென்றுபின்பணிந்துநிற்கக்
கழிவுறுமகத்தோருங்காரணனானவன்றே
னுழுனிலமிதுவேயாகுமுத்தமச்சீடராகும் 28

மாணவக்கூட்டத்தோரே மைந்தரேயென்றுசூத
னுணமில்லாதனீங்கணடத்துவதெதையேயென்னக்
காணரும்பெருமைவாய்ந்தகடவுளேகருத்தைக்கொண்டு
பாணியினிருத்தியாங்கண் பணிகுவமிதுவேயென்ன 29

இவ்விதமின்னோர் கூறவின்னவனெண்ணுகிற்பா
னெவ்வகையிவர்களாற்றலிவர்களேயாகுமாகப்
பவ்வியமனத்தோரென்றுபார்த்தனன்சமாதிதன்னி
லெவ்வியசீடரென்றேயுணர்ந்தனனுண்மையாக 30

பின்புனற்சூதன்சொல்லும்பேசரும்பெருமைவாய்ந்த
னன்மகிமிகுத்தஞானவிருப்புடைனவிலாத
கன்மனமுடையனீவிர்கடவுளேயாகலாகு
மென்மனனிறைந்தயோலவினிலையாயாகுவீரே 31

ஆகுதற்கென்னசங்கையன்பிருந்தாலேயாகும்
பாகமாமனமுமின்றிப்பரவுறுங்குருவின்பத்தி
யோகமாஞ்சுருதிபத்தினிலமிசைமேலோரன்புஞ்
சாகமாஞ்சதுர்பத்திசார்ந்தவர்சார்வாரன்றே 32

என்றுபின்னுசான்கூறுமிம்மகப்பரதகண்ட
னன்றுதான்ஞானங்கொள்ளனவையிலாவிதினுனல்ல
தொன்றுளவதையேசோர்ந்துமுயர்மனமொருக்குவீரேற்
பன்றியாயுலகங்கீண்டபரமனேயாகுவீரே 33

ஆரியனிவ்வாறோதவச்சமிக்கருளுமையா
னீரினுமொழுக்கமபூண்டனித்தனேபரதகண்ட
மாரியகண்டமாகுமதின்மனதையமில்லை
காரியமனைத்துந்தானேகாரணமாக்குநதேவே 34

இதற்குளுமேன்மைமிக்கதொன்றுளதென்றீரையா
பதமதுமடையவொட்டாப்பரம்பரக்குருவேயென்ன
னிதிமிகுனிமலத்தேவேனீணிலமிதனிலத்தைத்
ததுவதுணுங்களாகத்தயவுடனருளுவீரே 35

உலகிதிற்றெக்கணத்தினுயர்கடயோனிவாழு
மலயமென்றொன்றுண்டாகுமைந்தரேயதினின்மேன்மை
பலகலைகற்றோராலும்பகரொணாப்பெருமைவாய்ந்த
மலையதினுத்தரத்தின்சார்புளமகிமைமிக்க 36

சுரபியென்றொருபேர்கொண்டுசூத்திரம்போலவாகப்
பரவைபோனியதியாகும்பழனகமொன்றுண்டக்தத்
திரவகந்தானேயானுஞ்செப்பியதென்னச்சீட
ருரமிகுங்குருவேயந்தனமமேயதனலென்றார் 37

பொதியையேனுமமாகும்புத்திரக்கோட்டியோரே
கதிமிகுஞ்சுவர்க்கந்தன்னிற்காணரும்பெருமைவாய்ந்த
னிதிமிகும்போகிமன்னனிருந்தனன்கொலுவின்முன்னாட்
பதியதுவானமுன்னோர்பலர்களுமிருந்தாராங்கே 38

அகனிலையடையுமிச்சையடைந்தவரியோகர்சித்தர்
சகமிதினிச்சைகொள்ளுஞ்சகசர்கள்சாந்தமிக்கோ
ருகமுடிந்தாலுமாளாவுண்மையோரின்னுந்தேவ
ரிகமிதினின்பங்கொண்டவையமாமிகுந்தபல்லோர் 39

சாசனமிகுத்தயோகசம்டனர்பலருமாங்கே
னேசமிக்கட்டதிக்கின்பாலகர்நேர்ந்தாராங்கே
சோசியம்படித்தபல்லோர்சூழ்ந்தனர்மன்னைச்சூழ்ந்து
மாசிசள்பலவுங்கூறியமர்ந்தனரிருடிமார்கள் 40

தேவதாசிகளானல்வர்சிறப்புடனடனமாடப்
பாவலர்படிக்கமற்றும்பண்டிதரிறையென்றேத்தக்
கோவிலர்வணங்கவின்னுங்குணமிகுமுனிவரெல்லாந்
தேவனேயென்றுகூறிச்செப்பினராசிகூர்ந்தார் 41

அந்தவக்கொலுவினைவாரணமுனியுமைந்த
முந்தையுமுந்தைதானுமுதல்வனும்வீற்றிருந்தா
ரந்தரமானயாழின்முனியொடுங்கடலேயுண்ட
மைந்தனுமின்னுமற்றுமகிழ்வுடன்றுருவாசப்பேர் 42

ஈசனுமரீசியோடுமின்னவரிவர்களின்னும்
பாசமேனீக்கும்வல்லோர்பார்த்திருந்தார்களந்தத்
தேசுறுமன்னன்தேசைதெளிந்திருதாருங்காலை
வாசமாமிக்கக்காமதேனுவும்வந்ததன்றே 43

வந்தபின்வணங்கிமன்னைவரமுனிவசிட்டன்காணா
தந்தனேரதனினிற்கவழிமிகுங்காலங்கிட்டப்
பந்தமாங்காமதேனுவரவெனப்பணித்தானின்னோன்
சுந்தரக்காமதேனுசோத்திரங்கேட்டுங்கேளா 44

இன்னிலைநிற்கவின்னோனியம்புவன்சர்ப்ாதே
முன்னையோர்வாழுமிக்கமுயல்வுறும்பழத [illegible] ட
னன்னிலமலயந்தன்னிற்சுரபியாய்ச்சனிக்கனன்று
வென்னவன்சபிக்கக்காமதேனுவுமயங்கியாழ்ந்து 45

அப்பனேயையோவிந்தவருமையாஞ்சாபமீந்தா
யொப்பிலாமுனியேயிந்தச்சாபமெக்காலநீங்குஞ்
செப்புவீரென்னக்கேட்பச்செல்வனுங்கூறுகிற்பா
னப்புவியிடத்திற்சொன்னவவ்விடஞ்சனித்தேனீயும் 46

வாழுனாழுவையொன்றுவழிப்படுமந்தக்கால
மூழுறுஞ்சாபனீங்குமென்றனன்வசிட்டனென்று
பாழிலாச்சூதன்கூறப்பயமிலாச்சிடர்சொல்வா
ரேழுறுபூமிதேர்ந்தவீரனேயென்னேயென்னோ 47

கொடுவரியொன்றுகண்டகாலத்திற்சாபநீங்குங்
கொடுவரியெதுவேயாகுங்கூறுவீரென்னக்கூறக்
கொடுவரியின்னானென்றுகூறுவன்முன்னாட்டேவக்
கொடுவரிப்பெயரோனானசித்தனோர்கருவங்கொண்டே 48

ஈசனேயாகுந்தூருவாசனாமுனியைக்கிட்டிப்
பாசனீனீத்தாயோதான்பண்டிதன்போலுனீயோ
னீசனேயாவாய்நீயேகொடுவரியெனக்குநேரே
கூசறனிற்போர்யாரேகூறுவாயென்னவன்னோன் 49

கொடுவரினீயேயாகச்சபித்தனன்கொள்வாயென்னப்
படியினிற்றாழ்ந்துமுடன்பணிந்தனன்பொருப்பாயென்ன
மடிவிலாமுனியுங்கூறுமலயமென்றுறுபேர்கொண்ட
னொடியினினாகஞ்செல்வாய்நீங்குமுன்சாபம்பின்னால் 50

பேர்பெறுஞ்சுரபியொன்றுபேணிடங்கிட்டுங்காலைப்
ரரிதினீங்குமிந்தப்பதத்தினினடைவாயென்று
கூரியமனத்தோன்கூறிக்குறித்தனன்ககனமார்க்கந்
தர்விலாமனத்தோடாங்கேசென்றனன்வருணனன்றே 51

வந்தவம்முனியைநோக்கிவணங்குறாதெதிரிற்செல்ல
விந்தனோர்மலயந்தன்னின்வீழ்குவாயாவின்கன்றா
யெந்தையேயையாவந்தோவெண்ணிலேனகமுங்கொண்டே
னெந்தநாட்டீருமிந்தவியலுறுஞ்சாபமென்றான் 52

மேற்றிசைப்பாலசொல்வேன்மிகுமலையதனிலின்னாட்
டோற்றிடுங்காமதேனு[illegible]யுஞ்சாபத்தாலே
போற்றிடுஞ்சகத்தினாவாய்ப்போகியதனின்கன்றாய்ப்
பாற்றுதிபின்னாற்சாபம்பறிகுறுமென்றுமன்னோன் 53

சென்றனன் ககனமார்க்கஞ்சீடரேயிவர்கண்மூவ
ரன்றுதான்சனித்தோராரென்றலுஞ்சீடரைய
மென்றனேனையசொல்வோமீசனேயிவர்கண்மூவ
ரொன்றுபோதுதித்தாமோபிறிவுறவுதித்தாமோ 54

சித்தனுங்காமதேனுவருணனுஞ்சிகரத்தின்கண்
ணத்திமப்புலியாயாவாங்கன்றுடனுளரென்று
முத்தமச்சூதன்பின்னுந்தீர்ந்ததோவையமெல்லா
மொத்தவேயென்னச்சீடர்மிகுமரியாதையோடு 55

அகமிதினுள்ளவையமறிந்ததுமையவைய
புகலொணாவென்னக்கூறப்புங்கவன்கூறுகிற்பா
னகமிதினெடுநாளிந்தநற்பசும்புலியுமாகச்
சகமிதின்மருக்கங்கொண்டுசஞ்சரித்திருக்குங்காலை 56

பத்திரைகன்றைவைத்துப்பார்க்கொணாவிடத்திற்றாழ்த்தி
முத்திரையாகவைத்துமுடிவுறுங்காலங்கிட்டச்
சத்தியச்சுரபியந்தச்சகசமாங்கானகத்தி
னுத்தரதிசையின்மேற்பானுவப்புடன்றிரியுநேரம் 57

வயவரிகோரத்தோடுவாழுமிப்பசுவைக்கிட்ட
னயமுடன்சுரபியேங்கினல்லவனென்றுகூறப்
பயமிகப்படுத்தியந்தப்படுபுலியுன்னைனானே
தயவுடன்றின்பேனென்றுதானகங்கரித்துப்பின்னும் 58

பசிமிகவானதாலேபார்த்தபினுன்னைவிட்டுப்
பசுவெனுமுன்னையன்றிப்பார்ப்பதுமயலுமுண்டோ
தசையுடற்றின்பேனிப்போதென்றுபின்புலியுஞ்சீறப்
பசுமிகப்பயந்துதாழ்ந்துபரமனேகேணீயென்றே 59

என்னுடைக்கன்றொன்றுண்டுவிப்பொழுதகன்றிட்டேனா
னான்னுடைக்காரணத்தாலிறந்திடுமரசேயென்று
பன்னவேபாய்மாபன்னும்பார்க்கவொண்ணாதவென்ற
னுன்னருமுதரக்கோரந்தணிப்பதுமுறுதியானேன் 60

ஆதலாலின்றுமுன்னையப்பசிதணிக்கத்தின்னா
தேதிலானுமுன்னையினிவிடுவதுவேறுண்டோ
பாதகமிகுத்தவென்றன்பசியதுமீறுதத்தா
லோதொணாவுன்னையுண்பேனென்றதுபுலியுங்கேளீர் 61

கபிலையுங்கூறுமன்னுகாணருங்கன்றினுக்குத்
தபிமிகும்பசியைத்தீர்த்துந்தாழ்வுறப்பின்புனே
யபிநயமுடனேயிங்குமன்புடன்வந்துசேர்வேன்
சபவகமுடையவுன்றன்சகசமாம்பசினீதீர்ப்பாய் 62

வருகுவனுடனேசென்றுவந்தபினென்னைத்தின்பா
யுருகியபசுவுமிந்தவுத்தரங்கூறவந்தக்
கருமனமுடையவேங்கைகளிப்பிலாதாகிச்சொல்லும்
பருமனமுடையயோகஞானியரானுலுந்தான் 63

அவரவர்மனத்தினுகவன்புடன்றாலந்தன்னைத்
தவருதலில்லாமற்றான்றந்திடுவாறுமுண்டோ
பவமிகவுடையனீதான்பரிந்துமிப்போதுபேசித்
தவரினையாகுவாய்நீதணிப்பதுமிதுவேநேரம் 64

என்னவப்புலீயுங்கூறவியற்பசுபின்னுங்கூறு
முன்னவனுனேசென்றுமுன்னுறுங்கன்றிற்கென்றன்
கன்னலாம்பாலையீந்துகளித்தபினுடனேவந்து
சொன்னதுபோலனீயேசாப்பிடவாரானேகின் 65

ஞானியாங்குருவையண்டினற்பெரும்பேறுபெற்ற
மானனுஞ்சீடனன்னேன்மதிப்புறுமுன்னிற்சொன்ன
வானதாமருமைவாக்கியத்தையேமறந்தபாவ
மூனமில்லாமனுனேயடைகுவனென்றுபின்னும் 66

கொண்டனற்கணவன்றன்னைக்குறிக்கலாதப்பாற்கொண்ட
சண்டியாள்சேரும்பாவஞ்சகசமாயடைவேனென்றுங்
கண்டமாய்க்குருவின்முன்னர்க்கடிந்ததோர்வார்த்தைபேசு
மெண்டருபாவஞ்செல்வேனென்றுபின்பசுவுங்கூறும் 67

வயவரியாகுமுன்பான்வார்த்தையாடியதுபோல
நயமுடனுனேயிங்குனலனமுடன்வராதிருக்கி
னுயர்வுறும்பெரியர்தம்மைவுனுத்தரென்றேசும்பாவந்
தயவுடனடைகின்றேனுனென்றதுபசுவுமன்றே 68

இவ்வகைக்கபிலைகூறவியற்புலிகோரந்தீர்ந்தும்
பவ்வியபசுவேயுன்னுற்பசியினுலாழ்ந்திட்டாலு
மொவ்வியனீயேசென்றுமுயல்வுறுங்கன்றுக்குன்றன்
செவ்வியபாலையீந்துசிறப்புடன்வருவாயிங்கே 69

வண்ணமாவேங்கையிந்தவார்த்தைகள்கூறக்கேட்டுத்
தண்ணெனக்குளிர்ந்துள்ளாறித்தகவுடன்பசுவுமெண்ணி
னண்ணியகன்றைனாடினடந்ததுபசுவுனிற்க
வெண்ணியவெண்ணமெல்லாமெப்படிமுடியுமோதான் 70

என்றுபின்புலியுமெண்ணியிருந்ததுபசுவின்பார்வை
கன்றுடன்வருமோவாவுமென்றுபின்புலியுங்கண்ட
னன்றிடந்தனிற்றனித்துனடப்பதுமிருப்பதானு
மொன்றிடாதிருக்கவிந்தப்பசுவதுவனங்கடாண்டி 71

முன்புதான்வைத்தகன்றைமுத்திரையாகக்கண்டுங்
கன்மனமுடையவந்தக்கன்றினைப்பார்த்துஞ்சேயே
யின்றொடேயுன்னைவிட்டுமெழுவதற்கேனாளாச்சே
கன்றுனீயென்முன்வந்துகளிதருமமிர்தமுண்டு 72

பசிதணிந்திருப்பாயென்றுபகரவும்பின்புதனே
ணிசியிருள்போலமூடுனிலமிகுஞ்சோலைதன்னி
னசையுடனிருக்கயாருனண்பர்களில்லாவாற்றாற்
பசுவெனுமென்னோடிந்தப்பாலகக்கன்றைக்கொண்டு 73

செல்லுவேனென்றுபின்னைச்சிறுமிகக்கன்றுக்குந்தச்
சொல்லையாம்பாலையீந்துசூடணித்தார்த்துப்பின்பு
மெல்லையான்கன்றுந்தானுமினிதுறவ்வனத்தைத்தாண்டி
னல்லதுமகரேயிந்தனற்புலியிடத்தைநாடி 74

சென்றதுகானந்தாண்டிச்சேர்வுறுங்குரோசனாறே
சென்றதுபுலியிருக்குஞ்சேர்வுறுங்கானகத்திற்
சென்றதுகுளிர்ந்தவந்தச்சேணுறவளர்ந்தசோலை
சென்றதுவாவுங்கன்றுமென்றனன்சூதனன்றே 75

இத்தகையின்னோரெல்லாமினிதுறச்சூதனோக்கி
யத்தனேபுலியிருக்குங்கானகந்தனக்குமந்தப்
பத்திரையிருக்குங்கானகத்தினுங்குரோசனாறே
யித்தினும்பசுவிருக்குமழகதாஞ்சோலைசொல்வீர் 76

சுந்தரமிகுத்தசோலைசூழ்வுறும்பிரமானந்தஞ்
சுந்தரன்முன்னாளிந்தச்சூழலிற்றவஞ்செய்தான
னெந்தையின்கிருபையாலேயெண்ணியதெல்லாந்தேர்ந்தேன்
கந்தமாஞ்சோலைதானுங்கணக்கிடற்கிழமேலாக 77

குரோசமுன்னூறுகுங்குறிப்புடன்றெற்கினோராக்
குரோசமுமெண்ணூறுகுங்கொண்டவிக்கானகத்திற்
பராவுறுஞ்சித்தரெல்லாம்பரவுறுமிடமுமீதாந்
தராதலமிசையேயிந்தத்தலத்தினின்மேலேயில்லை 78

சீடரேசுகத்தின்மேன்மையானதார்சுகாந்தமென்னு
னாடரும்பெயரேபெற்றுனாளினும்விளங்குனிற்கப்
பாடரும்பசுவுமந்தப்படுபுலியதனைனாடிக்
கேடிலாமனத்தோடாங்கேகெடியுடன்சென்றதன்றே 79

சென்றுபின்சோலைகிட்டிச்சீற்றமாம்புலியைக்கண்டு
னன்றுதானிதுவேயென்றுனற்பசுவணங்கிமன்னா
யின்றுதானன்றுனானேயென்னுடற்றின்பாயென்னக்
கன்றியமனத்தோடாங்கேகனிவுறப்புலியுமாழ்ந்து 80

பெரியதிற்பெரியதானபேதைமைபெற்றனாயே
னாரியவென்சென்மந்தீராதிருக்கினுமுன்னைத்தின்னக்
கருமனமடைந்ததந்தோகாவலாவிறையேயையோ
பருமிகப்பிழைபொருப்பாயென்றுபின்புலியுமேங்கி 81

கபிலையேயுன்னைத்தின்றுங்களிப்புறுவதுவோவையோ
தபிமிகும்பசியேயில்லைதணந்திடற்கரிதோமிக்கக்
கபிலையேயென்றுபாய்மாகண்ணினீர்வழியனின்றுந்
தபிமிகுமனத்தோடேங்கித்தானதுவிருந்தகாலை 82

சத்துவமனத்தோடானசாந்தமாங்கபிலைகூறு
முத்தமப்புலியேயென்னைவுண்பதேதகருமமாகு
மத்திமமாகப்பேசன்மதிக்குதவிவையேவேண்டா
மத்தனேபுலியேயென்றுபின்னருமாவேகூறும் 83

என்னைநீவுண்பையாயினினிதுறவகமுந்தேரு
முன்னியேனீயுந்தின்பாயென்றலோவெறுத்தேன்வாழ்வை
யின்றுனீதின்னாதாகியிப்படிமனத்தொடெண்ணி
னன்றுதானென்பையாயினானிதோமாள்வேனென்ன 84

குயவரிகொடுமையாலேகோரனேனறியாமற்று
னயமிலாப்பயமாயுன்னைனானுனேருண்பனென்றுங்
கயவர்போலுரைததல்செய்துகடிந்தனன்பசுவேயுன்னை
மயமதாத்தின்பனாகின்மாளுவனானுமிங்கே 85

ஈதினாலெதுவந்தாலுமினியுனைத்தின்பேனென்று
மாதரஞ்செப்பவேண்டாமென்றுமாபுலியுங்கூறப்
பாதகமிலாதவந்தப்பசுவதுபுலியைப்பார்த்து
னீதகவுண்மையாயினிலமிதினன்மையாகும் 86

என்றனைத்தகமுநதேருமென்றுபின்பசுவுங்கூறு
மென்னைநீயுண்பதுண்ணுதுரைத்திடுமடிவேனென்று
வன்னதற்புலியுமையோவாகுகதின்னேனென்று
பன்னியேமூர்ச்சையாகிப்படிந்தனபுவியின்மீது 87

கபிலையுமூர்ச்சையாகிக்கழிந்தனகடிகையைந்து
மபிநயங்காட்டிப்பின்புமெழுந்தனபுலியுமாவுந்
தபிமனப்பசுவுமந்தப்புலிதனைப்பார்த்துந்தந்தா
யபிமதமுடனேயந்தவழகுறும்பசுவுங்கன்றே 88

இருவரும்பாரைமீதுமேறியேகீழேவெல்ல
வொருவுதல்செய்துனின்றவருளவும்புலியுமஃதே
கருமனமுடையனாயேன்கலந்தலோபசுவைக்கொன்றே
னிருமலமனத்தோடானின்மலப்பசுவைக்கொன்ற 89

பாவமுமென்னைச்சேரும்படியலோசெய்தேனென்று
தாவரன்றன்னைப்போற்றித்தானுமப்படியேவீழ
வோவரும்பெருமைவாய்ந்தவுலகுளோரெவருமெச்சுந்
தேவரிற்றேவனைதிகழ்மணியவனுமாங்கே 90

கைலையின்பதியுங்கங்காநதிமிகுங்கடவுடானு
மைலைபோன்மலையினுச்சிமகிழ்ந்துளோரியோகர்சித்த
ரைலையாமருளுணாதரந்தரமானவெம்மோர்
னைதவில்லாதவந்தனலறுமிடமேசேர்ந்து 91

முருகனுமயிலின்மீதுமுகுந்தனுங்கருடன்மீது
பிரமனுமன்னமீதுபெயர்ந்தனரிவரைப்பார்த்துந்
தரமிகுமுங்கண்மேன்மைதாரணியவர்கள்சாற்றப்
பரவுறுஞ்சுரபியானபாவமில்லாதவுன்னால் 92

சுரபியென்றிக்கிரிக்குத்தோமிலானாமந்தந்தோ
மிரமிகும்பசுனீதானாயாகுககாமதேனுச்
சுரபினீயானதாலேசுரபியென்றிம்மலைக்கே
பரவுகவுலகோரெல்லாம்பரவுகவென்றுவாழ்த்த 93

வேங்கையும்பசுவுங்கன்றும்விழித்தன தூலம்விட்டுப்
பாங்கினேனிற்குஞ்சேனைப்பணிந்தனர்போற்றிசெய்து
ஞங்களையடைந்தே தாஞ்சென் மறுதனைபானையென்று
தீங்கிலேனென்றதாலேதிரிந்தனமபுலியுமாவாய் 94

கன்றுமாய்முன்றுபெருங்கலந்தனம்பழமைதன்னை
யின்றுதான்முடிந்ததையவென்றனர்முருகன்கூறு
மின்றிருந்திடமேயும்மாலிம்மலைச்சுரபிஞம
மென்றதுமடையாளத்திற்காகவேவுருவங்கல்லாய் 95

ஆகுகமூன்றுபேருமாகுகவுருவங்கல்லா
யாகுகவென்றுமாசான்பின்னையுவறைவன்கேணீ
ராகுகவும்மாலிந்தவழகுறுங்கிரியிடத்தி
ஞுகுகஞஞமுமமருவங்கணங்களோடும் 96

அமருவோமென்றுமாசானறைந்தபினிவர்கள்மூவ
ரிமகிரிமகளாங்தேவிபுத்திரவீசவென்று
னமகிழ்க்கொண்டுபோற்றிஞரணன்றன்னைப்போற்றிச்
சமமனதுடனேயாங்குசாருறுமேலோர்பாதம் 97

மலரயன்பாதம்போற்றிமகிழ்வுடனிவர்களெல்லாம்
பலகலைகற்றுத்தோந்தும்பரம்பரமானனல்லோ
ருலைவிலாவியோகர்சித்தருவப்புடஞகர்போக
ரலைவிலாமனத்தோராகியமர்ந்தனர்கிரியின்மீதே 98

நாரணன்பிரமன்முன்ஞேனவிவிலாவராஞமைந்த
னேரதாமவ்விடத்தினிகல்வுறத்தோற்றுமந்தப்
பேரதாஞ்சுரபிமிக்குப்பெயருடைக்கிரியின்மேற்பா
லாரதாமொன்றுண்டந்தவாற்றிடைக்கரையினின்ஞோர் 99

வைகினர்சுரபிஞமமதின்வருமாற்றிஞம
மைவகைப்பேதனீத்தவருந்தவரியோகர்சேயு
மும்வகையுலகோரெல்லாமுழியின்காலமியாவுஞ்
செய்வகைக்கடன்கள்செய்யச்சிறப்புறுந்தலமீதாமே 100

சுரபிமாமலையினின்றுசுந்தரமானவாறு
னரவுகைதனிஞேடஞடறுமலையிஞமஞ்
சுரபிமானதியென்றுனசுருக்கமாஞமமீந்தும்
பரவுறுமிவர்களெல்லாம்பதியதுவெவ்வேறாகி 101

சுரபிமானதியின்கீழ்பாற்றங்கினன்குமானின்னோர்
சுரபிமானதியின்பக்கற்றங்கினர்சுரர்கடேவச்
சுரர்களுக் கதிகமாதவத்தினோருறைந்தார்சாரப்
பரமிகவடைந்தபல்லோர்பரவியேயிருந்தாரென்றே 102

சூனுமீசன்சொல்லச்சொல்குவரையவென்றே
பாதனீத்திருக்குனல்லோர்பரவுறுஞ்சுரபிமிக்க
னீதவக்கிரியின்மேன்மைனிகழ்த்துதன்வளமையோடு
மாதரமுனியேசொல்வீரென்றனர்சூதன்சொல்வான் 103

இதுவரைசுரபிப்பேரினின்பமாங்காதைசொன்னோந்
ததுமிகனீங்களாகத்தாரணிச்சுரபிதன்னி
னுசிவிலாவிடத்தைப்பின்னாலுரைக்குதுமென்றுசூத
னதிமிதுஞ்சுரபினாகனன்மைமாவளமைசொல்வேன் 104

வேறு

## சுரபிமாமலையின் வளமையுரைத்தல்.

ஏகமெனுமகத்துடனேயிருந்துனீங்க
ளின்பமுடன்கேளீரென்றோதுவன்கேள்
பாகமனதடையாமற்பரிவாய்க்கொண்டு
பார்ப்பதியினாதனவன்கருணைகொண்டுஞ்
சாகதர்கள்வாழிடமாமலையைச்சொல்வேன்
சாற்றுவதுமிகப்பெருமைசாற்றவொண்ணா
வாகருமாமனதடையவிட்சேபத்தி
னினமடையாதுளமுடனேயிருந்துகேண்மின் 105

சுரபிமலைவளமிகவாஞ்சுகிக்கவொண்ணாச்
சித்தர்கள்வாழிடமாகுஞ்சித்தன்றாதை
யரபிமிகுமம்மலையிற்சாகங்கொன்றை
யமிர்தமிகுமாந்திபலாவளவுமிக்கப்
பரவுறுமாசோதியெனும்பலாசிமேலாம்
பார்ப்பதுவுமிகவருமைபலவங்குண்டு
வரசுமிகவாத்தியதுமத்தியோடு
மருண்மிகுமாவணிச்சைமரமங்குண்டாமே 106

கமுககமமிகவுண்டுவிலந்தையுண்டு
காணரியசோதிப்புற்கனமாயுண்டு
நமமிகுமாதெங்குபலக்கடுக்காயோடு
நாடரியபுன்னைமரந் தாணிக்காயுஞ்
சமமிகுமாவெட்பாலைவேங்கையோடுஞ்
சாகரம்போன்மாதுளையுஞ்செருந்திமிக்கக்
கமகமெனத்தான்மணக்குஞ்செண்பகந்தான்
காணுறவேசகவரசுமிகவங்குண்டே 107

தாருவினின்வேம்புவேற்றணக்குகோங்கு
தண்மிகுமானுவலுறுநெல்லிநொச்சி
யாரறியாக்கருநெல்லிமிகவங்குண்டு
வன்புறுவோர்பார்க்கின்றவழலையுண்டு
னீருருவாயாகின்றபாதிரிப்பூ
னித்தியமாயென்னுளும்புனமுருக்குக்
காருருவாம்பச்சிலையுஞ்சந்தனகட்
கரியனிறவகிற்கட்டைகாயாவாமே 108

ஆலித்தியிலவமுடனீந்துவெட்டி
யாருருவாங்கருங்காலிகருக்குவாளி
பாலித்தகடவோமைகடம்புகூந்தற்
பனையுடனேமருதமுடன்மலையின்மல்லி
காலியெனும்பூனையெலுமிச்சையோடுங்
காணரியபொன்மூங்கின்மூங்கிலோடுஞ்
சாலிமரங்கோவீத்தையொன்றேயாகுஞ்
சகசமிகுமோரிலைத்தாமரையுமுண்டே 109

மூலிகையின்விபரமதைமொழிகுவன்கேண்
முன்னவர்கள்பின்னவர்கள்மொழியாரென்றே
பாலியறிபலியறியும்பின்னமூலம்
பார்க்கின்றபொரும்பிலாச்செம்பனாதி
காலிமிகுஞ்செம்மடைவசிகப்பெரண்டங்
ககனமெனுமதுகொடுக்குங்குசலையோடு
னீலிமிகப்பஞ்சாகம்வச்சிரவல்லி
னிண்ணயமாங்கருவூரமுருவியாமே 110

கடலொட்டிவெள்ளையுடகளகமூலி
காணரியகூவிளமுந்தப்பைமூலி
யுடனுதித்தகொட்டாவிவிருக்கியோடு
மூண்மையுறுமூதும்பரமுமுக்கிரகெந்தங்
கடற்கொடியாமூலிகண்டிகனகமுத்தங்
காரவல்லிதிலதவல்லிகருவாய்வல்லி
படப்படவாங்குருவிஞ்சிமயிர்மாணிக்கம்
பார்க்கவொணானிலந்தோண்டிகாட்டுமூலம் 111

கம்பீரங்கரிசமூடன்கடிவாளந்தான்
காணாறவேகாணாதசீரின்பள்ளி
யுகமுடிவினுள்ளுறவாமூலியொன்று
மூத்தமரேயிருவேலிகருகவாதஞ்
சகபதமாமட்டசித்தியாடுமூலி
சாரரியகடுதியொடுவட்டத்துத்தி
னகமிதினேசோவைமருதோணிமிக்க
னண்புள்ளசிவரொட்டிபாடந்தானே 112

செம்பருத்திவெண்பருத்திகரும்பருத்தி
செத்தாலுஞ்சாகாதவிரிச்சான்மொட்டை
யம்பரமாயாகின்றவழுகுகல்லி
யருவுருவாயாகின்றவம்மைமூலித்
தம்பமிகவானனதித்தளதமூலித்
தணப்புமிகுங்கம்புடனேகிரியானொச்சி
யும்பரெலாமறியாதமூலியொன்று
முயர்வானசோற்றுருவிமூலியாமே 113

கடிகல்லல்கற்றலுடன்காணலாகாக்
கால்வழுதிகனகரதம்ரத்தவாழை
படிமிதவாமூலியுளபூமியுள்ளே
பார்க்கின்றபெருகலியன்சிறியனோடு
ளடிமிகவானீராரைபாற்குறண்டி
னண்புமிகுமெருத்தின்னினரர்கடின்னித்
துடிமிகவாஞ்சித்தமலிகொள்ளியோடுந்
தோணாதனிலங்கொண்டியின்னுங்கேளீர். 114

சிறுசின்னிபெருசின்னிமூலச்சின்னி
சினமறுக்கும்பெயருடையசீகைச்சின்னி
பருவருக்கைபடலைமிகப்பாதிமூலி
பண்டாரக்கள்வரறிபளகமூலி
சிறுவருக்குத்தெரியாதகெங்கான்மூலி
செய்வகைகள்செய்கின்றசீகமூலி
பிரமியமாஞேயெல்லாமோடானின்ற
பேர்பெரியமூலியதுபிங்காணாமே 115

குருந்தொட்டிபெருந்தொட்டிகாணாத்தொட்டி
குணங்குறிக்குஞ்செந்தொட்டிகாடுவெட்டி
பருமிகவாச்செய்கின்றவாடாதோடை
பார்வையிலாவழுகுண்ணிகிழவிமூலி
சருவவிடாக்கொடுவேலிசிகப்புவெள்ளை
சாரறியசாகசமாஞ்சூடமூலி
யிருணிலத்துங்காணாதசாரைவெள்ளை
யிருக்கின்றவிடமதுவுமிங்குண்டாமே 116

சாரைகருணிறமதுவுமுண்டாகுந்தான்
சாற்றறியபெருமைமிகச்சாற்றவொண்ணாக்
காரையெனுமூலிமிகக்கணக்குண்டாமோ
கண்ணாவார்காணுவர்கள்காணமாட்டா
ருரைமிகுஞ்சீடர்களேயிந்தவந்த
வுண்மையுறமிம்மலையின்பெருமைதன்னைக்
காரையுறவாராலுமாகாதெண்ணிக்
காணுறவேகண்டோர்கள்காண்பர்தானே 117

தலைவிரிச்சான்குமரிமிகுந்தடுக்கையோடுந்
தாணுருவாயாகின்றசிமிரிமூலி
கலைமிகவாஞ்சீடர்களேயின்னுஞ்சொல்லக்
கருவில்லாவயணாலுமாகாதத்தா
லுலைவில்லாநிலையறியவீதெல்லாமு
முத்தமரேவேண்டாவாமாணாலுந்தா
னலிவில்லாஞானமிலானண்பர்க்காக
ணானிதையேனிகழ்த்தினேனலமாய்த்தானே 118

இம்மலையிற்றெக்கணத்தினுரோமமன்ன
னிருத்தியதோர்சாத்திரத்தின்சமாதியுண்டு
வம்மவதுனிலையறியவறிவாரோதா
னாதரவாயறிபவரேயறிவோராவ
ரிம்மலையிற்சாத்திரங்கண்மிகவுண்டாகு
மிருமனத்தோர்க்கேலாதுசொன்னோமெய்யாச்
செம்மையுறும்பற்பவகைலேகியங்கள்
சித்தர்முறையிருக்கின்றசிறப்பைக்கேளீர் 119

அயபற்பங்காந்தமொடுவெள்ளிபற்ப
மாகாததாம்பிரமுந்தங்கத்தோடும்
பயமிகவாங்காரீயம்வெள்ளீயந்தான்
பளபளப்பாமிரதபற்பந்திருயின்பற்பந்
தயவுறுமாவெள்ளிபித்தளையின்பற்பந்
தாளாதவொழுகரைருந்தாரபற்பந்
தியவானவீரமுடன்காரசாரந்
திரும்பாதரசமணியுமங்குண்டாமே 120

நாகமதின்பற்பமொடுகன்னார்பற்ப
னாட்டுசிவகருணையுறுமுப்பூவோடும்
பாகமுறுமண்டூரங்கெந்தகந்தான்
பாராதவஞ்சனக்கற்பற்பலிங்க
மாகவரிதானவயிரத்தின்பற்ப
மாகின்றபாசாணபற்பமின்னும்
போகமுறுவாதமுறைப்பற்பமுண்டு
புகலவொணாப்பற்பமுறைபுகலவொண்ணா 121

திராவகங்களிலேகியங்கடயிலமார்க்கந்
தேர்வானசூரணங்கள்கிருதமின்னும்
பராவியமாமைந்தர்களேபாகமில்லாப்
பதமிகுமாமனத்துடனேபரிவாய்க்கேண்மின்
றராதலமாமிதினுள்ளதலத்தின்மிக்கத்
தகைமையுறுந்தலமிதுவேதனிமையாக
வராமனதானிற்கவழியாகுந்தானே
வாராதமனதுடையோர்வாழ்வார்கேளே 122

பின்னுமிதின் றலமகிமைசொல்லக்கேளீர்
பேசாதமோனனிலைபெற்றனல்லோ
ருன்னுவதுமவ்விடமேயோகர்சித்த
ருரைப்பதுவுனிற்பதுவுமதுவேயாகும்
பன்னரியபரமாகயோகியர்க்குப்
பாராதகானகமாம்பலவுண்டாகு
முன்னவராமுதலோர்கள்வாழ்ந்தவந்த
முடிவுறுமாதலமகிமைமொழியுறேனே 123

## சுரபிமாமலையின்

## தலதானமும், தலமகிமையும், தானதீர்த்தமும், தீர்த்தமகிமையும் தலக்குகையும், குகைமகிமையும் உரைத்தல்

தலமிகவாமிம்மலையின்சார்பிடத்துத்
தாராளமானகுகையோகஞ்செய்ய
மலயமெனுமிம்மலையிற்றனஞ்சொல்வேன்
மாளாதமனமுடையமகிமையோரே
தலைச்சுருளியாஞ்சுரபித்தேவன்முன்னோன்
றாரணியிறைதனவன்றயவுமிக்கப்
பலகலைகளாய்ந்தோருங்காணுமன்னன்
பரம்பரனுமவன்பெருமைபார்க்கவொண்ணு 124

ஆதிபராசத்திசிவனுதனுங்கே
யமர்ந்திருப்பதாரறிவரறிவாராங்கே
னீதியுறுமனதடக்குனிலையேவல்லோர்
ணிண்ணயமாயறிவார்களையமில்லைப்
பாதியகமாகாமற்பரிவாய்க்கொண்டு
பரனையறியறிவுடையோர்பகர்வாராங்கே
சாதிமுறையில்லாதமோனவைப்பே
சார்ந்தசிவமாகுதலைச்சுருளியாமே 125

தலைச்சுருளியம்மலையிற்றெக்கணத்திற்
றூழ்வானவோரிடத்திற்றங்கினிற்கும்
பலப்பலவோரவ்விடத்திற்செல்லவொண்ணு
பாங்கானசோலைகளும்பவளமிக்கச்
சிலச்சிலவாஞ்செய்கையுடைச்சித்தருண்டு
சிற்றமிகுந்தோராங்கேசேரலாகாச்
சலத்துடனேரோடைகளுஞ்சமாதிமிக்கச்
சார்வானபாறைகளும்பலவுண்டாங்கே 126

அதற்கடுத்துக்குரோசமலையெண்ணுன்குள்ளே
யாகின்றதென்மேற்கினரிசிப்பாறை
மூதியோர்கடவஞ்செய்யும்பாறையீதா
முத்தம்போலிருக்குதலுஞ்சுத்தமுண்டு
கதிபெறவேயாகின்றகணக்கற்றோர்கள்
கற்றெல்லாங்கண்டறிந்தககனவல்லோ
ருதியாதபாறையிதினுள்ளளுளே
வுத்தமர்கடவஞ்செய்யவுவகைதானே 127

ஏகமனமாயாகவிடமுனன்றே
யெண்ணரியவதன்பெருமையெண்ணவொண்ணு
ணுகமிலாவதையடுத்துலாடசன்னி
யாசியனவ்விடத்திற்றங்கும்லிங்கம்
பாகமிலாதவ்விடத்திணுன்குண்டாகும்
பான்மைமிகுமதையடுத்துனீறுப்பாறை
யாகுமனதடைந்தோர்களறியலாகு
மன்னவரேயறிவார்களறிவுளோரே 128

அந்தமிகுந்தலைச்சுருளியிடத்திணுக
வடுத்தவடபக்கமதினல்லோர்வாழுஞ்
சந்தமிகுஞ்சோலையுளபச்சைக்கூமாச்
சிப்பெயராஞ்சகசமிகுமப்பேர்வாய்ந்த
முந்தையுளோரறிவிடமாம்பசும்பொற்பாறை
முழுநீலச்சிகரமதுகுளிர்ச்சிமிக்க
வந்தமனஞ்சுவிகரிக்கனிற்குமந்த
வாழ்வானசிகரமதின்வாழ்வுதானே 129

இத்தகையபெருமைமிகுமியற்பேர்வாய்ந்த
வினிமையுறுமதற்கடுத்துச்சமாதியொன்று
மத்தாணுமானவனின்சமாதியாகு
மதிப்புடனேயங்குண்டுமாண்புள்ளோரே
பத்தரவரவ்விடத்திற்சென்றக்காலே
பரவியமாமனதடங்குஞ்செயலேசெய்யு
முத்தமரேயழகாகுஞ்சோலையாங்கே
யுண்டாகுமெவ்விடத்துமுண்மையோரே 130

முன்சொன்னதலைச்சுருளிதனக்குமுந்த
மூலமவையாகின்றவைம்பதான
பன்னரியகுரோசமவைதாண்டியப்பாற்
பண்டாரத்துறையொன்றுபார்வைமிக்க
முன்னவனும்பூதனாரணனுமாங்கே
முயல்வுறவேயிருக்கின்றபெருமையென்னே
யென்னினிதுவப்பெருமைகூறவொண்ணு
வினிமைமிகுமப்பெருமையென்னசொல்வேன் 131

அத்தலத்திற்சென்றோர்களவனைக்கிட்டி
யாகின்றபடியெல்லாமனைத்துஞ்செய்வா
ரத்தனவனுகின்றனடிமையோரே
யாரணங்கடேர்ந்தவரேயன்புள்ளோரே
சத்தியமாயப்பெருமைசாற்றவொண்ணு
சாற்றறியபெருமைமிகச்சாற்றினும்
புத்தியுடன்கேளீரென்றோதுகின்றன்
புண்ணியனுஞ்சூதனவன்புகலுவானே 132

பண்டாரத்துறையதனிற்கூட்டச்சார்பிற்
பத்திமிகுங்கணபதியாலயமொன்றுண்டு
கண்டோர்களன்னவனைவிண்டோடார்கள்
காணரியபெருமையுறுமுன்னோனாங்கே
யெண்டரியகுகனுலையந்தானுங்கே
யெண்ணமுறுங்குரோசமவையெட்டின்கீழே
னண்ணரியசுரபினதியாலயந்தா
னலமுறவேயமைந்தவகோவென்னேயென்னே 133

அச்சுரபிக்குகன்கீழேகுகையினுள்ளே
யமர்ந்தவழியாச்சரியமிக்கவாகும்
பச்சைமரத்தாணியதுபாய்ந்தபோலப்
பார்க்கின்றபாமரரும்பற்றுவார்க
ளுச்சமிகுமப்பெருமைபுகலுவேனா
னூரில்லான்பேரில்லானுறவுமில்லா
னிச்சயமாமென்னாதன்னென்றன்னாசா
னீசனவனெவ்வுயிர்க்குமொன்றானானே 134

ஊருள்ளான்பேருள்ளானுறவுமுள்ளா
னுத்தமனாமென்னாசானுறுதியாகப்
பாரினிடத்தக்கரையாற்சுரபியாற்றிற்
பாங்காகவவ்விடத்தேபத்தராக
னீரானமனதுடையோர்னீறுமாக
னின்மலனாமம்முருகனிருக்கின்றானா
மோருருவாமன்னவனுமுவகைமிக்க
வுத்தமர்கட்கெல்லார்க்குந்துணையதாமே 135

மாபெருமைவேலப்பன்மகிமையென்றே
மகிழ்ச்சியுறும்பண்டாரத்துறையினின்று
மாருருவாயாகின்றோனெண்குரோச
மதியுள்ளவவ்விடத்தேமுருகன்கோவின்
மாமிகவாமவன்பெருமையானேசொல்வேன்
மகிழுறுவாஞ்சோதியுருவவனேயாகு
மாவெனுமாமன்னவனுமவனேயாகு
மதிப்புள்ளமதியோரேமாண்புள்ளோரே 136

பிரபலமாமகிமையுறுமுருகன்கோவிற்
பேசாதவவ்விடத்தின்மேலேனின்றுங்
கரமதுபோலருவியதுசுரபிதானுங்
கண்டமதாய்த்தொட்டியதின்வீழுமத்திற்
சருகுகளாமசரமெலாங்கல்லேயாகுஞ்
சாராதவப்பெருமை சாரவொண்ணா
னரையவனினருளாலேயாகின்றத்தா
னண்புள்ளநாயகரேனவீலுறேனே 137

சுரபியதுமருவியதாவீழானின்ற
சுந்தரமாமவ்விடத்திற்றென்மேற்குள்ளே
பரவியமாணுகேந்த்ரன்குகையுமுண்டு
பார்க்கின்றவதையடுத்துச்சாம்பிராணி
வுருவமதாமம்மலையுமுண்டுமாங்கே
வுத்தமர்கள்வாழ்கின்றவுவகைமிக்கச்
சருவவிடாக்கைலாசக்குகையுமாங்கே
சாற்றுவன்கேளுருவமிலாமானிடற்கே 138

பெருமைமிகுங்கைலாசக்குகையிணுள்ளே
பேணுதமனதுடையோர்பேணலாகுங்
கருமிகவாமகமுடையோர்காணலாகா
கண்டவர்கணல்லோரேகாணலாகும்
பருவமிலாக்கன்னியர்க்குத்தெரியுமோதான்
பளபளப்பாமிந்தியத்தின்சுவையுமங்கேதா
வருமனதையறிகின்றவிருப்புள்ளோரே
யாகாகாவிதன்பெருமையறையுறேனே 139

அதையடுத்துக்கன்னிமார்கோவிலுண்டு
மதையடுத்துக்கன்னிமார்தீர்த்தந்தானே
வதையடுத்துனீறென்னுங்குகையுமுண்டு
மன்புள்ளோராரறிவாரறிவாராங்கே
யதையடுத்துமேன்மக்கள்வாழானின்ற
வருந்தவர்கடங்குகிறபாறையுண்டு
மதைக்கூறவெட்டவொணுவம்பலத்தி
னழகானபாறையெனவறையலாமே 140

அப்பாறைனேர்வடக்கேதாத்தப்பன்ரூ
னழகாகவமர்ந்திருப்பாணுலயத்திற்
செப்பாகவவனடந்ததடமுமுண்டு
சேரும்கக்கபிலையதின்றடமுமுண்டு
முப்பாகக்குதிரையதின்றடமுமாங்கே
யுறுதியதாயுண்டெனவேயறையலாகும்
பைப்பானணுய்த்தடமுமங்குண்டாகும்
பார்க்கின்றவிவையெல்லாம்பார்க்கலாமே 141

இந்தமகாமகத்துவமாமிதனிற்கப்பா
லீசானதிசைவழியாங்குகையொன்றுண்டு
மந்தமகுமினத்தோர்க்குமறியலாகா
மாளாதவக்குகையும்பெரிதேயாகுஞ்
சந்தமிகுமக்குகையினேரந்தன்னிற்
சார்வானவெள்ளூப்புத்தீர்த்தமுண்டு
முந்தையவரென்றனக்குமுறையாய்ச்சொன்னார்
மூதறிவாமைந்தர்களேமொழியலானேன் 142

அதற்கடுத்ததென்மேற்குப்பக்கந்தன்னி
னழகாகமிக்கதொருசோலையுண்டு
மிதப்படுமாபுந்தியுளோரறியலாகா
மேன்மையுறுமவ்விடத்திற்சித்தர்யாரும்
பதத்துடனேயேறியங்குசெல்லுங்கல்லாற்
பார்க்கின்றரதமொன்றுபேராயுண்டு
கதத்துடனேசென்றோர்கண்மாளுவார்கள்
காணாதபெருமைமிகக்கண்டோனாமே 143

இத்தகையபெருமைமிகுமிதன்கிழக்கே
யேறுனவோர்குகையுமாங்கேயுண்டு
பத்தரெலாம்பணியுமதின்றெற்கேயாகப்
பாங்கானசிங்காரக்குகையொன்றுண்டு
வித்தலத்தினியோகியர்கண்யோகஞ்செய்ய
வெண்ணாதவெண்ணமதாயியக்குஞ்செய்கை
மத்தரவர்செல்வாரோமதிப்புமிக்க
மாணவரேயென்றுமிகச்சூதன்சொல்வான் 144

அக்குகைக்குக்கிழக்கேயானீறின்பாறை
யடுத்தடுத்துவெடுத்தாலுங்குறையாமிக்கப்
பக்குவமாங்கோடிப்பேரெடுத்தாலுந்தான்
பாழாகப்போகாதபாறையாகு
மக்கடமாம்பிடியதுவேவேணும்வேணு
மார்க்கமெலாமறிகின்றவறைக்குமப்பா
லிக்கடமாந்தூலமிதிலென்னுண்டாகு
மீசனறிவழியதற்குமிதுவுமாமே 145

பேர்பெறுமாவிப்பாறைகிழக்கேயாகும்
பேணுருவாஞ்சிகாகௌரியாலயந்தா
ணுருருவாமவ்விடத்திற்றீர்த்தமொன்று
மந்தமிகுஞ்சிக்கம்மாடீர்த்தமாகும்
பேரானவதின்மேற்கேயேகமான
பெருமையுறுமுகதீர்த்தமொன்றுண்டாங்கே
சீருருவாமதுதானேயவ்விடத்திற்
சிறப்பாகவாறுபிரிவாகவந்தே 146

கணபதியேயதனடியிலாறுண்டாகுங்
காணுர்கள்செய்யார்களதுவேயுண்டு
கணணுதாங்குண்டுகாணுரந்தக்
கல்லுருவாயாகின்றகணபதிக்குக்
கணியெனுமோர்சத்தமுடணுறுமாறுங்
கணபதிக்குமபிடேகஞ்செய்துவைக்குங்
கணபதிக்குமாறுகவீழ்ந்ததாலே
காணரியவாறுமுகதீர்த்தமென்றே 147

பேர்பெருகுமித்தீர்த்தம்பெருமைமிக்கப்
பேச்செல்லாம்பின்ணுலேபேசுவேணு
ணூரில்லாவவ்விடததின்மேற்குப்பக்க
முயர்வானமகமதுமானபியாமன்ணே
ணுருருவாங்குகையொன்றுமாங்கேயுண்டு
மன்புள்ளோரறிவார்களறியலாகாச்
சீரியதாமிதன்பெருமைசிறப்புள்ளோரே
சிவபெருமானருளாலேசெப்புறேனே 148

முன்கூறுனபியவனின்சமாதிமாடே
முன்கீழேசிவலிங்கமொன்றுண்டாகும்
பன்னரியபெருமையுறுலிங்கமாகும்
பாராதியறியாதலிங்கமாகு
மென்னுடையசீடர்களேயியம்பலாமோ
வித்தகையபெருமையுறுலிங்கந்தன்னை
முன்னவர்களெல்லோருமுன்னியாங்கே
முறையாணுரென்பதுவுமுண்மையாமே 149

ஆதிபராசத்திசிவனருளினாலே
யன்பாரும்பண்டாரத்துறையின்கீழே
னீதியுறுமக்கினியாந்தீர்த்தமொன்று
னின்மலமாம்படிந்தோர்களெல்லோருந்தா
னோதியுணர்பெரியோர்கள்வாசஞ்செய்யு
முருவானகுகைபலவுமடுத்துமுண்டு
காதிகதைபோலமிகக்கனவுகண்டோர்
கணக்கற்றகணக்கர்களுமங்குண்டாமே 150

அந்தமகாமகிமையுறுவென்னியாற்றி
னப்பாலேசூழ்ந்துமிகக்குகைகளுண்டு
விந்தமலைபோன்மலையினிதனைக்கூற
விரிஞ்சனவனாலுமாகவாகாச்
சந்தமிகுமவ்வாற்றின்வடபக்கத்திற்
சார்ந்துமிகக்கணபதியின்கோவிலுண்டு
விந்தமிகக்கணபதியாலயத்திற்கப்பா
லேகின்றவழியதனினைங்குரோசம் 151

தாண்டியதுவேலப்பர்விலக்கங்குண்டு
தாழ்வானமானுடர்கள்செல்லராங்கே
தோண்டியதிற்பாற்றீர்த்தங்கற்பூரந்தான்
தோணுமற்பொங்குமதின்பெருமைமிக்கக்
காண்டிமிகக்கவனமதாக்கண்டோர்காண்பர்
காணாதபெரியர்களைக்காணலாமோ
னீண்டுமிகுமிம்மலையினின்னுமுள்ள
னிண்ணயமாம்பெருமைதனைனிகழ்த்துவேனே 152

சித்தர்களுமியோகர்களுமியோகர்தானுஞ்
சிறப்பானஞானியருந்தேவர்தானும்
பத்தர்களுமங்குள்ளபார்வையில்லாப்
பாராதியறியாதபான்மைமிக்க
முத்தர்களாலறியவொருவிடமங்குண்டு
மூழ்கியதினெல்லோருமுண்மைபேசுங்
கத்தனவன்ரகசியங்கள்பேசுமந்தக்
காணாதபெருமைதனைக்காணார்காணார் 153

அக்கினியாந்தீர்த்தமதினப்பக்கத்தி
னழகானராசமகாவம்பாள்கோவி
லுக்கிரமாமவளுண்டுமாங்கேதீர்த்த
முறுதிமிகவுள்ளகருங்குளவியின்னும்
பக்கமதிற்செங்குளவிகடினசர்ப்பம்
பார்க்கின்றகுகையதுவும்பலவுமுண்டு
மிக்கவிதன்பெருமைதனைமிதமாய்ச்சொன்னேன்
மேலோர்களறிவார்கள்மேன்மைதானே 154

முன்னாலேகூறுதலைச்சுருளிதன்னின்
முறையாண்டிகண்டமுடன்ருதன்கண்டம்
பன்னரியபவளமதுபலவங்குண்டு
பவளமெனும்பாறையதும்பாங்கேயுண்டு
னன்னிலமாமன்னிலமேமுடிவுமாகு
ஞடரியபெருமைமிகஞடவொண்ணு
வுன்னியுறுமுத்தேவன்வாழுமந்த
வூகமுறுந்தலைச்சுருளிப்பெருமைதானே 155

அந்தமிகுந்தலைச்சுருளிசெல்லவைந்து
வாறுவழியுண்டாகுமறைகுவேறு
னுந்துவழியிவ்வுடலைத்தள்ளவேண்டு
முத்தமமாம்பிராணனையுந்தள்ளவேண்டு
மந்தமுறுமனந்தனையுந்தள்ளவேண்டு
மார்க்கமுளபுத்திதனைத்தள்ளவேண்டு
மிந்தமுறைதள்ளியதினப்பாற்போக
விருக்குமதினிருள்வழியாமதனைத்தாண்டி 156

அப்பாலேசென்றக்கான்வெளிக்காடாகு
மன்புடனேயதுதள்ளியப்பாற்செல்ல
வொப்பாகவொன்றுமிகக்காணேனங்கே தா
வுண்மையுறுங்குகன்றனையேகண்டேன்கண்டே
னப்பாலேதலைச்சுருளியதுவேயாகு
மாருமறிவார்களதுவடைவுமிக்கக்
கொப்பாகுமனமுடையோர்காணலாகாக்
குவிந்தமனமுடையோரேகாண்பர்தானே 157

அந்தமிகுஞ்சீடர்களேயறைகுவேனு
னுருருவாயாகின்றதீர்த்தந்தானே
யிந்தமுறைவண்ணமதுமாறேயாகு
மீரில்லாமனதுடையவின்புள்ளோரே
கந்தமிகுங்கைலாசக்குகையின்பக்கற்
காணுமற்கேட்கின்றசங்கினுனைசை
யெந்தவருஞ்சேகண்டியோசைமாலை
யிரவுடனேயிக்காலமுழக்கந்தானே 158

மையுருவாமனதுடையோர்மருவலாகா
மாளாதபளிங்கானமனத்தோராகு
முய்யுறவேயகமுடையவுத்தமர்க்கு
முருவாகவிளங்காதுவுண்மையிந்தப்
பையரவினாரணனின்கிருபையாலே
பார்க்கின்றபொழுதெல்லாம்பரனேயாகுஞ்
செய்வதுவேயொன்றுமிலைசெய்வேனுனே
சேதனனுனேனேசிறப்புளோரே 159

சுரபினதிவிழுங்குகைதானழகுமிக்கச்
சுந்தரமாயற்புதமானீண்டுமேலாய்ப்
பரவியதோரக்குகையுந்தொங்கலாகப்
பார்க்கின்றதனக்காம்புபலவங்குண்டு
தரமுடனுமத்தீர்த்தங்கேழயினுந்
தாழ்வில்லாத்தரமுடையதீர்த்தமின்றுங்
கரமிகவேயானவழியாகுந்தீர்த்தங்
கண்டவுருத்தீர்த்தமவைபலவதாமே 160

அத்தீர்த்தமகிமையெலாம்பின்புசொல்வே
னாகின்றகற்பசுவுமாங்கேயின்னு
முக்தீயாங்கோரமிகும்புலியுங்கன்று
முன்னுற்வேபின்னுறவேமுலையின்காம்புஞ்
சத்தியமாயுண்டெனவேசாற்றலாகுஞ்
சாரரியபெருமைமிகச்சாற்றுவேனு
னுத்தமரேசுரபியெனுங்காமதேனு
முயர்வாகவாழ்ந்தவிடஞ்சுகாந்தமாமே 161

சுகாந்தமெனுஞ்சோலையுளே தீர்த்தமொன்று
சொல்லரிய தண்ணுடனேசுவையதாகச்
சுகாதீதச்சோலையுளேகுகைகண்மிக்கச்
சுந்தரமாயமர்வதற்குஞ்சுகந்தமிக்கச்
சகாமிகவுமுண்டாகுமங்குதானே
சார்வாகச்சமாதியதுனீங்களாங்கே
யகாரமெனுமப்பொருளையறியுமந்த
வன்புடையசீடர்களேயன்பாய்க்கேண்மின் 162

ஐயனெனுமென்னாலேயடைவாய்க்கேட்டு
மாருருவமாவதற்குமாங்கேசென்றும்
பையறவேனீங்களெலாஞ்சமாதிகூடப்
பசுவிருந்தசோலையதுபின்னேகூர்வே
னுய்யவிடமதுவாகுமுறுதியோரே
யுத்தமமாமித்தலத்தின்மகிமையின்னுஞ்
செய்யும்வழிசெப்புவதுமிங்கேசொல்வேன்
சேர்ந்தமிகுமனதுடையசீரியோரே 163

அத்தலத்தினருமைமிகுமகத்துவந்தா
னாகின்றசித்திரையின்மாதமுன்னே
யித்தலத்திற்கூட்டமிகயோகர்சித்த
ரியம்பவொணாஞானியரும்பத்தர்தாமு
மத்தரவர்சீடரெலாமனுடர்யாரு
மணுகவொணாமூடர்களுமணுகுவார்க
ளித்தலமேயின்னாளிலிடங்காணாபோ
லிருக்குமதுசந்தடிதான்மிகவுண்டாமே 164

இன்னாளிலித்தலத்திற்சென்றோருக்கு
மின்பமிகுங்காசியினிற்கங்கைமூழ்கிப்
பன்னரியபரசிவனைப்பூசித்தங்கே
பாங்காகவோராண்டுமிருந்தவர்க்கு
மென்னபலனுறுமோவதுபோனூறு
மெண்ணரியபலனடைவரிதுவேதிண்ண
முன்னரியவன்னாளிற்சுரபிதீர்த்த
முயல்வுடனேயிருந்தங்கேமூழ்குவாரேல் 165

தந்தையினைக்கொன்றபவந்தாயைக்கொன்ற
தாழ்வுமிகுமப்பவமுங்குருவைக்கொன்ற
வந்தமிகும்பஞ்சமகாபாவமின்னு
மியம்பவொணாப்பாவமெலாமோடுமோடுஞ்
சந்தமுறுஞ்சகசமுளசீடரேகேள்
சாற்றரியவின்னுளிற்சகசமான்
முந்தவுறும்பரதேசிக்கூட்டங்கட்கு
முறையுடனேயன்னமதுமீதனன்றே 166

இன்னுமிதன்பெருமைதனையியம்பலாமோ
வெண்ணரியபெருமையினையின்னுஞ்சொல்வே
னுன்னரியவாடியமாவாசையன்று
முத்தமர்களித்தலத்தினுள்குவார்க
ளென்னமிகப்பெருமையதுமீசனாலே
யிதமாகவுள்ளவமாவாசைதோறும்
பன்னரியபனிரண்டுமாதமுன்னே
பகர்வுறவேயித்தலத்திற்பல்லோர்செல்வர் 167

பங்குனியுத்திரமதினுந்தைப்பூசத்தும்
பார்க்கவுறுங்கிரகணத்தின்காலத்துந்தா
னங்குமிகுஞ்சிரவணத்தின்கூட்டமிக்க
வத்தலத்தினன்புள்ளமகிமைனேரம்
பங்குருவாமத்தலத்தினெக்காலத்தும்
பகர்வரியமுன்சொன்னகாலத்துந்தா
னங்கடவுளாகின்றமுன்னோர்சென்ற
னற்பிதிரறங்களுக்குத்திதியுமாமே 168

எக்காலுமித்தலத்திற்றிதிசெய்தான
வியற்பயனையியம்புவதுமெண்ணவாமோ
முக்காலுமுடியாதசேதுகாசி
முறைமிக்குங்கன்னியாகுமரியோடும்
பக்கானதிரிவேணிகயையினோடும்
பாங்கானபிரமகபாலத்தினோருந்
தக்கார்களிவ்விடத்திற்செய்வதானுந்
தான்மிகவேயாகின்றபலனுண்டாமே 169

அப்பயனையியம்புவதுமியாராலாகு
மன்னமுடையவராலுமறியலாகா
முப்பழமுந்தேனுடனேகலந்துண்டக்கான்
முறையானசீனியதுங்கூடச்சேர்க்கச்
செப்பியதுனன்றேயோதீதுதானோ
சேராதமனதுடையசெய்கையோரே
தப்பறவேயப்பலனைமொழிந்துவிட்டேன்
றாணியினத்தலத்தின்பெருமையினும் 170

## அன்னதான மகிமையுரைத்தல்

வந்தவர்களுண்ணுமிகுமன்னதான
வழியதனின் மகிமைதனைவழக்கமாகச்
சொந்தமிகச்சென்றவர்கடளிகைசெய்து
சுந்தரமாம்பரதேசியெல்லோருக்கும்
பந்தறவேபடைக்கின்றவன்னம்போகப்
பார்க்கின்றவன்னமதுமுன்னேபோல
வெந்தவழிவந்ததுவோவென்றுமெண்ணி
யெடுத்தாலுமாளாதுவன்னந்தானே 171

எத்தனைபேர்சென்றாலுமத்தலத்தி
னிடங்கொடுக்குமன்னமதின்பெருமைமிக்கக்
கத்தனவன்பெருமையினாற்காணுமிந்தக்
காணரியவன்னமதின்பெருமையினு
முத்தரெலாமொழிகின்றார்முன்னும்பின்னு
மூதறிஞரெல்லோருமுண்பாராங்கே
செத்தவர்கண்முத்தியதுசேருவார்கள்
சேணானபதமதுவேசெப்புவாமே 172

தானமெனுமன்னமதின்மகிமைதன்னைச்
சாற்றுவதுமாராலுமரிதேயாகு
மானமுறுமைந்தர்களேசித்தர்யாரு
மகிழ்வுடனங்கிருக்கின்றாரதனாலந்தத்
தீனமதாயன்னமதுகுறையாதாகுந்
தேடரியகோடிப்பேர்வந்தாலுந்தா
னூனமிலாஞானியரேயாகுவார்க
ளுவப்புடனேயுண்டவர்களங்குதானே 173

தானதுவாயாகின்ற தன்மைக்காகத்
தலமுள்ளவரலாறுமலையின்பேரும்
பானிறமாஞ்சத்துவரேபான்மையோரே
பாராதியடைவுறுமாசாதனங்க
ளீனமிலாவியோகமடையூகமியாவு
மிச்சுரபிவரலாறுங்கன்றின்கூறுங்
கானளவேயானபுலிவரலாறுந்தான்
கண்டமலைப்பொதியையதுசுரபியான 174

வரலாறுமிம்மலையின்மகத்துவந்தான்
வண்ணமிகவாகின்றகுகைகளாரும்
பருவமுறவறிவித்தேதன்பலமாய்ச்சொன்னேன்
பாங்கான தருச்சாதிமூலிமிக்கக்
கருமிகவாம்பற்பவகைலேகியங்கள்
கண்டதுபோலுங்கண்மனங்கறையச்சொன்னே
னுருமிகவாந்தலைச்சுருளிவழியுஞ்சொன்னே
னுண்மையெலாமுங்களுக்குனானேசொன்னேன் 175

சுரபியதின்மகமகிமைபின்னாற்சொல்வேன்
சுருக்கான தீர்த்தமதின்றானஞ்சொன்னே
னரவமிலாத்தலமிதனின்மகிமைசொன்னே
னன்னமெலாமாகின்றமகிமைசொன்னே
னரவடிவமானசுகனன்பனாரே
னானினியேசுரபினதிமகிமைசொல்வே
னுருமிகவாம்பரசிவனை வணங்கினானே
யுங்களுக்குமிதையுரைப்பேனுண்மைதானே 176

## சுரபிமகாநதியின்தீர்த்தமகிமையுரைத்தல்

சுத்தமதாஞ்சோதிசுரூபதேவச்
சுகுணமணிச்சுந்தரனேசகசரூபா
பத்தியுளோரறிகின்றபான்மையோனே
பார்க்கின்றபொழுதெல்லாம்பரமேயானு
முத்தமாஞ்சீடருக்குஞ்சுரபியான
வுருமிகவாந்தீர்த்தமகத்துவமேசொல்ல
யித்தலமேயென்னகமேவணங்கினேனே
யீசுவரனார்பாதமதுகாப்புத்தானே 177

அந்தமகானதியானசுரபிமாவை
யடைவாகவுங்களுக்குமறைகின்றேனு
னெந்தவழியானனதிச்சுரபியாகு
மென்னுதன்சுப்பிரமாமணியன்பாத
முந்தவுளவன்னவனின்பக்கல்வீழ்ந்து
மூடுருவிப்பாண்டியனுடதுவேசென்றும்
பந்தமடையஞ்ஞானர்பரமேயாகப்
பாரினிலேயோடுமிகப்பரிவாயன்றே 178

யாவருமேசேரிடமாஞ்சுரபிமிக்க
யாராலுமளவிடுதற்கரிதேயாகு
மூவராவராலுமொழியலாகா
முன்னவனூர்வாழுமிதின்சுரபிமிக்கப்
பாவமெலாமறுக்கின்றபாரதீர்த்தம்
பாரினுள தீர்த்தமெலாமிதற்குநேரோ
காவன்மிகுங்கங்கைநதியிதனேடாமோ
கருணிறமாயமுனைநதியிதனேடாகா 179

அந்தரமாயாகின்றவாணியாறு
மாராலுமளவிடுதற்கரிதேயான
சுந்தரமாங்கண்டகிமானதியுமாகாச்
சுகரூபப்பற்குணமானதியுமாகா
வந்தமுறும்பம்பைனதியாகவாகா
வழகுள்ளபெண்ணையிதினேரேயாமோ
கந்தமிகுந்துங்கபத்திரையுமாகாக்
காண்கின்றகாவேரியிதுனேராமோ 180

தென்மதுரைவைகையதுமிதனேராமோ
தெக்கணமேயாகின்றசெம்பின்பர்ணி
முன்வருமானதிகளெலாமிதினேராகா
முன்னுமுளபின்னுமுளசுரபியாறே
யென்னவதின்பெருமைமிகவியம்புவேனே
னின்னதியினுபனதிகளியம்புவேனே
னென்னவதைச்சூதனவன்சீடருக்கு
மெண்ணரியபெருமையிதுகேளீரென்றே

ஆன்மாவையானென்றுமறிந்தனல்லோ
ரன்புடனே தங்குகிறசுரபியாற்றின்
பான்மைமிகுமுபனதிகள்பலவுண்டாகும்
பண்ணரியதலைச்சுருளியாறொன்றாகுங்
கான்வழியேயாகின்றவங்கியாறுங்
கணக்கற்றவதினேரேமேகதீர்த்தம்
பானிறமாம்பாற்றீர்த்தம்பவளதீர்த்தம்
பரபரப்பாம்பள்ளிமிகுதீர்த்தமொன்றே 182

ஒன்றானசுகதீர்த்தங்கௌரிதீர்த்த
முயர்வானவுக்கிரமாகந்ததீர்த்த
னொன்றானவெண்டீர்த்தந்தைலதீர்த்த
ணாடரியபரசிவனிணாடா தீர்த்தங்
கன்றோடுமாவிருந்தகபிலத்தீர்த்தங்
கணக்கற்றதீர்த்தமவைகழறவொண்ணா
வென்றாலும்வெள்ளுப்புத்தீர்த்தமொன்று
மிருக்கின்றதீர்த்தமவையின்னுங்கேளே 183

மிக்கமிகுமாறுமுகதீர்த்தமொன்று
மேலானரோமமுனிதீர்த்தமொன்றும்
பக்கமுறுஞ்சல்லியமாதீர்த்தமாகும்
பாராதகொங்கணரின்றீர்த்தமாகும்
புக்கவொணாத்தேரையரின்றீர்த்தமொன்று
புண்ணியமாமித்தீர்த்தம்புகலவொண்ணா
ணக்கனவனருளாலேயிதுவுஞ்சொன்னே
ணலமானதீர்த்தமவையின்னுந்தானே 184

தீர்த்தமதுமுன்னூறுமறுபதுந்தான்
றிண்ணமதாயிருக்கின்றதன்மையின்னும்
பார்க்கவொணாதத்தாலேபகரவில்லை
பாரின்மிகுமிம்மலையின்றீர்த்தமியாவும்
பேர்பெரியசுரபியதின்வந்துகூடிப்
பேணாதமூடருக்கும்பேறானல்க
வார்த்தபோலின்னதியுஞ்செல்லுமிக்க
வாகின்றபாண்டிவளணாட்டிற்றானே 185

இன்னதிலைக்கண்டோர்களெல்லோருந்தா
னெண்ணரியபலன்பெற்றுமின்பமாவா
ருன்னுதலேசெய்தோருமுயர்வாராங்கே
வுன்னரியபதமடைவருண்மையீதா
மன்னவரேயிச்சுரபிநதியைக்கண்டு
மாளாததீங்குகளைமிழற்றல்செய்தா
லென்னதவேயானாலுமிற்றுப்போகு
மின்னுமிதன்மகிமைதனையியம்புறேனே 186

அன்னியராமனைவிதனையணைந்தோருந்தா
னையையோவென்றுமவனிதனைக்கண்ணு
லுன்னுவனேலப்பவமுமொழிந்துபோகு
முருசிமிகுமாதரவர்கணவன்றன்னை
யென்னவிவனுகாவென்றேங்கிமற்றோ
ரின்பமுளனுயகரைச்சேர்ந்தோருந்தா
னன்னவருமின்னதியைக்கண்டாலேதா
னுகின்றபாவமெலாமழிந்துபோமே 187

கஞ்சாவுங்கள்ளுமிகக்குடித்துமிக்கக்
காமவெறிகொண்டுமனமகிழ்ந்துனேர
முஞ்சாதனெறிபடித்தவுலுத்தர்சாமு
முயர்வானவின்னதியைக்கண்டாரானு
னஞ்சுமிகப்பாவமெலாமோடிப்போகு
னட்டமிகுங்கோட்சொல்லுமுகப்பேரு
மெஞ்சாதவின்னதியையெண்ணின்மிக்க
வெடுக்கரியபாவமெலாமங்கேபோமோ 188

யோகமிகச்செய்கின்றமனத்தோர்தம்மை
யோகுமிகனன்றுமோவென்றும்பேசிப்
பாகமுடனன்னவரைப்பழித்தல்செய்தோர்
பாங்கானசுரபினதிகண்டாரானு
லேகமெனும்பதமடையுமகம்போலாகு
மென்றுமிகக்கூதனவன்மொழியைக்கேட்டுத்
தேகமிதினியோகமதுமெதுவேயாகுக்
தேர்ந்தமனத்தேசிகனேதெரித்தல்செய்வீர் 189

சீடர்களேயோகமவைபலவேயாகுஞ்
சின்மயமாயாகின்றயோகமொன்றும்
பாடன்மிகுமடயோகமிராசயோகம்
பத்திமிகவாகினறபக்தியோக
ஞடலரிதானலயயோகத்தோடு
னண்புமிகுஞசகயோகமிவையேயின்னுங்
கூடமுள குறிப்பானயோகஞ்சொன்னேன்
குணங்குறியாயோகமிதின்மேலாமியோகம் 190

சின்மயமாயாகின்றயோகந்தானே
சீருடையயோகமெனச்செப்பலாகும்
பன்மொழியாயாகின்றவாக்கியத்திற்
பாரமனதடையாமலொன்றிற்றானே
னின்மலமானிற்பதுவேசிவயோகந்தா
னீதியுளவடயோகமுற்றுமெல்லாங்
கன்மனத்திருகின்றவாசிதன்னைக்
கணடவிடமடக்குவதுகண்டிப்பாக 191

இதைச்சுருக்கமாமொழிவனியல்பாக்கேண்மி
னெணுறுதவேகாந்தனிலையினின்றும்
பதைப்பறவேயாகுமதியோகந்தன்னைப்
பாக்கமுடியறியாதபாமரர்க்குச்
சுதைகிடைப்பதாறுலுங்கிட்டாவிட்டாற்
சும்மாவேவிருப்பார்கள்கன்னற்றேறடு
மதைப்போலமாவாக்யவேகாந்தத்தி
னகமில்லாவதிகாரரடைவாரன்றே 192

ஆகாரமிகச்சுருக்கமாகக்கொண்டு
மன்புடனேபாகியவேகாந்தங்கொண்டும்
பாகானமனத்ததனைப்படுத்திமிக்கப்
பலமானவுறைப்புடனேபரிவாய்நேர்ந்து
மாகாரனிலையறியவிச்சித்தான
வன்னவனும்பூரகமேயாக்கிப்பின்னை
மீகாரகும்பமதிற்சிங்கென்றேதி
மீளாதனிலையதினைமெல்லமெல்ல 193

மேருவரையுச்சியினின் வாசிதன்னை
மீளாதனெறியதினே மீளானின் றும்
பாரானகும்பகந்தான் பரிந்தடக்கிப்
புரிவுடனேரேசகமும்பண்பாய்ச்செய்து
ணீரானசித்தமுடன் வாசினீக்கி
னின் மலமாயிருப்பதுவேயோகமாகும்
பேரானவிதுதானே பெரியோரெல்லாம்
பேணியதோரியோகமெனப்பெரியோர்சொல்வர் 194

என்றுமிகச்சூதனவன்மொழியைக்கேட்டு
மெங்கள்பதியாகின்றவின்புள்ளோனே
னன்றனலமாகின்றதெல்லாங்கேட்டோ
டரியசுரபினதிமகத்துவந்தா
னின்னுமுளதெல்லாமுமியம்பவேண்டு
மென்றவுடன் சூதனவனின்னுங்கொஞ்ச
மென்றுமுளவம்மகிமைகூறுவேனு
னென்றுமிருசீடர்களேயியல்பாக்கேண்மின் 195

இந்தமகாமகிமையுறுஞ்சுரபியாறே
யெங்கெங்குஞ்சென்றவிடமெல்லாமுந்தா
னந்தமுறுமத்தலமாந்தீர்த்தந்தன்னி
னக்கரையிலானமிகுதிதிகள்செய்த
லெந்தமகாதானமுமேயியற்றலாகு
மெல்லாமுஞ்செய்தலுமேயிதனின்மேலா
மெந்தமகக்கேததிரத்துமிதுகிட்டாது
வென்றபினுஞ்சூதனவனியம்புவானே 196

சாதனரேசுரபிமகாமகிமைதன்னைச்
சகசமதாச்சுருக்கிமிகச்சாற்றினேனு
னேதமிகுமுங்களுக்காயிவையெல்லாந்தா
னியம்பினமினியின்னுமகக்கருத்தையென்ற
னீதமுடனென்முன்னேனிகழ்த்துவீரே
னிண்ணமாயின்னுமுறைதானேயுண்டு
பாதகமேயடையுமனம்பழகல்வேண்டும்
பலபலவாயாகின்றவுள்ளநதானே 197

என்றுமிகச்சூதனவனியம்பலோடு
மெண்ணாதனிலையறியவெண்ணமிக்கோ
ரன்னிலையேயடைவுறுமாவிவரின்பாத
மன்புடனேரெல்லோரும்பணிந்துநின்று
முன்றனதுபெருமையினாலியாங்களெல்லா
முத்தமனேபிறவியதைநீக்கல்வேண்டுங்
கன்றிமிகக்காலம்மலாங்கழித்துவிட்டோங்
காரணனேபூரணனேகருணைவாழ்வே 198

இவ்விதமேசீடரவரியம்பலோடு
மெண்ணரியபதமடைந்தசூதன்பின்னு
மொவ்வியமாமனதுடையவுண்மையோரே
வூடுருவுஞானமதுமாவாக்யந்தா
னவ்வுரையேயவுங்களுக்குமருளிச்செய்வே
னாகுவர்களிவரெல்லாமதுவேயாவ
ரெவ்விதமுமிதிலையமில்லையென்று
மியம்பிமிகுஞ்சூதனவனின்னுஞ்சொல்வான் 199

சாதனங்களவதிவரையனுட்டித்தீரோ
சற்குருவைப்பரசிவமாயெண்ணினீரோ
மூதறிஞர்மொழிதன்னின்முறையுமுண்டோ
முன்னவர்களெல்லார்க்குமொழிதலுண்டோ
பாதிமனமுடையீரோயில்லீரோதான்
பார்வைமிகுந்தூலமிதிற்பற்றுண்டாமோ
னூதனமாமூவாசைமனத்திலுண்டோ
னுண்ணறிவாயாய்ந்தமனனுண்மையோரே 200

சாத்திரங்கள்பலகற்றுங்கற்றாலென்னச்
சாந்தமிகுந்தனையறியுமகமில்லார்க்குக்
கோத்திரமுங்குலமதுவுங்கொண்டுபேசிக்
குற்றமுடனுலதனைப்பரிவானோக்கிப்
பாத்திரர்களடைவுறிலோபரிபவப்பேர்
பண்ணுவர்களவர்களெலாங்கற்றுமென்ன
னேத்திரனேரறிவுள்ளவறிவுதன்னை
னிண்மையமாயறிபவரேயறிவோராவர் 201

சகசமிகுஞ்சூதனிவைகழறலோடுஞ்
சாந்தமிகுஞ்சீடர்களுஞ்சாந்தமிக்கப்
பகவானேயடியேங்கள்பரனேனாதா
பார்க்கின்றபூரணமேபதியேயையா
சகவீசப்பதியோனேசாமிமிக்கச்
சார்வுறவேவரிதானசகத்தின்சான்றே
மிகவதுவேயாகியனீர்மொழிந்தசெய்கை
மேதையனேனாங்களனுபவத்தைச்சொல்வோம் 202

நித்தியமாஞ்சாதனங்கணான்குந்தேர்ந்தோ
னின்மலமாஞ்சிவமாகவீசற்கண்டோம்
பத்தியுடன்பெரியோர்கண்முறையுங்கொண்டோம்
பல்லோர்க்குமிதைவெளியேபகர்தலில்லோ
முத்தியிலாப்பாதிமனமிறுத்தோனாங்கண்
முறையேகமொன்றென்றேயெண்ணமிக்கோஞ்
சத்தியமாயாசையதுமூன்றும்விட்டோஞ்
சகனிலையேயெங்களுக்குமருள்வாயந்தோ 203

இவ்விதந்தன்னனுபவத்தைச்சீடர்கூற
வின்னமகாசூதனவனியம்புகின்றா
னவ்விதமேபரனீங்களாகுவீர்க
ளன்புடனேகாந்ததலஞ்சென்றுமெல்லப்
பவ்வியமாயோரொருவரொருவராகப்
பழமறையின்முடிவானவாக்கியத்தைச்
செவ்வைமனமுடையோர்க்குச்செப்பலாவேன்
சேராதமனமுடையசேர்க்கையோரே 204

என்றுமிகச்சூதனவனியம்பிமெல்ல
வேகாந்தக்குகையதினேயேகியாங்கு
னன்றுளமாஞ்சீடர்களையொருவராக
னல்லவரேவாருமெனனாதன்றானுங்
கன்றுமனச்சீடர்களுமன்னோன்பாதங்
கருத்திலுறவட்டாங்கம்பஞ்சாங்கந்தா
னுன்னுதலுமிவையெல்லாஞ்செய்துபின்பு
முட்காருனிலையதினேயேணந்தானே 205

ஒரொருவரொருவருக்குமொன்றேயாக
வுண்மையுறும்ருத்திராக்கனீறும்பூசிப்
பாருருவமானபரமிவர்களாகப்
பண்ணுவனென்றன்னவனும்பரனேயென்றுஞ்
சாரமிகுஞ்சீடர்களேகுருவைக்கண்டுஞ்
சாட்டாங்கமாகநமகரித்தல்வேண்டு
மூரில்லாவதுதானேனீங்களாக
வுண்மையுறவடையுனெறியுரைப்பேனென்றனே 206

வேறு

## மகாவாக்கிய வுபதேசம் பெறல்.

பின்புனற்சூதன்சொல்லும்பேணியனீங்களெல்லா
முன்னகத்துள்ளகுற்றமுறையுடனீக்கியானுஞ்
சொன்னதோரேணந்தன்னிற்சுகாதனத்திருத்தல்செய்வீ
ரென்றனன்சீடரெல்லாமிருந்தனரதுபோலாக 207

இருந்தபின்சீடரெல்லாமெழுந்துதாட்பணிந்துபோற்றி
னிருமலப்பரமேவையேனித்தியப்பரமனுதா
கருமனதறுக்குங்காரேகாணலமெங்களைத்தா
னருவமாமதையேனீங்களாதரத்துடனேராக 208

பரசிவனுங்களாகப்பண்ணுவாயென்றுசீட
ருரமுடனவிலக்கேட்டுமுத்தமச்சூதன்சொல்லும்
பரமிகவடையுமிச்சைபண்டிதர்க்குளதோவிந்தத்
தரமுடைச்சீடறன்னைச்சார்ந்ததுஞ்சகசந்தானே 209

என்றுபின்சூதன்சீடராகியனீவிர்யாரு
மொன்றதாயின்னிலத்தினுறைப்புடனிருப்பீரென்று
சென்றனன்சமாதிதன்னிற்செல்மனதடையச்சூத
னன்றுனரதுவேயாகினுட்டமேமிக்கமெல்ல 210

எழுந்தனன்கடிகைகைபத்தினெழுந்தபின்சீடறன்னை
முழுந்துமாமனத்தினுக்கிமுறையுடனயனதீக்கை
கழிந்தபின்பரிசதீக்கைகண்டனனிதயதீக்கை
னழுவியமனத்தோன்மூன்றுனல்கியபின்னருந்தான் 211

சீடரேகோசமைந்தாஞ்சிறப்புடனென்றுசொல்ல
வேடணையெல்லாமில்லாவின்பரேவிதையேசொல்வீ
ராடரிகிருபையாலேயன்னவர்கூறுகிற்பா
ரூடலேமிகவுமானவுயர்வுறுங்கோசமைந்தே 212

அன்னதுமன்னகோசமாகியபிராணகோச
மென்னதுனானென்றெண்ணுமிசயமாங்கோசம்புந்தி
யன்னதின்கோசமின்னுமறையாருட்கோசமைந்தா
மென்னவர்மொழியச்சூதனியம்புவனியம்பினீர்கள் 213

இயம்பியசரியேயின்னுமிழிவுளவன்னகோச
மயமதுனீரோவன்றோமார்க்கமுமுரைத்தல்செய்வீ
ரயனவனீயேயாகுமத்தனேயன்னகோசம்
பயமிலானாங்களல்லபரம்பரமதுவேனாங்கள் 214

சொன்னவிவ்வன்னகோசஞ்சுருக்கமானாளிற்றனே
யின்னிலங்கனினேமாறுமென்றதானாங்களல்ல
வென்னவர்மொழியக்காற்றுயியம்பியபிராணன்றனே
பன்னருனீரேயாமோபகருவீரென்னச்சீடர் 215

ஆரியமகிமைபெற்றவத்தனின்னருடன்னாலே
பாரிடம்பிராணன்றானுமபாரமாமனத்தினுள்ளே
சேரிடமாகையாலேசீரிதுவன்றேயாகு
மேரிடுமிதுவேயல்லவென்றனர்பின்னுஞ்சூத்ன் 216

உள்ளமாங்கோசனீங்களாகுவதாகுமோபின்
னெள்ளியபுந்திதானுமெதுவதுமியப்புமென்னக்
கள்ளமாமனமுனீத்தகாரணர்கூறுகிற்பா
ருள்ளமாங்கோசனாங்களாகுதலன்றுதானே 217

சுழுத்தியாமதனிற்புந்தியுள்ளமுஞ்செத்தேபோகு
மழுத்தமாமதனாலந்தக்கோசமுமகமேயல்ல
விழுத்தவப்பொருளேயென்னவீரமாஞ்சீடரேனா
ளிழித்தகுமிருளாங்கோசமாரதுமியம்புவீரே 218

இவ்வகைச்சூதன்கூறவியம்புவரீசவென்றே
யெவ்விதமுறையினானுமிதுவிறுதென்றாலுந்தா
னெவ்வியசொருபஞானவுளத்தினாழிவதானுஞ்
செவ்வையாயிதுவுனாங்களல்லவேசெப்புவோமே. 219

சாதனமிகவல்லோர்கள்சகசமாயிவ்வாறோதப்
பாதகக்கோசமைந்தும்பார்த்திலாமனத்தினெண்ணிச்
சூதுடனிற்கின்றாரென்றெண்ணியேசூதன்பின்னு
மாதரத்துடனேயன்னகோசமாமைந்துந்தள்ள 220

மிகவுனோருத்தமானமிகுமதியீந்துமப்பா
லகனிலையியம்புமென்னவன்னவரெல்லோருந்தா
னுகமுடிவளவேயொப்பவொன்றையுங்காணேனென்று
ரகனிலைகாட்டுஞ்சூதனுங்கிசைக்கின்றானந்தோ 221

பாழினுலுயிர்களியாவும்பதைப்புறவிருக்குஞ்செய்கை
யேழுனோர்பூமியல்லதகன்றிடாதென்றுபின்னும்
பாழினைக்கண்டவொன்றைப்பார்த்துநீராகுவீர்க
ளேழினையென்றுசூதனியம்பவுஞ்சீடரெல்லாம் 222

இருந்தனரியோகுதன்னினின்பமானிலையேகாணு
ரருந்தவமுனியேயெங்களகனிலையறியோங்காணே
மிருந்தவனிவரைநோக்கியீசனுலருளப்பட்ட
பருங்கதிவாக்கியத்தைப்பகருவீராங்கேசென்று 223

மெல்லவேமனத்தைக்கொண்டுமிகவதிகம்பீரத்தா
லல்லலேனீக்குமத்தாலடையலாமென்னச்சீட
ரெல்லவரகமுமாங்கேயிசைந்தனவிருத்திதன்னி
னல்லவரெல்லோருந்தானுதனைப்பணிந்துவாழ்த்த 224

ஆதிமாவேதந்தன்னினறிவுறுத்தாகானின்ற
னீதிமாவாக்கியத்தைநிண்ணயர்க்குபதேசித்தா
னோதியேமனத்தானீங்களுயர்பதமடைகுவீர்க .
ணீதியேயென்றுசூதனிகழ்த்துவனின்னுந்தானே 225

முன்னமேகூறுமந்தமுறைமிகுஞ்சுரபிநகங்
கன்றினோடாவேனின்றகாணருஞ்சுகாந்தஞ்சென்று
முன்னதின்மொழியுமிந்தமுறைபெருமருத்தந்தன்னை
முன்னியேமுயன்றுமிக்கமுதலவ்னுகுவீரே 226

சாத்திரச்சூதனிந்தச்சாத்திரமுறையேசொல்ல
னேத்திரம்போலவந்தனித்தனேயையாவிந்தப்
பாத்திரந்தனக்குப்பாலேபவுளமேமுத்தேபொன்னே
கோத்திரச்சுவையேயெங்கள்குன்றமேகொழுந்தேமின்னே 227

ஈறிலிமுனியேயெங்களிறைவனேயிறையேயென்றுங்
கூறியகுணமேகோவைகுணனிதியாகுந்தேவே
யாறியவிடமேயன்னேயத்தனேமுன்னோரெல்லாங்
கூறிடுங்குணியேயெங்கள்குருவெனவமைந்தகோனே 228

மூவரேயாகானின்றமூர்த்தியேமுதல்வமெய்மைத்
தேவனேதெய்வநாதத்தெய்வமேசோதிச்சாமிப்
பாவனேபரனேயென்றும்பரமனேபரமமூர்த்தி
மாவினைநாசஞ்செய்தமன்னனேமன்னுமாதே 229

பவக்கடற்றுளேந்துஞரும்பாழினிலலேவுற்றுய்ந்த
தவத்துடையடியேங்கட்குந்தாரகமானதேவப்
பவக்கடனீந்துமார்க்கம்பரமனேயருளினீரோ
வுவப்புடனுங்களெந்தவுதவியேசெய்வோமென்று 230

இந்தமாவிரக்கந்தன்னோடிவர்களுமியம்பச்சூத
னந்தமாம்பதமேயாகவருளியவாசகியத்தைச்
சொந்தமாயாக்கினீங்காச்சொருபமேயாவதானே
யெந்தனக்குதவியாகுமென்றுபின்சூதன்றானே 231

இயம்புவனினத்தோரானவினிமையாங்கூட்டத்தோரே
பயமிகவாகாவந்தப்பழமையாஞ்சுகாந்தந்தன்னி
னயமுடனுங்கேசென்றுனடியேசமாதிகொள்வீ
ருயருவீரென்றுசூதனுயரதையடைந்தானன்றே 232

சூரனுஞ்சூதனிந்தச்சுருக்கிலேசமாதிகொள்ளப்
பாரமாமனத்தோரெல்லாம்பறந்துனேரானவந்தச்
சாரமாஞ்சுரபிநாகச்சுகாந்துமேயடைந்துமந்தப்
பேருடைச்சோலேதன்னிற்பெத்தமேயானாமே 233

அந்தமாஞ்சோலேதன்னினன்னவரெல்லோருந்தா
னுந்துதற்கோசமைந்தையுயர்ந்தனரகமேயாகப்
பந்தமாம்பவமுந்தீர்ந்துபற்பலநாட்கழித்துச்
சொந்தமாஞ்சோலேயெய்திச்சுகனிலேயடைந்தாரன்றே 234

அடைந்தனரறிவுளோர்களறிவுறுமகமாந்தன்னே
யடைந்தவரிறையேயானாரம்பரச்சிவனேயானு
ருடைந்ததுமாயையெங்கேயோடியததுவேகாணு
ரடைந்தனரவர்கள்பின்னுமாருடலிறந்தமுத்தி 235

காரணவுடனுமிக்கக்காரியவுடலிரண்டும்
பாரிடங்காணுதோடிப்பரம்பரசொருபமாறு
ரூரிடங்காணுமெந்தவுயர்ந்தவர்பெருமையென்னே
சாரிடமிதுவேயாகுஞ்சகசமாஞ்சகத்துளோரே 236

வேறு

வாழி

வாழிமாவரன்விண்ணவன்வாழியே
வாழிவந்தவிநாயகன்வாழியே
வாழிவேலவன்வந்தவன்வாழியே
வாழியம்மைவழியவன்வாழியே 237

வாழிநாரணன்வாழயன்வாழியே
சூழுமாஞ்சுரபிக்கிரிவாழியே
வாழுமாமிகவேதவியாதனும்
பாழிற்சூதப்பானவன்வாழியே 238

இயம்புமாமிகனேம்மிசரின்னமும்
பயமிலாதபரபாறுதருஞ்
சுயம்புவாகுருஞ்சுத்தருஞ்சித்தருங்
நயங்களானகருணையர்பாதமே 239

சுரபிமானதியக்கினிச்சுத்தமா
மரனுமாடுமறுமுகதீர்த்தமுங்
குரவர்யாருங்குடிகொளுமாமிகத்
தரமுமானசுகாந்தமும்வாழியே 240

உலைவிலாதவுவகைமிக்கோர்களுங்
கலைகளாயுங்கருணையர்பாதமுங்
குலைவிலாதகுணமிகுமாமிகத்
தலையினுதன்றனதடிவாழியே 241

ஏழுபூமியடைந்தவரின்னமும்
பாழிலாதபதத்துடனாகிய
வேழுபூமியினெப்புவியோர்களும்
யாழிலாமலவர்களும்வாழியே 242

### வேறு

ஊமையெனும்பெயருடையவியோகர்வாழி
வுத்தமமாமத்துவிதமுடையோர்வாழி
ஞமமெலாங்கற்பனையேயாகுமென்று
ஞடரியபதனுடனலோர்வாழி
காமமெலாநீத்தமதியுடையோர்வாழி
கண்ணனவெந்தனுடைச்சீடர்வாழி
காமயமாநகர்வாழியதினுள்ளோர்கள்
காணரியபதமடைவாரவரும்வாழி 243

ஓம்தத்ஸத்
பிர்மார்ப்பணம்

ஓம்

தத்ஸத்பிரஹ்மணே நம:

# சுரபிக்ஷேத்திரவாசச் சுப்பிரமணிய ஸ்வாமிமீது

# உயிர்வர்க்கமாலை.

---

அந்தரமாஞ் சுரபிமலை யாகின்ற பேரொளியே
யந்தரமே யந்தரமே யார்கின்ற தெள்ளமுதே
யந்தரனே யாகமனே யாவிமிகு மென்னுயிரே
யந்தரமே யிந்தியமே யந்தாதி முருகோனே 1

ஆடரியே யாடகமே யாமிகுமாஞ் சோலைவள
ராடரியே சுரபிமலை யாசயமா யுடையோனே
யாடரியே யென்ஞேனே யன்புமிகும் மாரோனே
யாடரியே யாரன்மிகு மம்பரனே முருகோனே 2

இச்சயமே யென்பரமே யேகாந்த மிகுமலையே
யிச்சைமிகுஞ் சுரபிமலை யிடமான வெம்பரனே
யிச்சகமே யென்னகமே யேறான வென்னகமே
யிச்சுகமே யென்னிலையே யென்னுனை முருகோனே 3

ஈமகனே ஈமகனே யின்பமிகுஞ் சுரபிமலை
யீமதியே யின்னிசையே யின்னினியே யினியோனே
யீமகனே யிந்திரமே யெழுனூறுமா வறுமுகனே
யீமிகுமா வெல்லோனே யினபதியே முருகோனே 4

உக்கிரமா மரபிமிகு முருமிகுமா மலையோனே
வுக்கிரனு மருமகனே வுள்ளோனே யில்லோனே
வுக்கிரனே வூரகனே வூர்திமயில் வாகனனே
வுக்கிரமு மல்லாத வுத்தமனே முருகோனே 5

ஊனகமே வுள்ளிடமே வுருசிமிகுந் தொம்பதமே
வூனகமே வுள்ளளவே வுள்ளாத தத்பதமே
வூனமிலா வுருவோனே வுத்தமமே வொள்ளியமே
வூனமிலா னாயகனே வுன்னாத முருகோனே 6

என்னுருவே யென்னருவே யென்கதியே யென்பேறே
யென்னயனே யெற்றேயென் யிப்பிறவி தீர்ப்பேனோ
வென்றுணையே யென்னிலையே யேகாத யின்னலமே
யென்குருவே யென்னருகா வென்சுருளி முருகோனே 7

ஏனிறைவே யென்சுகமே யெண்ணாத வாமலையே
யேனல்முனங் கார்த்தவளி னென்னாத வெம்பரனே
யேனமுக வெம்பரனின் னின்பமிகும் மருகாமே
யேனமெலா மோட்டுசிவ வென்பதியே முருகோனே 8

ஐயரசே யாருருவே யாராத வந்தமுதே
யையுருவே யையருவே யையனெனு மையாவே
யையரனே யைந்தருவே யையமிகு மையாவே
யையகமே யன்புருவே யையனெனு முருகோனே 9

ஒள்ளொளியே வொண்ணலமே வுன்மனமே யென்மனமே
வொள்ளியர்க ளுள்ளகமே வுள்ளாத தெள்ளமுதே
ஒள்ளியனே வுத்தமனே வொள்ளியர்க ளள்ளோனே
ஒள்ளுருவா வாமலையி னுன்னுளுறுமா முருகோனே 10

ஓஓஓ முருகோனே வுற்றவரி மருகோனே
வோகார மானோனே வுள்ளோனே யில்லோனே
ஓஓவென் சுந்தரனே வுண்ணிலையே தாரகமே
வோஓவென் னுத்தமனே வூதியமா முருகோனே 11

ஔவுருவே யவ்வழியே வாரில்லா வந்தமுதே
ஔவையுருவானோனே யாகனிலை யானோனீ
ஔருவசே யன்குருவே யந்தமிகும் மென்னமுதே
ஔவுருவே வென்னிலையே யானமிகு முருகோனே 12

ஓம் தத்ஸத்
பிர்ம்மார்ப்பணம்

ஓம்

# விவேகஷட்கம்.

அனித்தியபூதத்தேகனுனன்று இந்தியத்தரங்கனுனன்று
நனித்தவாங்காரபிராணவர்க்கங்களன்று நற்புந்தியுமன்று
தொனித்திடுந்தாரமனைசெல்வங்களுக்குந் தூரமாஞ்சாக்ஷியா
னென்றுந்,தனித்துநித்தியமாய்ப்பிரத்தியகான்மாவாங்கடவுட்
பொருளதாஞ்சிவோகம் 1

உற்பவன்விருத்தனன்றுநானோர்கா லத்தினுநசிப்பவனன்று
வற்பமாந்தேககாரியமான வ்வைவெலாமகங்கரத்தல்லாற்
றற்பதவடிவாஞ்சின்மயமானவெனக்கிலை சகளனிட்களமா
யெப்புறத்தேனுமெல்லையற்றிருக்கு மின்பசிற்சொருபமாஞ்
சிவோகம் 2

சத்தியஞானனந்தமாம்பிரமத் துதித்திடுமாயையிற்சனித்த, மெ
த்துமிவ்வுலகஞ்சேதனத்திடையே நசிக்குமதேதெனவிளம்பிற்
றத்துசொப்பனமுஞ்சுழுத்தியிலசத்தாந் தன்மைபோற்சத்திலா
திருக்குஞ், சுத்தபூரணமாய்னித்தியமாகித் துலங்கியசொருபமா
ஞ்சிவோகம் 3

பழுதைதன்னிடத்திற் பாம்புதோன்றுவபோற் பரப்பிரமத்தி
டையதனிற், கழிதருமஞ்ஞானத்தினாற் சீவனுதித்திடக்கண்டவ
னொருவன், பழுதையென்றதனாற்சர்ப்பமோகமும்போய்ப பழு
தையாய்க்கண்டதுபோல, வழிவிதேசிகனார்சீவனீயன்றெனன்ற
றைந்திடவாகினேன்சிவோகம் 4

எமக்குமன்னியமாமுலகமொன்றில்லை யெவ்வுலகங்களெம்மிட
த்திற்,சமித்துவுற்பவமாதலான்மாமாயை வடிவமதேதெனிற்சா
ற்ற, வமைத்தகண்ணுடிவிம்பமானிழல்போ லடங்கியெம்மிடத்
தினில்விளங்குந், தமத்துவமில்லாச்சச்சிதானந்ததற்பதவிமல
மாஞ்சிவோகம். 5

சாக்கிரமதனிலிந்திரியங்கடமக்குமேற்சாக்ஷியாஞ்சிவோகந்தேக்
குசொப்பனத்தினுலகரூபமதாய்ச் செய்மனச்சாக்ஷியாஞ்சிவோ
கம், தாக்கியசித்தநாசமாஞ்சுழுத்தியவத்தையிற் சாக்ஷியா
ஞ்சிவோகம் நீக்கமில்துரியானந்தமாஞ்சர்வ ஸின்மலசாக்ஷியா
ஞ்சிவோகம். 6

ஓம்தத்ஸத்

ஓம்

ஓம் தத்ஸத் பிர்ஹ்மணே நம:

# சுவானுபவ விளக்கம்.

இஃது

தேவார நகரம்

ஸ்ரீ சுத்தாத் தொய்த வேதாந்தாசாரியார்

ஸ்ரீலஸ்ரீ அருட்கவி

ஸ்ரீநிவாஸய்யங்கார்

ஸ்வாமிகளாலருளிச்செய்தது.

## சாற்றுக்கவிகள்.

இந்நூலாசிரியர் மாணாக்கர் மகா-ள-ள-ஸ்ரீ
குச்சனூர் பாலயஞ்செட்டியாரவர்களாலியற்றியது.

சேடனவனாலுமெண்ணவொண்ணாச்
சிறப்பானபிரமனவன்சிருட்டிசெய்த
னாடன்மிகுமிவ்வுலகிற்றெக்கணத்தி
னன்மையுறுங்கூடலதுனலமாமிக்கப்
பாடலுறுனால்வர்களாமத்தலத்திற்
பாங்கானகுடதிசையிற்பான்மைமிக்கத்
தேடரியதேவாரநகரினுள்ள
திவ்வியமாமந்தணரின்குலமுமென்னே 1

வேதியரின்குலமதினுமேன்மைமிக்க
விண்ணவனானாரணனினினத்தோரான
சாதிமிகுஞ்சகசமுறுமிரெங்கனாத
சாமியவனாமமுறுஞ்சாந்தமிக்கோன்
கோதிலனாங் குணமிகனாங்குறியுமிக்கக்
கொண்டவனாந்தன்னிலையேகொண்டமிக்கோ
னாதிமுனியானவர்போலவருமிக்க
வன்புளரேயாகுமவரருமைதானே 2

அன்னவரினருமைமிகுமைந்தனானே
யந்தமிகுமெந்தனாறுமாரியன்றா
னுன்னவரிதாகுமவன்பெருமைமிக்க
வூரில்லானிலையதினேவூருங்கொண்டோ
னென்னவனாராருருவமானோனென்ற
னின்பமிலாவிப்பவமுமிற்றுப்போகக்
கன்றினத்தைத்தேடிவருமாவேபோலக்
காணவெனைக்கண்டுமகவாக்கியத்தால் 3

சேராதவிடமதுவாங்கோசந்தாண்டிச்
செப்புதற்குமொண்ணாதசெய்கைதன்னை
யாராலுமளவிடுதற்கரிதேயான
வன்னிலையேயென்றனக்குமருளுனாதன்
பாரானமூவாசைப்பற்றறுத்தோன்
பண்புமிகும்பழமையுளபடியேசெய்யுங்
கோராதனிலையறியக்கொண்டுகொள்கை
கொண்டுமிகவானவனாங்குணங்களென்னே 4

இத்தகையனென் ஞசானின்பமிக்கு
மினிமையுறுஞ்சீனிவாசப்பேர்பெற்ற
வத்தன்வனெல்லார்க்குமருளுஞத
னருளுருவேயர்னமிகுமன்ஞேனுண்மை
சுத்தனில்லையாஞ்சகசனிட்டைபெற்றுஞ்
சுவானுபவமாமொழிந்தானிந்தனூலை
யுத்தமராமென்ஞேர்க்குமுதவியாக
வுருசிமிகுமென்ஞசானுதவினஞே 5

இந்நூலாசிரியர் மாணுக்கர் மகா-ா-ா-ஸ்ரீ
காமயமாநகரம் நடராமு கவண்டரவர்களாலியற்றியது.

காண்பரியபேரொளியேதானேயான
காரணஞமென்ஞசானியம்புமிந்தச்
சேனுடையசுபாவமுறுமிந்தனூலைச்
செப்பினஞலனுபூதிவாய்மையானே
நானுடையோரறியாதவிந்தனூலி
னன்மையுறும்பேறுடையனலமாமிக்கக்
கானுறவேயகமுள்ளோர்காணத்தானுங்
காணுதசீனிவாசப்பேரோனே 1

இந்நூலாசிரியர் மாணுக்கர் மகா-ா-ா-ஸ்ரீ காமயமாநகரம்
கிராமமுனிசீப் கிருஷ்ணசாமி கவண்டரவர்களாலியற்றியது.

கழனினிகழ்கமுகுமிகுகமலமுறுகயிலைமலைனிகரானகயவுமிகு
மா, கழிவுமுறுகனகசபைகனகமிகுதேவாரபுரியினுறுகனகமு
மான, கழிவுறுமதப்பரமகாருண்யகாரணக்கடவுளேயானவவ
ஞர், கழிவுமிலதென்குருவுமானசுககாபாலியானமிகுமான
விவனே 1

தன்னனுபவப்பெருமையாகுசுவவானுபவமுற்றமிகுமாவத
னிஞ, னென்னவர்களிப்பெரியனூலதனினுள்ளவருமைக்குண
மகத்திஞகத், தன்னதனதாகின்றசீனிவாசப்பெரியதயவுமிகு
மென்பதியிஞ, னுன்னவரிதானமிகுமானூலையெம்மஞேர்க்கு
ண்மையாயருளிஞனே 2

இந்நூலாசிரியர் மாணாக்கர் காமயமாநகரம் மகா-ா-ா-ஸ்ரீ
பொம்மய கவண்டரவர்களாலியற்றியது.

கானனீரெனக்கண்டபிரபஞ்ச
மானியாகிமருண்டவடியனை
ஞானியாக்கியநற்குருவாம்பர
சீனிவாசகற்சேவடிசென்னியே 1

அளவிடற்கரிய வயனவனாலே
பளபளப்பான பார்படைத்தனாற்
பார்மிகுமீதிற் பழமைமிக்கார்ந்த
நீர்வளமிக்கு னித்தியமான
பரதமாகண்டம் பண்டிதர்சூழ
வுரமுடனுற்ற வுள்ளமறக்குந்
தெக்கணமதனிற் றிவ்வியக்கூட
லொக்குமாதனி னுற்றதெக்கணனே
ராருமகனிலை யன்னவராரு
மூருடையவனா ருற்றநல்லூரே
தேவைமாநகரந் தேசுறும்மிக்க
வாவலினுற்ற வந்தமாநகரி
னாரியர்குலமே யாகுமாமிந்தத்
தேரிடூரிற் றெய்வனாயகமா
யுற்றவென்னாசா னுள்ளூறுமிக்கப்
பெற்றவன்பேரே பேணுவம்ரெங்க
அய்யங்காரா மப்பெயருடையோ
ருய்யும்பேரா முத்தமமான
வன்னவறனய ராகியவென்ற
னன்னிலையறியு னலமிகுமாசா
னாகியவன்றோ னன்னிலையதனைப்
பாகியமாகப் பார்ப்பவர்யாரே
சுவானுபூதியாஞ் சுத்தவன்னிலையை
யவாமிகவாக வற்றடைந்தனனா
லெந்தனனாக மெட்டுறுவகையே
வந்தவனருமை யானிசைப்பனாற்
சமாதினான்காச் சாற்றுவரறிஞ
ருவாவதினுற்ற வுண்மைமிக்கான
நிருவிகற்பத்தி னிலையுறிந்தனனா
னருமையையானு மறையலுமாமோ

அ

வன்னவரென்றன் னாரியனாகு
முன்னவனாலே மோகமுற்றார்ந்த
தன்னிலையாகுந் தானாநிலையை
முன்னிலையாக முன்னுளோரறிய
மானியாமன்ன மகிமைமிக்கார்ந்த
சீனிவாசப்பேற் சீருடையவனாற்
றன்னனுபவத்தைத் தானுரைத்தனனா
லின்னனன்னாறா னின்னிலைதானே

இந்நூலாசிரியர் மாணாக்கர் காமயமாநகரம் மகா-௱-௱-ஸ்ரீ
சு. கைலாசக்கவண்டரவர்களாலியற்றியது.

காரியச்சகனீயல்லகண்டதுனீயேயல்ல
னீரிடுமதுனீயல்லனித்தியமாயையல்ல
காரியங்கடந்தமோனகாரணனீயேயென்று
மாரிடமருளிச்செய்தோனன்னவனென்னவென்னே 1

அன்னவன்றேவாரத்தினருளுருவாகவந்தோ
னென்னவன்பெருமைசெப்பவியலுமோவடியனாலுஞ்
சொன்னதேசொல்லுவேனானாரியனெனக்குஞ்சுத்த
முன்னவனாலேயென்றன்மூரியாம்பவமுமற்றேன் 2

சுவவனுபூதிபெற்றசுந்தரச்சுகுணயோக
னவனருளாகவந்தவருளுறும்வாக்கியத்தா
லிவணினேயெம்மனோர்க்காயியம்பினனிந்தனூலைப்
பவமகற்சீனிவாசப்பரமனாமென்றனாசான் 3

இந்நூலாசிரியர் மாணாக்கர் காமயமாநகரம் மகா-௱-௱-ஸ்ரீ
இராமசாமி மணியகாரரவர்களாலியற்றியது.

செய்யமாமலர்த்தேவிதிருவுறை
யையனாரணனன்புருவாமிகப்
பையவேதிகழாகும்பரபர
வையனென்றனனாரியநாதனே 1

சுத்தயோகச்சுகவகரூபனா
னெத்தலத்தினுமுற்றவயோகனா
னுத்தமத்தினுமுத்தமமாமிகப்
பத்தியாணபரமதுவாகினேன் 2

என்னையின்றுடனாக்கியவின்னவ
னன்னிலையறிஞதனிவனென
வன்னவன்னுருவாகினனாதலா
லுன்னலாகுவதுன்னலுமாகுமோ 3

இத்தகைச்சுவமான விவனென
தத்தனாமவராரருளான்மிகச்
சுத்தமாகவருளினன்சீனிவா
சத்தனாமவனாருறுநாதனே 4

இந்நூலாசிரியர் மாணாக்கர் காமயமாநகரம் மகா-ள-ள-ஸ்ரீ
நா. துரைராஜுநாயுடு அவர்களாலியற்றியது.

செப்புதற்கொண்ணாதானவளனுறுந்தேவாரத்தி
னொப்பவேவாழுமென்றனுயருறுமடிகடானே
மைப்படியடியேங்கட்காய்மதியனுபூதினூலைச்
செப்பினன்சீனிவாசச்செல்வனேயானமிக்கோன் 1

இந்நூலாசிரியர்மாணாக்கர் காமயமாநகரம் மகா-ள-ள-ஸ்ரீ
ரா. காமயசாமிக்கவண்டரவர்களாலியற்றியது.

அளகைமாநகரின்மிக்கவழகுறுந்தேவாரத்தி
னுளவெனதாசான்மிக்கவுத்தமச்சீனிவாச
னளவிலாவிந்தனூலையருளினனெம்மனோர்க்கா
யுளவனுபூதிபெற்றவுண்மையாமுறுதியோனே 1

இந்நூலாசிரியர் மாணாக்கர் காமயமாநகரம் மகா-ள-ள-ஸ்ரீ
சண்முகவேலுக்கவண்டரவர்களாலியற்றியது.

சுந்தரமாந்தேவாரப்பதியின்வாழுஞ்
சுகிர்தமுறுமென்னடிகளியம்புமிந்த
வந்தரமாஞ்சுவானுபவனாலேதன்னி
னனுபவத்தையாக்கினனானிந்தனூலி
னொந்துவழியறியார்க்குனுண்மைமிக்க
னுவலவரும்பேறுடையவென்றனையன்
சிந்துகலைநிறைவாகுஞ்சீனிவாசச்
சீர்பெரியபெயருடையோனருளிற்றானே 1

இந்நூலாசிரியர் மாணாக்கர் காமயமாநகரம் மகா-ா-ா-ஸ்ரீ
மு. சண்முகவேலுசெட்டியாரவர்களாலியற்றது.

வேதமெலாமாய்ந்தறிந்துமென்றனக்குவேதவொளி
யாகுமகனீயேயென்று, போதமுறுமார்க்கமதைப்புகட்டி
யென்றன்போகவொணுப்பவமோட்டும்புனிதவாசா,
ஞேதவொணுப்பெருமையுறுந்தேவாரத்தினுள்ளமுறு
மனுபூதிபெற்றவன்ஞே, னீதியுறுஞ்சீனிவாசப்
பேர்பெற்றனிண்ணயனுலருளினனுனிந்தனூலை 1

இந்நூலாசிரியர் மாணாக்கர் காமயமாநகரம் மகா-ா-ா-ஸ்ரீ
பொ. இராமசாமிக்கவண்டரவர்களாலியற்றியது.

சுந்தரமாந்தேவாரநகரின்வாழுஞ்
சுகுணமுறுமென்னுசான்சீனிவாச
னந்தரமர்ம்பதமடைந்தவமைவுமிக்கோ
னுருருவாமன்ஞேனுனிந்தனூலைச்
சந்தமுடனுலகோர்க்குத்தமிழ்ப்பாவாகச்
சாதிமுறையற்றவனுபோகந்தன்னை
யிந்தமிகுமானூலிலுக்கினுனென்
னினிமையுறுமாரியனுமின்பத்தோனே 1

இந்நூலாசிரியர் மாணாக்கர் கம்பமாநகரம் மகா-ா-ா-ஸ்ரீ
கதரியகவண்டரவர்களாலியற்றியது

அவாமுதலைங்குற்றமெலாமறவேனீக்கி
யாருருவமாகமிகுஞ்சீவரெல்லா
முவாமதிபோலுற்றவுறுந்தேவாரத்தி
னுண்மையறியென்றனுறுமாசான்மிக்கத்
தவாமனத்தோரதுவாகத்தனிமையுற்ற
தாழ்வில்லாவனுபூதினிலையேபெற்றுச்
சுவானுபவமாமொழிந்தானிந்தனூலைச்
சூத்திரமாஞ்சீனிவாசப்பேரோனே 1

இந்நூலாசிரியர் மாணாக்கர் எரசக்கனுயக்கனூர் மகா-ா-ா-ஸ்ரீ
வீரராகவநாயுடு அவர்களாலியற்றியது.

தேராதவகத்துடையதனியனை
திகம்பரனைத்திகண்மணியாயாகுமென்றன்

னேரானவாரியனானிகழ்த்துமிந்த
னித்தியமாஞ்சுவானுபவனூலேதென்னி
னாராதவகத்துடையோரறிஞராக
வாரலுறுமின்னூலையன்புமிக்கப்
பேரானபேறுடையபிரமமான
பிரபலமாஞ்சீனிவாசாரியன்னே 1

இந்நூலாசிரியர் மாணாக்கர் காமயமாநகரம் மகா-ள-ள-ஸ்ரீ
சு. வீறு பொம்மயகவண்டரவர்களாலியற்றியது.

மந்தமுறுமனத்துடையோர்மகத்தானப்தமுறவே
யெந்தனுயராசானேயின்பமிகுந்தேவார
வந்தநகரார்சீனிவாசனெனுமன்னோனே
யிந்தமிகுமாநூலை யென்னோர்க்காயாக்கினனே 1

இந்நூலாசிரியர் மாணாக்கர் காமயமாநகரம் மகா-ள-ள-ஸ்ரீ
வீறுசிக்குக்கவண்டரவர்களாலியற்றியது

அழகுமிகு மம்புவியி னாகின்ற தேவார
மழகுறுமா மானகரீ னாருருவா மென்னாசா
னழகுறவே யானசுவ வனுபூதி யன்னிலையை
யிழிவுடைய வென்னோர்க்கா யியம்பினனா லின்னூலை 1

சர்வஞ்சின்மயம்.

ஓம்

இந்நூலாசிரியர் மாணாக்கர் காமயமாநகரம் ஸ்ரீமத்

சென்னையஸ்வாமிகளாலியற்றிய

# முகவுரை.

ஓ சாதனசதுட்டயசம்பத்தியடைந்த சிஞ்ஞாசுக்களே!

சகசமான நான், உங்களுக்குக் கூறுவதியாதெனின் நம்மனோர் இம்மாடனுவாக்கையைப்பெற்றதினாலாம்பயன் யாதெனினோவெனில் சர்வதுக்கநிவிர்த்தி பரமானந்தப்பிராப்தியான பரமமோக்ஷத்தைப்பெறலேயாம் இபபயனலது நம்மனோர்க்குப்பவனாசமாகாதெனல் சுருதிசம்மதமுமான்றோரபிப்பிராயமுமாம். ஆயினும், பேரறிவற்றபலர்கூறுவதியாதெனினோவெனின் மேற்கூறிய சர்வதுக்கநிவிர்த்தி பரமானந்தப்பிராப்தியானபரமமோக்ஷமிவ்வுலகவின்பமேயாமெனக்கூறுவர்: அத்தகையாளர்க்கீதுரைப்பாம். ஏ! காமர்களே நீங்களுரைத்தது முறையேயாயினும், நீங்களிப்போதுரைத்த உலகவின்பமோர் காலத்துளதோ மற்றெக்காலத்துமுளதோவெனக்கூறின், அச்சிற்றறிவாளன். அவ்விடைக்குத்தகுவிடைகூறாதவிழிப்பன். அன்னவர்களறியாமையதுவேயாம். இது நிற்க.

முற்கூறிய சர்வதுக்கநிவிர்த்தி பரமானந்தப்பிராப்தியான பரமுத்தியை எவ்விதச்சாதனத்தானடைவுறலாமெனினோ, அந்தரங்க சிரவண மனன நிதித்தியாசனமுயற்சியினாலும், பிரபலசுருதிவேதாந்தவிசாரத்தாலும்,சுபவாதனைமுயற்சியினாலும், அடைகுறலாமிதுவே, வேதாந்தசித்தாந்தங்களியாவும் பெரியோர்களியாவுங்கூறுஞ்சாதனமேயாம்: மேற்கூறிய சாதனமெல்லாவற்றினும் பிரபலசுருதிவேதாந்தவிசாரமொன்றே மிக்மேன்மையுற்றதாமேனெனின் சுருதிகாரணமொன்றினாலே ஸ்ரீ பரம சற்குருமூர்த்தியொருவருளரெனவுமன்னவ ரிலக்கணமித்தகைத்தெனவுமன்னவரையடையுமார்க்கமும் முத்தியொன்றிருக்கின்றதெனவுங்கூறுமாதிகாரணக்குருவாயிருத்தலின் இதுவேமிக்கமேன்மையுற்றதெனக்கூறியதாம். இதுபற்றியே, ஞானவாசிட்டத்தில் ஆசான்மொழியாநூற்பொருளாலன்றிப்பெறவு

மரிதாகுமெனக்கூறியுளது. மேற்கூறுஞ்சுருதி குருவிவர்களி னுதவியெதுவரையவசியம்வேண்டுமெனிளுேவெனின், நான்கா ம்பூமியான துரியநிலைபரியந்தமவசியமன்னோர்களினுதவிவேண் டியதேயாம். பின் அச்சுருதிகுருவிவர்களைப்பின்பற்ருது கைவி டுதலாமோவெனிற் செய்நன்றிகொன்றதோடமுண்டாமாதலிற் பின்னுமாசிரியனையுஞ்சுருதியையும்பின்பற்றலொக்குமாம்.

இத்தகைய சுருதியாவதேதெனின் ருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னுமின்னுன்குமேயாம். இன்னுன்குசுருதிகளி னந்தரங்கவபிப்பிராயமறியவல்லமையில்லா மந்தமதியோர்கட் காக ஸ்ரீ பரமகாருண்யபரராகிய ஜகத்குரு ஆதி சங்கராசாரி யஸ்வாமிகளும் ஸ்ரீமத் இராமாநுஜாசாரியஸ்வாமிகளும் ஸ்ரீமத் மத்துவாசாரியஸ்வாமிகளும் ஆகிய இம்மூவருமுறையே.

அத்துவித விசிட்டாத்துவித துவித மிம்மூவிதமாகப்பாடி யஞ்செய்துளார். அப்பாடியமூன்றனுள் ஸ்ரீமத் ஆதிசங்கரகுர வராலருளிச்செய்பாடியம் ஞானயோகர்களுக்கும்ஸ்ரீமத்இராமா னுஜமத்வாதிபாடியங்கண் முறையே உபாசக கருமயோகர்களு குமுதவியாம். ஏனெனின் ஞானயோகமோ அபேதபாவமாக உள்ளது. உபாசககருமங்களோ பேதபாவமாகவுடையது. இ ம்முறையே முற்கூறுமுன்னவர் அபேதமாகப்பாடியஞ்செய்து ளார். பிற்கூறுமுன்னவர்களோ பேதபாவமாகப்பாடியஞ்செய் துளர்கள். ஆயினும் இம்மூன்றுபாடியமுமூன்றதிகாரிகட்குத வியாம். பின்னும் விசிட்டாத்துவிதபாடியங்கூறும்படியனுட்டி த்தலத்துவிதவடைவின்சாதனமாம். அவையெப்படியெனிளுே விசிட்டாத்துவித பாடியகர்த்தாவினந்தரங்கமகாஞன ஸ்ரீ நம் மாழ்வார் ஸ்வாமிகளுமத்துவிதமுறைமையான சின்முத்திரை தரித்துத்தானனுபவித்தவனுபவத்தை அன்னவராலருளப்பட்ட திருவாய்மொழிப்பாசுரத்திற்கூறியுளார். அதாவது நன்ருய் ஞானங்கடந்துபோய்நல்லிந்திரியம்எல்லாநீத்து ஒன்ருய்க்கிட ந்தஅரும்பெரும்பாழ்உலப்பிலதனை உணர்ந்துணர்ந்து சென்று ஆங்குஇன்பதுன்பங்கள்செற்றுக்களைந்துபசையற்ருல் அன்றே அப்போதேவீடுஅதுவேவீடுவீடாமே. இதுவாம் இதன் பொரு ள் உண்மையாய் இவ்வுலகவிடயஇந்தியஞானங்கடந்து அதாவது அன்னமய பிராணமயகோசந்தாண்டி பின் நல்லிந்திரியமான மனோமய விஞ்ஞானமய கோசங்களுந்தாண்டி இன்னுன்குகோ சங்களுக்குங்காரணமான ஆனந்தமயகோசமுந்தாண்டி அப்பா லஞ்ஞானவாதனைவடிவவியாபகசூனியமுந்தள்ளி, ஆங்குதயமாகி

ற பிரமாகாரவிருத்தியின்விரோதியாகநின்ற லய விட்சேப கஷாய ரசாஸ்வாதமுதலிய பிரதிபந்தங்களாற்சுகதுக்கங்களைய டைந்து பின்அச்சுகதுக்கனீங்குமிடத்துண்டாகும் சவ்விகற்பநி லையடைந்து அப்பால் திரிபுடிரூபத்துவைதமிறந்த ஸ்ரீ பரம சாக்ஷாத்காரவடிவமான விகற்பமற்றநிலையடைவதெதுவோ அதுவேவீடாம் பரமகைவல்லியமாம். இது நிற்க, பின்னும் ஸ்ரீ தாயுமானவஸ்வாமிகளும் ஓதரியதுவிதமே அத்துவிதமார்க் கத்தை உண்டுபண்ணுமார்க்கமாகும் எனக்கூறியுளார். இம்முறை யே விசிட்டாத்துவிதமுடிபாம் பின்னும்முற்கூறிய சங்கரபாடி யங்கொண்டுமதன்பயனறியவுறாதமந்தமதியோர்கட்காக ஞான வாசிட்டம் ஸ்ரீபகவற்கீதை பிரமசூத்திரம் வேதாந்தசூடாமணி விசாரசாகரம் கைவல்லியநவநீதம் முதலியநூற்கள் தமிழ்வடிவ மாகவெளிவந்துள்ளன இன்னூற்களுமறியவல்லமையில்லா மந் தமதியோர்களின்மீது கருணைகூர்ந்துதன் சுவானுபூதினருளறி வும் சாமர்த்தியயுக்தியறிவுங்கூடி யிந்தச்சுவானுபவவிளக்கமெ ன்றுமின்னூல் என் பவமிக்கார்ந்தபடையையறுத்துப்பரநீ யெனக்காட்டும் பரமகாருண்யராய்த் தேவாரநகரத்தின்கணெ ழுந்தருளியிராநின்ற என் ஆசாரியரான ஸ்ரீமத் சுத்தாத்தொ ய்தவேதாந்தாசாரியார் ஸ்ரீலஸ்ரீ அருட்கவி ஸ்ரீனிவாஸய்யங் கார்ஸ்வாமிகளவர்களாலியற்றியருளப்பட்டதைச் சீடர்களாகிய யாங்கள்வற்புறுத்தியவலியினாலின்னூலச்சிடலாயிற்று. இதுவு மென்னாசானருளேயாம்.

ஓம்தத்ஸத்
பிர்ம்மார்ப்பணம்.

ஓம்

ஓம் தத்ஸத் பிரஹ்மணே நம;

# சுவானுபவ விளக்கம்.

---

## மங்கலம்

உலகுமிசையாதியினுத்தமத்தெய்வமொன்றுளதாகுமத்
தெய்வமியாதாகுமோ
வுவணகேதனனரன்னயன்முதலைவருமோரொன்றுசெய
ல்களாலுருவராயுந்
தலமிசைச்சமயங்களாறாகுமுட்சமயமத்தெய்வமாகியரு
ளாகிநின்றுந்
தத்துவமிகுத்தமதிசோதிலிங்கான்மரூபத்தினான்மறை
படாத்துய்யதாயும்
நலமிகும்மெத்தெய்வனீரினுங்காலினுனாடரியவானத்தி
னம்பனிடனு
னண்ணுகுருதந்தையும்மாதாவுமாகியுனாமமிகுசகமு
ழுதுமொருவனாயுஞ்
சலனமறுதற்பரசொரூபத்தினான்மிகுஞ்சாந்தபதமாகு
மிகுமோனனிலையாஞ்
சகசனீயருளுமதிகொண்டியானமனவணக்கம்புரிந்தரு
ளுநற்தேவதேவே 1

பாதமுத்தியடையவிப்பார்மிசை
வேதபாடியஞ்செய்தருள்விண்ணவ
னோதுநல்லுரையொப்பியவோரவன்
பாதராயணன்பங்கயபாதமே 2

மறையறைமுதலைமறையவாறியமன்னுமாரணமிகுநான்
கா, யறைமுறைவேதசூத்திரங்கீதையறைந்தவெம்மண்ணலா
மைய,மறைமுதன்மூவரெட்டொணாமணியேமன்னுபூரணமேயா
க்கு, மறைவிடனீயாயானமாதவனேமானனேவாதராயணனே 3

எங்குமாயாவுமாகியிசைந்தகேவலமாய்த்தானே
தங்குதன்மாயையானேதரணியினுதித்துப்பேத
வங்கமாந்துவிதமெல்லாமறுத்தத்துவிதத்தைநாட்டுஞ்
சங்கரபகவற்பாதன்றாளிணைதலைமேற்கொள்வாம் 4

சுத்தமாம்பரமாமிகுசோதியா
யத்தனாயெனையாக்கியவப்பனா
முத்தனாயெனைமுத்தனுமாக்கிடு
நித்தியானந்தநாதனைநாடுவாம் 5

## நூல்

ஆரணமுடிவாமுத்தியறிபொணாச்சீவரெய்தக்
காரணங்கன்மமாகுங்கன்மமும்பற்றிலாம
னீரணிச்சிவனோடைவர்நின்மலபத்தனாயுஞ்
சார்தலற்றக்கன்மங்கள்சாற்றியவாறேசெய்து 6

மலமுடன்சலனமற்றுமற்றுபாசனையினானுந்
தலமிதிற்சாதனங்கணான்குடன்றரித்துளின்றோ
னுலைவிலாக்குருவைக்கிட்டியுத்தமதேசிகாநின்
னலமிகுபெருமையாலேநாடினேனின்னையின்றே 7

என்றெனச்சீடனப்போதிருபதம்வணங்கியெந்தாய்
கன்றியபவத்தில்யானேகலக்கமுற்றுலைந்தேனந்தோ
வின்றெனக்கப்பவங்களிறியவேயுபாயந்தன்னை
நன்றருளருகாவின்றேநல்குவீருயர்வாஞானம் 8

இவ்விதஞ்சீடன்கூறவியலுறுமாசான்பின்னை
யெவ்விதமனத்தோனின்னோனென்பதையுணருமாறுங்
கவ்வியவிதயத்தோருங்காணொணாப்பரமஞான
மெவ்விதமுன்றனக்குமிசைப்பதுமெளிதோவெல்லோ 9

புங்கவனிவ்வாறோதப்புண்ணியச்சீடன்சொல்வா
னுங்களைப்போலவையரோதொணாப்போதமுண்டோ
வெங்களைப்போலவஞ்ஞானத்தினினாறுற்றோரைப்
பொங்கலாரான்மஞானம்போதனேயீதலொக்கும் 10

யாதுமொன்றறியாவென்னையாவதும்பரமமான
தீதறுமகத்தாஞானந்தெளிவுறத்தெரியச்சொல்வீ
ராதரவாறுமில்லையத்தனேயரனேயென்னோ
ரோதவும்படுமோநின்பேருத்தமவருள்வீராற்றல் 11

நூன்முறைமுடியோறைன்றோனுவலருவாய்மைகேட்டு
நான்மறைமுடிவுணர்ந்தநல்லவனகத்திலுன்னுந்
தானெனுமகங்காரக்கார்தள்ளிடுமனத்தோனாகுந்
தூனெறிமுறைதப்பாமற்றுவள்கிலாமனத்தோனின்றோன் 12

என்றெனவிவ்வாரையனினிதுறவகத்தினெண்ணித்
துன்றியபவங்கடாத்தூரமாம்பரமஞானங்
கன்றியமனத்தோயுன்னாற்காணலாங்கவலுற்றெண்ணா
தின்றோடேயுன்னைகாண்டியீசனைக்காண்டியென்னா 13

இவ்விதமீசன்கூறவிணைமலரடியிற்றாழ்ந்துந்
திவ்வியதேசிகாநின்றிருவடிப்பெருமையாலே
யெவ்வமென்பவமுந்தீரவிசைந்ததேயென்னென்னென்று
செவ்வியமனத்தினாலேசெப்பினனிவ்வாறாக 14

காதலற்றுண்மைஞானங்கலப்புறுமதியோனின்றோ
னோதுதற்குரியனேதானென்றுதன்னுளத்தினையன்
றீதறுத்துள்ளமைந்தாதிவ்வியஞானஞ்சேர்வாய்
மாதொருபாகத்தன்றோன்மனத்துறுகருணையாலே 15

வேறு

அருகணிந்தவிதம்பதமாகநே
ரருசனேயறியோமெனவின்னவ
னருகனேமுனமன்றருணால்வர்க்கு
மருகனேயெனச்செப்பினாண்மகன் 16

பின்னையையனும்பிள்ளையைநோக்கிநே
ரென்னின்முன்னரினெய்திடுவாயென
வன்னவன்றனதாடையொதுக்கியே
புன்மைநீககியிருந்தனன்புத்திரன் 17

இன்னவன்றனையீசனுநோக்கினே
ரன்னவன்றனதத்தத்தைமத்தகந்
தன்னின்மீதுதடவியும்பின்னருந்
தன்னையொத்தவன்றாடகுநெஞ்சினின் 18

அத்தமத்தகசையோகஞ்செய்துநே
ருத்தமர்க்குளுமுத்தமனாமிவ

னத்தனாயெனையாக்கினனாதலா
லத்தனானலனத்தனுமாகமே 19

சாமியிவ்விதஞ்சங்கற்பஞ்செய்துட
னோமெனும்பொருண்மூன்றுடனாற்றமோ
டேமமின்மனமிஞ்சமமாகவே
யோமெனும்பொருளாற்றனனத்தனே 20

கன்னலைந்துகழிந்துபின்றேசிக
னுன்னல்செய்தகுமுத்தமச்சீடனை
யின்னலத்தினிப்பொழுதேயென
மன்னுமாபரமின்னவனாகவே 2I

அத்தனந்தவருண்மிகுஞ்சீடனை
வுத்தியாகவுவப்புடனோக்கியே
மத்திரந்தினமாகுகமைந்தவா
சித்தசாந்தியைச்சேர்குவைசெல்வனே 22

வேறு

இவ்வகையீசன்கூறியேழ்வகைப்பிறப்புமேகச்
செவ்வையாமனத்தினான்குசாதனமுற்றோனாலா
மவ்விதமாசான்கூறவடியிணைபணிந்துபோற்றி
யெவ்வகைச்சாதனங்களியம்புதியியலாயென்றான் 23

தவாநெறிமைந்தகேளாய்தற்பரவிவேகமொன்று
மவாவறநிற்றலாறும்பெயருடைச்சமாதியொன்று
மூவாமதியென்னவுள்ளநிறைந்தொளிருண்மையிச்சை
வுவாதியானுருவாமைந்தாவுண்மைமிக்கின்னகேளாய் 24

இத்தகைச்சாதனங்களியல்புடனின்னுஞ்சொல்வா
முத்தமச்சகுணமூர்த்தியுறுமுபாசனையேசெய்துஞ்
சத்தியமலத்தினோடுஞ்சலனமுமற்றுனின்றோ
னித்தனேயாவதற்குநிண்ணயமினிவேறுண்டோ 25

சிரவணமாதிமூன்றுஞ்சிரவியமூன்றுஞ்சேர்த்திக்
கரணமாம்பகையைவெல்வாய்காவடமிலாதநெஞ்சோ
யுரமுறப்பொருந்துமித்தானுண்மையாம்பொருளேயாவாய்
தரமிகுமிவற்றின்றன்மைதனைநினக்கறைகின்றேனே 26

சடுவிதவிலிங்கந் தன்னாற்சமத்துவநிச்சயித்த
றடுதலிவ்விதுவேகேள்விதற்பரமிதுவாமித்தை
நடுமனமதனாலுன்னனாளனவரதகாலங்
கெடுதியாமனமுமாளுங்கேடிலாமனனமாமே 27

மனனமாஞ்சொரூபமித்தைமகிழ்வுறத்தைலதாரா
வினமுறவமலனானென்றிடைவிடாதப்பியாசித்த
லினமறுனிதித்தியாசந்தானிதுதுணிவாகுமிம்மூன்
றுனமிகுதன்பினாலேயுரைத்தனனின்னுங்கேண்மோ 28

இலிங்கமாதாறுமத்தையுருதியானிச்சயிக்கு
மலிந்தமாமனமுமாளுமறப்பறுஞ்சிரவணத்தி
னுலைந்திடாதிருக்குமாறுமுபக்ரமமுபசம்மார
ணவிவிலாவிதுவேமுன்னும்பின்னுமேனிற்பதாகும் .29

வேறு

அப்பியாசமெனுமதுவேயத்துவிததாற்பரியமிகவுண்டாக்கு
மொப்பொன்றுமில்லாதவுயர்ச்சுருதிப்பிரமாணமொன்றாலன்றி
யொப்பாதவுள்ளபிரமாணத்தாலேவுயரதுவேசொப்பிரகாசந்
தப்பாதவயலபேட்சைதரிப்பதிலதபூர்வதாவிலிங்கமாமே 30

வேறு

பிரமரூபந்தனக்குப்பிரமையினிவிர்த்தியோடுந்
தரமிகுமான்மப்பிராப்திசார்வதுபலலிங்கந்தா
னுரமுறுமர்த்தவாதமுபயமாம்பேதனிந்தை
சரமிலாவபேதமெச்சல்சார்வுடனின்னுங்கேளாய் 31

உபபத்தியெனுமிலிங்கமுறுதியாமுதாரணங்க
ணபமிகுமத்வைதத்தினுள்ளமேயாக்குமிக்க
வீபயமிக்கருமைமைந்தாவுயரறுவிலிங்கங்கொண்டு
மபமிலாதறிதிநீயேயறைகுவனின்னுங்கேணீ 32

ஷிகிதமாங்கன்மனான்கும்வியத்தமாந்துக்கமூன்று
ணகுமிகுகிலேசமைந்துநவையுறுபிராந்தியைந்துந்
தகைமிகுமாணுசொல்வேன்றத்துவந்தொண்ணூற்றாறுஞ்
சகசமாவேதாந்தத்தின்றத்துவனிச்சயித்தல் 33

இவையெலாந்தெளிந்துநன்றுயியம்பியபடியேமிக்க
நவைமனமறுக்குஞ்சேயேநானிவைவிரிவாய்ச்சொல்வே
னிவையகமொருக்கிக்கேணீயினமிகுங்கருமனென்கி
னவையவர்மதிக்குஞ்சீர்சாலனித்தியனித்தியம்மே 34

காமியம்பிராயச்சித்தங்கலப்புனைமித்தியத்தோ
டேமுறுமிவைநான்குள்ளினேமுறுமனத்தினெண்ணிச்
சாமியினர்ப்பணத்தாற்சாற்றியவிதியிற்செய்து
மோமமாநித்தியங்களுளுற்றதனுனெனுமல் 35

ஆண்டினிற்றொண்ணூற்றாறுமமைமுதலாகுனுளே
னீண்டனைமித்தியங்கணின்னயங்காமியங்கே
ளாண்டவன்றனைமறந்துமவாவுறுமகத்தாலெண்ணி
யீண்டியபயனைவேண்டியியற்றுதலாகுமன்றே 36

பின்னுறும்பிராயச்சித்தம்பிரிவுறுமசுமகன்ம
முன்னுதலுரைத்தல்செய்தலுற்றவிப்பவங்கடீர
நென்னலின்மனுவோர்கூறுவினின்மலமிருதிசெப்பு
மன்னதேசெய்வதாகுமெனமுன்னோரறைவரன்றே 37

பின்னுமாரியனுங்கேளாய்பேணுருத்துக்கமூன்று
மென்னெனக்கேட்பாயாயினிசைப்பதியாத்துமத்தோ
டென்னலாம்பூதந்தெய்வமிவையொருமூன்றுஞ்சேயே
யின்னிதுவிரிவாய்க்கூறுமியம்பருங்கீதைதன்னின் 38

அன்னதையிங்குசொல்வேனத்தியாத்துமங்கேண்மைந்தா
யின்னுணர்வேந்தியங்களிறுங்கருமேந்தியங்க
ளுன்னுநற்கரணனுன்கோடிவைபதினன்குமாகும்
பின்னதிபூதமித்தின்பணியெனப்பறைவரான்றோர் 39

வேறு

அதிதேவர்களறைவன்மிகுமறிவேந்தியமைந்துக்
கதியாயுறுதிக்கும்மரிகனலிக்கனவருணன்
னுதியாவுதிநகுலன்சகதேவன்னுறுதந்தை
சதியாயுறுகருமேந்தியசகனிந்திரன்முதலார் 40

வாமன்னயுனியமன்னுறுவரமாமனனுன்கிற்
கூமம்மிகுவல்லோனயற்கரியேர்னரனிவரே

நாமம்பெருமதிதேவர்களென்பார்மிகநல்லோ
ரேமம்மிகுசெயல்யாவையுமிம்மூன்றிலதிலதால் 41

வேறு

பஞ்சமிக்கிலேசங்கேணீபவமுறுமவித்தைதராக
மஞ்சுமாசுமிதையோடுமபினிவேசத்தோடுற்ற
நஞ்சுறுபகையோடைந்தாநலமிலாப்பிராந்தியைந்து
மொஞ்சநீயறைகுவேனானுயரறிவுற்றமைந்தா 42

உலகுசத்தியமாயுன்னனுடலையுமியானேயென்ன
லலகிரியாகுங்கத்தனளவிலாப்போத்தாயானே
நலமிகுமரனுமியானுனாடருவேறென்றெண்ணல்
மலமிலாச்சித்தாமியாமுமகிழுறுசிவமும்வேறே 43

இவ்வகைப்பிராந்தியைந்தாமினிமையாந்தத்துவங்க
ளெவ்வமிற்றொண்ணூற்றாறுமிசைவுறுவேதாந்தத்தி
னைவ்வுறுதத்துங்களுறுதியுமுரைப்பேன்பாலா
செவ்வையாமனத்தினோடுசீடனேகேட்பாயின்றே 44

பூதங்களைந்தோடைந்துபுலன்களுங்கரணனான்கோ
டோதங்கொண்ஞானவிந்தியங்களோரைந்துங்கன்ம
னீதவிந்தியங்களைந்துநின்மலச்சிவதத்வங்க
ளோதுறுமைந்தாமைந்தாவுண்மைக்கின்னகேளாய் 45

வித்தியாதத்துவங்கள்விரிவதாய்ச்சத்தமாகு
முத்தியானாடிபத்தாமுயரசவாயுவாகுஞ்
சத்தியாங்குணங்கண்மூன்றுஞ்சகசமாவசனமைந்தா
மெத்தவாங்காரமூன்றுமிகுபிருதிவியின்கூறே 46

ஐந்துடனப்பின்கூறுமன்னதேயனலின்கூறு
மைந்துடனரியின்கூறுமன்னதேயாகாயத்திற்
றைந்தொருகூறுமாகுமருமைமாவாக்குநான்கா
மைந்தனேயின்னுஞ்சொல்வேன்மகிழுறுவேதார்த்தங்கள் 47

வேறு

நுண்ணகமீர்பத்துநுண்பூதமோரைந்துநுவலத்தகு
மெண்டுலமாறுகுமிறுமாயையவ்வீசனிறுசிவனே

டொண்ணாததமமொடுமுறுமிந்தவிவையன்றியோர்வத்துவா
யெண்ணாதபரமத்தினிவையோடுமுப்பத்தியாறாகுமே 48

முப்பத்தியைந்தானமுறிதத்வமதனானுமலமென்றருச்
செப்பதற்குமுன்னற்குமரிதானசேடுற்றவதனானென்ன
வப்பப்பவதுதானுமுடிவானவறியாதபரமுத்தியா
மிப்பத்தியிவையன்றியீறுதுமிகுமாயையியைசீடனே 49

முன்னாலுவேதங்கமபரங்கண்முறைநூல்களெல்லாமுமே
பின்னாருமறியாதபரவித்தைபரஞானமாபுந்தியா
லுன்னாமலுன்னற்குமரிதானவுறுதத்வமாக்யமா
யென்னாளுமதனுச்சிநடமாடுமிகுதேவனவனானெனா 50

மாவாக்யமிகுவிர்த்தியதன்மீதுபிரகாசமிகுஞானமா
யோவாதுதெளிவுற்றவிறைஞானவவனாருமிகுசொல்லினுஞ்
சாவாதுபிறவாதபரஞானவைராகமதனானிலும்
பாவாடபரஞானமிசைவாகுமெனவேதர்பறைவார்களே 51

அவ்வீசனிதுகூறவடியிற்பணிந்தன்னசீடன்மன
மொவ்வாதுசகசத்தினொருதன்மையெவ்வாறுமிவைகூறெனா
வவ்வாறுநிகமத்தினறைகின்றவதுகூறவையன்றணிந்
தெவ்வாறுமுனையன்றியிலதாதலாலிந்தவிவைகூறுவேன் 52

ஈசன்றனிதுகூறியெவ்வாறுமனமுன்னலிதுகேளெனாத்
தேசங்களுலகத்திலிதுனானுமிதுவென்னவெனவுன்னலா
லோசங்களுளமூர்தலாகுந்தனுளமொன்றிலதுவென்றுற
நேசங்கொளிவையாவுமானல்லனிரைசீவனானல்லனே 53

அன்னமயமுதலாகுமைங்கோசனானல்லனதுவுங்கடந்
துன்னரியபரமானவதனானெனச்குருவுமச்சீடனா
னென்னவதுமெனவினவவன்னமயபிராணமயமுள்ளமயமோ
டுன்னுமறிவாமயமுமாநந்தகோசமாமைந்துமீதே 54

இவையைந்துனானல்லனாகுமருபரமனீயென்னவே
யவையெந்தவிதமாகுமெனவையனதுகூறவருளான்மிகுந்
துவிதத்தினேராதவதுதத்வமசிகீயுமதுவாமென
கவையற்றசாந்தோக்யநாகரிகமாகமிகநவிலுமாதோ 55

வேறு

அந்தமுறையெந்தவிதமனுட்டித்தக்காலதுநேருமரும்பவங்
கடூருமையா, விந்தமுறைகிதையினுமினிதானவசிட்டத்துமியம்பு
முறையமைந்தமிகுமைந்தகேளா, யந்தமிகுமனமருளுந்தீர்ந்து
பின்புமருணன்குசாதனங்களவதிதீர்ந்துஞ், சந்தமுறுஞ்சகுணவு
பாசனையேசெய்துஞ்சாற்றுமனச்சுத்தியினன்பின்புகேளாய் 56

பதஞ்சலியோகத்திலுளபதமிகுமாதனங்கள்பலவுளதாகும
திற்பதுமஞ்சித்தமேலா, மிதங்கொளுமாதனமிரண்டிலெதுவே
னுமமைந்தவழியேகாந்தத்தலமதனிலிருந்துமேண, மதிலிருந்து
மதமகற்றியகமொருக்கவழிதேடியன்னமயமதனுனேவமைந்த
வாயு, மதுனுனேவகனுனேவறிவுமயனுனுமோவானந்தமயனு
னேவல்லமைந்தா 57

இத்தகையகோசங்களைந்தையுனனல்லவெனவிகலுறுதியா
கற்றிலப்பாற்பாழா, முத்தமனேயவையென்னிற்கற்பிதமாமெ
னவகற்றியப்பாற்போயகம்பிரமவிருத்தியாகுஞ், சத்தினிடம
கஞ்சேர்த்துச்சாருவதாவவ்விருத்திபுரிகுவனேதசமாதியெய்து
ஞ், சித்தினிடமானந்தசமாதிநான்காச்சிறப்புமிகுஞ்சதுரர்தகச்
சொல்வாமாதோ 58

இம்மார்க்கமனுட்டித்தற்கேதுவாமருணன்குமிருக்குமுதலா
ரணங்கண்மொழியுமத்தைச், சும்மாவோவுன்றனக்குமிசைப்பே
னந்தோசூட்சுமமாமிப்பொருளையெவர்க்குங்கூறு, ரம்மாவீத
திசயமேயாகுமப்பாலன்புறுதிகொண்டுமிகக்கேளாயீச, னெம்
மானரியன்வேதமிறுமனத்தினருணன்குமிசைவுமிக்கொண்ட
வர்க்கேயிசையுமோனம் 59

இவ்விதமாரியன்கூறவெம்மானேவம்மாவீததிசயமேயாமி
யானுமனுட்டிக்கின்றே, னவ்விதமேயெனச்சீடனகத்திற்றேர்
ந்துமன்புடனேகாந்ததலமருவியின்னு, மொவ்வுறுமாதனம்யது
முமதினிருந்துமுயர்மனத்தாலைங்கோசனுனேயல்ல, னெவ்விதமு
மப்பாற்சூனியமுமல்லனெல்லாமாயல்லவுமாமதுனனென்
றே 60

அகம்பிரமவிருத்தியெழுமதனிலுள்ளமசையாமனிருத்தி
வெகுசகசமாகக், ககனமெனுஞ்சிற்ககனசொரூபந்தானுஞ்சா
ந்தபதமாஞ்சகசநிட்டையோனு, புகமொருனுளனக்கழித்தா

னப்பாற்சீடனுண்மையகமெமுந்தவுடனையற்கண்டு, மிகவண க்கமாயவரைக்கிட்டியீசாமேன்மைமிகுமெனையன்றியயலேகா ணேம் 61

நானேனுலகமெலானேயானேனலமுறமும்மூர்த்தியவர்நா னேயானேன், றனேன்றுங்களுமிவ்வுரையுமானேன்றற்பரமா மதுவானேன்பிறவியற்றே, னானேனகமானேனுறுதிமிகயா னேனுண்மைமிகுமகஞானமியானேயானேன், றேனும்பொ ழிற்கல்லான்மூர்த்தியானேன்றிகழுமெனையன்றியொருபொரு ளுங்காணேன் 62

இவ்விதந்தன்னனுபவத்தைச்சீடன்கூறவியனுறுமாசான்பின் னையியம்புகின்று, னவ்விதமேயாகுகதுற்பிரதிபந்தமணுகாமலெ னவையனவின்றிடலுஞ்சீடனையா, யெவ்விதமாமவையென்னவீ சன்கூறுமிறும்பிரதிபந்தமவைமூன்றுய்ச்சொல்வ, ரவ்விதமேய றியாமையைத்தோடுமறுமாறுபாடேனேயிவையேயாகும் 63

சிரவணத்துமனனத்துந்தெளிதலானுந்தேய்வரியபிரதிபந் தமூன்றுந்தேயு, மருமகனேசிரவணத்தினருமைதன்னையன்பு மிகுந்துன்றனக்குமறைகின்றேனியா, னூரமுடனேகேட்பாயெ ன்றேதுகின்றனுண்மைமிகுந்தத்தொமசிமாவாக்கியத்தின். றா முமுளதத்பதத்தின்சிரவணத்தைத்தன்மைமிகுமுன்பொருட் டாத்தனயசொல்வேன் 64

சருவஞ்ஞன்சருவகாரணன்சருவேந்தரியாமிசருவேசுவரன் சருவசிருட்டியோனுஞ், சருவதிதிசருவசங்காரத்தோடுஞ்சாத்தி ரஞ்சொலிவையேழுஞ்சத்தினுக்குச், சருவவுவாதியுமாகுமிந்த வேழைச்சாராமற்சான்றெதுவோவதுவேசித்தா, முருவமிலாவ தைவிடாலக்கணையாற்சிரவணத்தானுண்மையுளமதிலறிந்துமன னங்கேளாய் 65

பரமானவவனேழுற்கூறுமுவாதியுடன்பந்தஞ்செய்தது நானென்றபிமானித்த, பரனவர்க்குப்பகமிகுமாவிராட்டென்னு ம்பரமானவன்றுமமடைவன்மிக்கப், பரமானவவனேழிற்பின்மூ ன்றுவுவாதியுடன்பந்தஞ்செய்ததுநானென்றபிமானித்த, பரன வர்க்குமிரண்யகர்ப்பப்பேராகும்பலவுமிலாச் சருவசங்காரமொ ன்றே 66

ஒன்றானவுவாதியினிலபிமானித்தவொண்பரற்கவ்வியாகிருதநாமமாகு, மொன்றானவதுதனக்குச்சாக்கிரமுமுறையானமுழுநீலக்கனவதுவுஞ்சுழுத்திதானு, மொன்றாகுமிவன்மூன்றுமடைகுவனேயொருக்காலும்பரனாகானுண்மைமிக்க, வொன்றானவிவன்மூன்றுங்கடந்துநிற்கினுண்மைமிகும்பரமிதுவே தெளிதல்கேளாய் 67

முற்கூறுஞ்சாக்கிரத்தின்விராட்டாமெண்ணுமோகமுறுஞ்சொப்பனத்தினிரண்யகர்ப்ப; னற்பேறுஞ்சுழுத்திசகத்சான்றுமாகுனண்புமிகுமிம்மூன்றும்பரத்துக்கல்லச், சற்பேராமப்பரமேயென்றும்வைகுஞ்சாருவதாவதுவாகுமதுவேதானு, மிற்றாகுந்தெளிதறுவம்பதத்தின் முந்தியினிமையாஞ் சிரவணத்தையியம்பக்கேண்மோ 68

பொறியைந்தோடைந்தொன்றுந்தூலமொன்றும்புறவித்தின்றெழில்பத்தும்புகலிலொன்றாந், தறியுள்ளமுதனான்குனான்குமாகுந்தடையற்றபிராணாதியொன்றுமாகுமுறிவுற்றவிவையேழுந்துவம்பத்தின்மூழுமுவாதியுமாகுமிவைனீயலல, குறியுற்றவிவையேழுங்கடமூனாகுங்குறியற்றவான்மாவேநீயாமைந்தா 69

இவ்விதற்குவிட்டலக்கணையேயாகுமினிமையுறுமனமது கேளாயீன்ற, வவ்விதமாமேழுடனுணின்றபோதுமந்தமுறுந் தூலகடமாகுமிக்கக், கவ்வியமாமனனொன்றும்பிராணனொன்றுங் கலந்தவிதுசூக்குமமாமாகமாகுந், திவ்வியமாம்பிராணாதியுடனேசேர்ந்துந்தேய்வுமிகுங்காரணமாமாகமாகும் 70

சாக்கிரத்திலபிமானித்தன்னோனுக்குச்சார்வுமிகவிசுவனெனுநாமமெய்து, மாக்கியவிச்சொப்பனத்திலபிமானித்தவன்னோர்க்குத்தைசதனென்றுறுபேராகு, னீக்கமிலாக்காரணத்திலபிமானித்திண்ணயர்க்குப்பிராஞ்ஞனெனுமப்பேராகுந், தூக்கமிலாவிவைமூன்றுமியானேயல்லன்றுகளறவேயிவைமூன்றுமறிவோனானே 71

இம்மூன்றுதூலமதற்கப்பாலாகியினமிலாத்துவம்பதத்தினுண்மையானே, யம்மாபின்னிதுதெளிதலாகுமின்னுமசிபதத்தின்சிரவணத்தையறைகுவேனு, மம்மாவத்ததுபதத்திற்கவத்தைமூன்றுமுருசிமிகுந்துவம்பதத்தினவத்தைமூன்றுங், கம்முருவாமசிபதத்திற்கிதுபோலாகுங்கலக்கமிலாவப்பரமேவிளங்கினனும் 72

வாகையுறுமப்பரற்குவாதனாதோடமுளவகையேதுமெனி லதுமூன்றாகங்கொண்டு,மேகனுறுமவத்தையொருமூன்றுங்கொண்டதத்தாலேயப்பரற்குத்தோடமுண்டா, மூகமுளதத்பதத்தினகமேயிந்தவுறுதியுளவசிபதத்திற்கவத்தையாக, வேகமெனும் பரம்விசுவக்கிராசத்தோடுமெண்ணரியவுபசாந்தமூன்றுமாகும் 73

ஆகையினாலிதுபரமேயல்லவல்லவசிபதத்திற்கிலசகந்தானேயாகு, மோகையினாற்சாக்கிரமாமதிற்பந்தித்தவுண்மைமிகுமப்பரற்குச்சிற்சொரூபதை, சாகையுறுஞ்சகமியாவுமித்தையன்றிச்சகசமதாயதுவல்லவயலேயல்ல, வாகையினாலதுகனவாமதிற்பந்தித்தவப்பரற்குப்பிரசாபத்தியனாமன்றே 74

சிவசுழுத்திதனைமறந்தானாகுஞ்சகமறந்துஞ்சத்தாமாத்திரமானசாந்தமாகி, யவமிதினிலபிமானித்தன்னதற்குமந்தமிகும்பொற்புவிசாந்தனாமந்தா,னுவமையிலாவிவைமூன்றுஞ்சிவமேயல்லவுண்மையிலாவிம்மூன்றுஞ்சிவத்துக்கல்ல, கவனமுறுமிதுசோயந்தேவதத்தங்கருதியனுதினமனனமிதுவேகேளாய் 75

நாமமிகுமசிபதத்தினவத்தைதனாமனாட்டுசிவசாக்கிரமுங்கனவுமூட, மேடமிகுமிவைமூன்றுமியானேயல்லனிதிலபிமானித்தசிவமூன்றுமல்லன்,றாமிகுந்தன்மையனேயிவைக்கப்பாலாந்தற்பரமாமப்பொருளேயானாமென்று, னீமமிகுமப்பரமேயானுநீயுநிண்ணயமாமானக்கதெறளிதலீதே 76

வேறு

மைந்தகேளிதையேமுன்னாமருவிலாவரனாநால்வ
ருய்ந்தவரதீதமாகவுரைத்தனமிதுவேஞான
வந்தமுத்திரையாமூன்றாமருங்கரணத்தினானு
னந்தலெச்செயல்செய்தானுநற்பரமதுவாமன்றே 77

இவ்விதமாசான்கூறியின்னமுஞ்சந்தேகங்க
ளெவ்விதமுள்ளவெல்லாமியம்புதிவிடையுஞ்சொல்வா
மவ்விதமடிகள்கூறவடியிணைபணிந்துசீட
னெவ்வுறுமான்மஞானமுத்தமவடைந்தேனினால் 78

பாரகாரியமாமிந்தப்பரமதுநானேயாக
நீரதிகாரியானீர்நின்மலச்சிவமேயையா

வாரணியதிபனீயேயத்தனேயமைவாமேக
வாரலமறுத்துநீத்துமடைந்தனனம்மவம்மா 79

சீடனிவ்வாறுகூறிச்சிற்பரமதையேசேர
வேடணைமூன்றுந்தள்ளுமினிமையாஞ்சீடற்கன்றே
வேடகநாதனெண்ணமிசைவுறமிசைவுளோனே
யாடலும்பாடுமில்லாவத்தனேசங்கைசொல்வேன் 80

வேறு

நித்தியமாமப்பொருளைத்தியானஞ்செய்யநின்மலமாமெவ்
விடங்கணிகமஞ்சொல்லு, மத்தையெனக்கருளுதியென்றவனு
ங்கூறவையனதுகூறுவன்கேளன்புமிக்க, மித்தையதாந்துலமிதி
னிடங்களைந்தாமிடறுமுதலிதயமிகுநெற்றியோடு, மத்துமிகுங்
கபாலநாபிகளோடைந்தா வதைகுமிகுமாரணந்தானமைந்தமை
ந்தா 81

வேறு

பின்னுமாரியனுங்கேளாய்பிறங்கியபிரமமொன்றே
பன்னெடுங்காலமுள்ளபரசிவச்சத்திமித்தை
யின்னிதுநிண்ணயந்தானிவ்வுலகமுமேயில்லை
யின்னனவீசன்கூறவின்னவனியம்புகின்றான் 82

பண்ணவபகவநீரும்பகர்ந்தவிம்மாற்றனன்றே
நிண்ணயமதுவேயாகுநித்தியமாயையனறோ
கண்ணனின்சமயத்தோருங்கபாலியின்மதத்தினோரு
மெண்ணியவெண்ணமீசவிசைவதுமிதுவேயாகும் 83

அன்னவர்துவிதவெண்ணமதுநிசமாகுமையா
வின்னிலந்தன்னிலெல்லாமிசைத்தருளிறைவனேயென்
றுன்னியமனத்தோன்றன்னையுவகைமிக்கன்னவாசா
னுன்றனதகத்தினையமுயர்வுறவளர்ந்தமைந்தா 84

வேறு

சூசிகடாகநியாயமுறைப்படிசூசியினானியம
வாசியுமுன்றனதந்தமிகுந்தகமாகுவதாதலினா
லாசையருங்குணனாகினுமுன்னகமையமிகுந்ததனா
லாசுறுமம்மனவம்மகனேமிகுமாரனுமாமிதுகேள் 85

நித்தியமென்பதநித்தியமென்பநிகழ்த்துவநீயதுகே
ளுத்தியினூறுமூன்றொருகாலமுமேயழியாததுதா
னித்தியமாமிதுவோரொருகாலையினித்தியமாகுவபோ
லத்தியயம்மிகும்மாமலைவுற்றதுமாமிதுகேண்மகனே 86

ஓரொருகாலையிருந்துமிராததனித்தியமாகுவதா
மீரெனும்பதமீறுமவித்தையுமீறுறுகாலையினே
வாருறுகாந்தனல்லாகுமநூலினின்வந்துறுமாதலினு
லாருணியெங்கணுமவ்விதமாமறியந்தமிருக்கும்படியே 87

ஆகையினூறுமாயையனித்தியமாகுவனிண்ணயமே
யாகையினன்மகனேமிகுஞானமிதின்னபவாரணமா
மாகையினலதுமித்தையதாகுவதத்துவிதெண்ணமுளோ
ரோகையினன்மிகுமத்துவிதத்துறவித்துவிதம்வழியே 88

வேறு

துவிதபாவனையேயத்துவிதத்தினைத்தொடருமேது
மவிததத்தாயுமானவன்னவனியம்புநூலு
மிவையதேநியமமாகுமிதினகமருளலாகா
கவிமிகுநியாயத்தானேகல்விமானனசீடா 89

இன்னமுனூல்களெல்லாமியம்பினுமிரண்டேயாமுஞ்
சொன்னதும்பிரமாணந்தான்சுருதியினறுதியீதே
யின்னமுஞ்சந்தேகங்களிதிலுளதாகுமோதா
னுன்னனுபவத்தைமிக்கவுண்மையாயறிவிப்பாயே 90

இன்னணமீசன்கூறவிணையடிபணிந்துநீருஞ்
சொன்னதினுண்மையாவுஞ்சுவிகரித்தென்னதைய
மென்னகனின்றனீங்கிற்றெந்தையேயிறைவாவென்றும்
பின்னராரியனைநோக்கிப்பேசுவன்சீடன்றனே 91

ஆதியாமரனேயாகுமத்துவிதத்தினுசா
னீதியினுறவியாதனிண்ணயக்கண்ணனிராம
னோதுறுநூல்களெல்லாமுள்ளமாமன்னோர்க்கெல்லா
மூதியமாகுமிந்தவுயர்ந்தவத்துவிதமென்னே 92

இத்தகையின்னோரெல்லாமீரிலாவிந்தக்கொள்கை
யத்தனேயாவதெல்லாமரும்பிரமாணமாகு

மித்தனைபெருமைவாய்ந்தவீசனேயீசன்மூவ
ரத்தனேயென்னக்கூறுமத்தனேயின்னுஞ்சொல்வீர் 93

நாரணமதத்தினோர்ந்தநலமிகுநம்மாழ்வாரு
மாரழலேந்திமிக்கவன்னவர்சமயத்தோரி
னாரருளருமைவாய்ந்தவன்னவர்சிவஞானத்தி
னேருறுவள்ளலார்தானீதியினமைந்தவாசான் 94

ஆனவாமிசங்கொண்டுமம்புவிதனிலேமோன
ஞானசம்பந்தனென்றுநலமிகுமப்பேரான
மானமிக்கன்னோனுள்ளமகிழுறுஞ்சீடவள்ள
லானவொன்பதுபேருள்ளினமைந்தவிவ்வள்ளலாரே 95

இன்னவர்நூல்களியாவுமிசைந்தவத்துவிதஞ்சொல்ல
வென்னதுவேண்டும்பின்னுமின்னவர்துவிதமற்ற
வன்னதினெண்ணமாவராரறிவுற்றமைந்தா
கன்மமில்லாதவர்க்கேகழறியவிதுதானொக்கும் 96

மாயையின்மயக்கநீங்காமதியிலாமானிடர்க்கு
மாயையேயழியாதென்னுமார்க்கமேமிகுந்துமிக்க
மாயையினகப்பட்டுள்ளமதியையேமதிக்குமன்னோர்
மாயையைநீங்காரென்றுமறையுபனிடதங்கூறும் 97

ஆசினைநீங்காநெஞ்சினறிவுதயமுமேயாகா
நீசமாமாயையில்லைநித்தியமாகமெய்யா
வாசகலன்னோர்கூறுமருத்தமுமிதுவேயாகு
மாசகமாசுநீங்காமதியினற்கிதுநேராது 98

கருமகாண்டத்திற்கூறுங்கலப்புறுகருமஞ்செய்த
லுரிமையாமென்னவாசானுரைத்தபினுற்றவையா
மருளுறுமயக்கநீங்கமனமிகுந்தப்யாசிக்கு
மருளுறுமன்னோர்நீதியமைவதுமருளுவீரே 99

சச்சிதானந்தரூபசாந்தமாமதுவேயாக
வீச்சையுற்றப்யாசிக்குமின்னவரிளமைமிக்க
விச்சகவிச்சையுள்ளோரிடத்தினிமையாக
நச்சுதலாகாவின்னுநயம்படநவிலுவேனே 100

மனைவியினிடத்தினுள்ளமகிழ்வுறப்பற்றலாகா
தனயர்களிவர்களெல்லாந்தாழ்வுறும்பாசமாயை
யினையவரிடத்துமில்லமாதியினிடத்துமாகாத்
தினையளவேனுந்துக்கசுகங்களினமிழலாகா 101

இருவகையேகாந்தங்களியம்புநற்சுருதியாவு
மருளுவமுன்பொருட்டாலன்னதுபாகியந்தா
னுருவமிலாந்தரந்தானுண்மையாமிவ்விரண்டி
னருமையையறைகின்றேனானருளுவமைந்தமைந்தா 102

பாகியவேகாந்தந்தான்பற்றிலாவன்னோர்கூட்ட
மேகியேயவரோடெண்ணமெண்ணுவதாகுமில்லாச்
சாகியமதினுங்கூடாச்சகசமும்பேடியூமை
யாகுலமில்லாவிந்தவந்தகன்செவிடரென்னே 103

ஆந்தரவேகாந்தந்தானழிவுறுமைங்கோசத்தை
நீந்தியேயப்பாற்சென்றுநின்மலவகண்டாகார
மாந்துதலெண்ணிமிக்கமகிழ்வுறவப்யாசித்த
லாந்தரமாகுமைந்தாவறைகுவனின்னுங்கேளாய் 104

பேடியென்றதுதானுள்ளம்பேணுறுமடந்தைமாரின்
கோடியுமெண்பதாண்டுகொண்டகக்குழவிகொம்மை
நீடிலாவிவைகளைத்தன்னிருமலவகத்தினெண்ணி
யாடவரிருவரைத்தன்னனகத்தினினொன்றாய்க்காண்டல் 105

சொல்லிலிசொல்லுவன்கேள்சூழுதலில்லாதான
தல்லதையறைதலில்லாதமைகுதலாகும்பின்னு
மெல்லவனில்லாவிந்தவிறுஞ்சகம்போலுங்கண்க
ளில்லதுமென்னவென்னிலிசைக்குதுமினிமையோனே 106

நுகத்தடிநான்கின்றாரநுண்மையாம்பார்வைனோக்கா
தகத்தினினிடையேனிற்றலாகுமாஞ்செவிடனீகே
ளகத்தினினறிவிலாமலலைவுறுமனத்தோர்கூறு
மிகப்பழியதுவுமிக்கமேன்மையாயாகமெச்சல் 107

இந்தவிவ்விரண்டுங்கேளாதிருப்பதுவாகுநெஞ்ச
மந்தவவ்விரண்டுநேராதமைகுதலாகுமென்னப்

பந்தர்கள் கிரியைநேர்வாரென் றுமுன்பெரியோ ராலே
யெந்தையேபகரக்கேட்டேனிதையுநீரருளுவீரே 108

மன்னுமாமைந்தவித்தைதமுண்டகங்கூறுமத்தை
யின்னதென்றிசைக்கின்றேனீ றுறுங்கிரியையானென்
றென்னதென்றெண்ணுமெண்ணமிசைவுறுமிதினாலாகு
முன்னமுமாயாதாகவுயர்வுறவளருமென்னே 109

ஈதினாற்கிரியையானென்றெண்ணுதலாக்குஞான
மாதியாங்கருமந்தன்னையழிக்குதல்செய்துமிக்க
நீதியாமதுவேயாக்குநிண்ணயமிகுந்தசீடா
வாதியான்முன்னாளித்தையமரருக்குரைத்தானன்றே 110

ஈதெலாமையன்கூறியின்பமாமிவ்வர்த்தங்க
ணீதியினேகச்சித்தநேர்ந்தவர்க்கன்றிநேரா
வாதலிற்கலியினீசனமைவுறுநாமோச்சாரந்
தீதிலாதியற்றற்பத்துத்தீதவைதள்ளியப்பால் 111

பத்தியினுச்சரித்துப்பத்திரமனமுமேகச்
சித்தமதானபின்னாற்செய்பவனில்லாஞான
முத்தியின்வழியையெய்தலாகுதன்முடியுமென்ன
வத்தனுங்கூறவையவருளியவபராதங்கள் 112

தசவிதமாகுமென்னத்தாங்களேசாற்றினீர்க
ளசலனின்னருணாமத்தையறைகுதற்கென்னவத்தை
நிசமெனக்கருள்வாயென்றுநிலமிசைதாழ்ந்துவேண்ட
வசதியில்லாதபிள்ளாயறைகுதுமென்னவாசான் 113

சாதுக்கணிந்தையாகாச்சாதுக்களல்லாதன்னோர்
நீதங்களியக்கங்கூறநிண்ணயமாகவாகா
வேதங்கொண்டரனுமாயனிவர்களிற்பேதவெண்ண
மோதொணாச்சுருதிவாக்கியத்தினிற்சிரத்தையில்லா 114

அசிரத்தைகொள்ளலாசானருளுமாவாக்கியத்தை
யுசிதமாயெண்ணாதொன்றுமுவகையாஞ்சாத்திரத்தி
னசிரத்தைகொள்ளலின்னுமாசிரியவனாற்கூறு
முசிதமாவருத்தந்தன்னினர்த்தமாவாதங்கொள்ளல் 115

முழுமுதற்கடவுளுமமுறையுடனென்னிடத்தி
னழுத்தமாயிருக்குதென்னுமகவிசுவாசத்தாலே
யழுக்குறுநிடித்தகன்மமாற்றுதன்முன்னேகூறு
மழுத்தமாமதனாலொக்குமன்னவனாற்றுஞ்செய்கை 116

விகிதமாங்கன்மந்தன்னைவிட்டிடவிவையும்பின்னு
மகிலரூபமுமேயானவன்னவனின்னாமத்தோ
டிகிதமாமற்றத்தன்மமிவையவையொன்றாக்காண்ட
லகிதமிக்கருமைமைந்தாவந்தமாமாசுமீதே 117

இறைவனிவ்வாறுகூறவின்னமுங்குருவேயீச
விறையளவேனுமையமென்னகனின்றுநீங்க
விறையுனதாகுமென்றுமியம்பியேயவரைநோக்கி
யிறைவனேதத்துவங்களெத்தனையாகச்சொல்வர் 118

சீடனிவ்வாறுசொல்லச்சிற்பரச்சாமிசொல்வா
ரேடுறுமலரோன்முன்னையியம்பியமுறையேசொல்வே
னாடுதனாட்டுமாலோர்நாலறுவகையாமென்பர்
சூடியபிறைவன்சைவர்சொல்லுவர்முப்பத்தாறாய் 119

சாங்கியமதத்தோரையைந்தாகவேசாற்றுவார்க
ணீங்கவில்லாதவர்க்குநிண்ணயமிருபத்தெட்டே
யீங்கிவைவிரியுமைந்தவென்றிதைவிடுத்துமித்தி
னோங்கியபயனொன்றில்லையுண்மையாம்பொருளேயாக 120

இதிலெதுவாகிலென்னவிதுவதுபெரிதென்றெண்ணிக்
கதுவுறுமதங்கட்கெல்லாங்கடவுளரொன்றேயாக
விதுதெரியாதமூடரின்பர்போலகங்கரித்து
மிதுபெரிததுவேயாகுமென்பர்களறிவிலாரே 121

ஆடையிற்சகடத்துள்ளவறுமசகமைந்ததாகி
னீடுழிகாலமட்டுநிட்பலச்சகடமெங்கே
யாடையிற்பட்டதெவ்வாறாகுமென்றிவையேயெண்ணி
நாடுதலாரின்பண்டிநாமமிக்கெவர்செய்தாரே 122

பண்டியினளவையேதுபயனிலியிவைகளாலே
வண்டியினுற்றவிந்தவாடையின்மசகுபோமோ

கண்டனவுடனேயத்னைதக்கழிவுறுங்கணக்கேயெண்ணி
யண்டலில்லாமலத்தையழிப்பதுபலனேயாகும் 123

இன்னிதுபோலமுன்னேயியம்பியசங்கையான
தென்னதுமதமேலாகுமிம்மதமேலேயல்ல
வன்மையாஞ்சமயபேதவகையினிற்றத்துவங்க
ளென்னதுபிரிதலானதென்றிவையுசாவலென்னே 124

மாயையெவ்விதஞ்சனித்தமார்க்கமேதென்றுமிக்க
நேயவாமதுவுமெந்தநேரத்தினழியுமென்று
மாயமாமிதுவேசங்கைமதிப்பிலாவிவைகளாலே
மாயமாம்பலனேயாகுமதியுறுபயனொன்றில்லை 125

முன்னமோர்காலந்தன்னின்முழுதுணரொருவன்சீட
ரின்னதேசங்கையாகவியம்பிடவிறைவன்கூறு
மன்னதேயாகுமைந்தவாகினுமிரதமிக்கு
நன்னலவடவியொன்றினலமுடனடைந்தபல்லோர் 126

மாந்திநற்கனியையுண்ணமனத்துமிவர்களெல்லா
மாந்தியையகத்தினெண்ணிமதித்தனர்சில்லோர்பின்னு
மாந்தியினிலையைச்சில்லோர்மதித்தனர்கொம்பைச்சில்லோர்
மாந்தியின்கனிரசத்தைமகிழ்வுறப்புசித்தார்சில்லோர் 127

இவ்விதஞ்சோலைசென்றவிவர்களக்கனிரசத்தைப்
பவ்வியமாகவுண்ணப்பாரமாமனத்தினெண்ணி
யவ்விதமனத்தோடெய்துமவர்களிற்சில்லோருண்டா
ரெவ்வமாஞ்சில்லோரெல்லாமினிமையாங்கனியையுண்ணு 128

இலைகளைக்கொம்பைத்தாருவிவைகளையகத்தினெண்ணி
யலைவுறப்பயனொன்றில்லாதாகினரென்றுமைய
னுலைவிலாமனத்தோர்க்காகவுரைத்தனரென்றுமிக்கக்
கலைமிகவறிந்தவாசான்கழறினனின்னுங்கேண்மோ 129

அருமைமேவதாந்தநீயாயாகவேயானமைந்தா
மருளகன்மார்க்கந்தேடிமனத்தினினெத்தான்மாயை
யருகனின்னருண்ஞானத்தாலற்றிடுமதுவேயல்லா
தொருவழியாலுமாயாதென்றனனேயன்றே 130

பெருமையிற்பெருமைவாய்ந்தபகவனேபேதைமிக்கு
மருளகவடியேன்றனைமனத்துறுமருளுந்தீர்த்து
நிருமலச்சித்தேநீயென்னிகழ்த்தினைமுத்தனானே
னருளுருவாஃவையாவகத்தினினின்னுமையம் 131

உள்ளதுசொல்வேனென்றுமுவகைமிக்கன்னசீட
னுள்ளருமைந்தாமுத்தியுலகினிற்றுறவோர்க்கன்றி
யுள்ளடியுள்ளவில்லவறத்தவர்க்கில்லையென்றே
யொள்ளியமாந்தர்கூறுமுறையதுமென்னசொல்வீர் 132

ஆரியன்கூறுகின்றனைமைவுறுந்துறவோர்க்கன்றி
யீரிலாமுத்திகூடாதென்றெனவியம்புவோர்க
ளாரூறுமகத்தோரல்லரன்னவர்சுருதிதேரா
ரீருருப்பெரியோரெல்லாமிருந்தனரில்லத்தின் 133

சனகனுமிக்குவாகுஞ்சந்திரகுலக்காண்டீப
னனவினிற்சுழுத்திபெற்றநலமிகும்பகீரதன்று
னனவுறும்பிரகலாதனனிமிகுமுசனுவோடுங்
கனமிகக்காணுஞ்சுவேதகேதுவுமின்னங்கேளே 134

இன்னவன்றுதையினுமெண்ணிலோர்கணக்குண்டாமோ
வன்னவரெல்லாமுத்தியடைந்தனரென்றுவேதஞ்
சொன்னதும்பொய்யோவந்தோசொன்னவர்க்கெல்லாமுத்தி
யின்மையேயில்லறத்தோர்க்கில்லையேயென்றனையன் 135

பரமந்தானுகுமையன்பலவிதவுத்தியோடு
முரமுடனுரைத்தபின்னருவப்பொடுஞ்சீடனையா
தரமிகுமனுபந்தங்கடலைவனேநான்கென்றார்க
ளாதியில்லாமலத்தையருளுவீரென்றனுசான் 136

நான்கெனல்விடயமுத்திநல்லசம்பந்தத்தோடு
மான்றதோரிவையும்பின்னுமதிகாரியாகுனனு
மான்றநன்னூறனக்குமசலமேவிடயமுத்தி
நான்மறைப்பயனுமின்னுநயம்படநவிலுறேனே 137

நூலொடுபலனிநண்டினுவலரும்பிரகாசத்தி
னுலவைபிரகாசித்தலிவையிரண்டிலக்கணந்தா

ஞாலறிவுடையனாகிநண்மையாஞ்சாதனங்க
ளலைவைபெற்றோன்றானேநல்லதிகாரியன்றே 138

சாதகமானசீடாசற்கருமத்தினாலே
யேதமாமகமுமிக்கவெண்ணருமதுவேயாமோ
நீதியாமுறையுமீதேநிண்ணயமிகுந்தவேத
பேதமில்லாமறைனுமிசைப்பதாலுண்டோஞானம் 139

சாங்கையினறிவினானுஞ்சற்குருகருணையானு
மாகமியானல்லனாமப்பரம்பொருளேயாகு
மூகமாயோகத்தானுமுண்மையாமறிவினானு
மேகமேயாவனென்றுமிசைத்தனனிறைவனன்றே 140

ஆகையிற்கருமஞ்சொன்னவப்படிவிதியிற்செய்த
லோகைபோலாகுநாசமுயரயன்பதியுங்கிட்டு
மூகையில்லாதமூடருரைத்ததேபெரிதாயெண்ணிப்
பாகையின்வயமேயாகிப்பண்ணுவர்கருமமன்றோ 141

காமியமாகுங்கன்மங்களிகாமிலாதநெஞ்சோ
டேமுறச்செய்துபின்னுமெய்துவரயனுடெய்திக்
காமுறுங்காந்திமாதர்கலியனிகப்பட்டந்த
வோமவனுலகின்றிவ்வுலகினிற்சனிப்பரென்னே 142

முன்னவனாற்றுஞ்செய்கைமுடிந்தபினிவணேசேர்வ
னென்னவன்செய்தகன்மமத்தினாலுண்டாமந்த
வன்னவாகனத்தோனுள்ளவந்தவவ்வுலகனித்ய
மென்னதுதெரியாதோரேயியற்றுவர்காமியத்தை 143

காமியமற்றநல்லோர்காணுறும்பிரபஞ்சத்திற்
காமுறுமனத்தோடெண்ணுங்கதியினராவரெத்தா
லாமிவர்கானனீரேயாகுமிச்சகமீதெல்லா
மாமெனலறுதியுள்ளமாகுதலாலேயன்றோ 144

ஆதலாற்கருமந்தன்னையகற்றியாமதுவேயாக
நீதமிக்கத்தோடெண்ணிநின்மலச்சுருதிஞான
வாதியாமவரைக்கிட்டியடைகுதன்முறையாமீதே
வேதமும்பெரியோர்யாவும்விளம்பியவிபரமைந்தா 145

பண்ணவனிவ்வாறுகப்பகர்ந்தனனதுகேட்டைய
பண்டிதப்பரமமூர்த்திபகவனேயென்னைநீயாப்
பண்ணியபரமனீரேபார்ப்பதிநாதனாகி
நண்ணியநால்வருக்குநவிற்றினைஞானமோனம் 146

இத்தகைப்பெருமைவாய்ந்தவீசனேவிமையோரேத்து
மத்தனேயடியேனுக்குமருளியவமைவேயின்னு
முத்தவர்க்கன்றுநீர்தானுரமிகவருளினீரே
யித்தரையினிலெஞ்ஞானமிசைந்ததுன்னருளேயன்றோ 147

அடியனுக்கமைவித்தாண்டயமைவினுக்கடியேனைத்தை
யடிகளுக்கடியேனுதலவையெதைவிடுதியையா
தடுதலில்லாமலந்தத்தையைமிகுந்தருள்வாயென்ன
மடியுறுமாயையில்லாமதிமிகுமாசான்சொல்வான் 148

மண்ணினிற்சனித்துநம்போன்மகிழ்வுறுங்குரவராக
வெண்ணியவெண்ணமெல்லாமிசையுமோவிசையாதந்த
நுண்ணியகுரவறன்னினுண்மையாமிலக்கணத்தை
நுண்ணறிவுடையவுன்றனுள்ளினிற்கேளாயென்றே 149

ஆரியனிலக்கணந்தானமைவுறுஞ்சுருதியாவுஞ்
சேரிடமானவந்தச்செயலுறுங்குரவர்சித்தி
னுருவர்பிரமநிட்டையாகுவரதுவேயாக
யீரெனும்பதத்தினுடாரின்னவரின்னுங்கேளாய் 150

மாரிபோன்மாறுவேண்டாமதியினர்குரவராவ
ராரிதஞ்சொன்னவண்ணமகத்தினின்வழுவாத்தூய
ராரியனூலுந்தானதிகாரியாகிற்சொல்வ
ராரிடஞ்சீடருக்குமமைவுறவருளுநாதர் 151

சாதனசதுட்டயங்கண்சகசமாயவதிதீர்ந்து
மோதருஞ்சகுணமுத்தியிருந்தவரிவர்முன்னெய்திச்
சீதருயடியேங்கட்குஞ்செப்புதற்கொண்ணுதான
வாதியாமுபதேசத்தையருளுதியென்னவண்ணேன் 152

அன்னரதுவேயாகவருளுமாவாக்கியத்தைச்
சொன்னவரிறைவராவாரென்றுபின்சாமிசொல்லு

மன்னதுனேராதார்க்குமன்னவனேரானின்னும்
பன்னுவனென்றுமாசான்பகருவனளினமாக 153

மதிமிகவளர்ந்தமைந்தமாணவவென்றுசொல்வான்
பதியதுநீயேயானாய்பாக்கியமிகுந்தசீடா
வுதிப்பதாமுலகைநீயுமொருபொருளாகவெண்ணி
மதிக்கவேவேண்டாமென்றுமானிடத்தலைவன்சொல்வான் 154

பதியெனவென்னைநீயும்பாவனைசெய்தலாலே
பதியதுவானாயென்னப்பகருவன்மாறுவேண்டும்
பதியிடைநிற்றலானபரமமாநிருவிகற்பம்
பதியிடையிருத்தலின்னும்பகருவன்பிரதிதானே 155

சீடனேநின்னகத்திற்சேர்ந்தமிக்கையமெல்லா
மேடலினுடனேசொல்லியென்றனாலையந்தீர்ந்து
மோடிடுமனத்தையென்பாலொருக்கலேபிரதியாகு
மாடகமுதலாமாசையடைதலேபிரதிபந்தம் 156

அந்தவப்பிரதிபந்தமறுத்தநீயணுகவொண்ணா
தந்தரப்பொருளேயாவாயையமுன்னகத்தினுண்டோ
வெந்தனல்லிடத்திற்கூறுவாயெனவிவனுங்கூற
வெந்தையேயின்னுமையமிருப்பதையிசைக்கின்றேனே 157

சமாதியென்பதுதானென்னச்சாற்றியநிருவிகற்ப
சமாதியென்பதுவுமென்னச்சாற்றுமென்றவனுங்கூறச்
சமாதியின்சகசந்தன்னைச்சாற்றுவன்கேணீயென்று
சமாதியுமிருவகைத்தாச்சாற்றுவரறிஞர்மாதோ 158

நால்வகைச்சமாதியென்றுநவிலுவரிரண்டேசொல்வே
னூல்வகையறிந்தோர்கூறுநலவரும்பிராகாரத்தோ
டேலறிவுதயமாகுமிதுவிறுஞ்சவ்விகற்ப
மாலறுமைந்தவிந்தமயக்கமாம்பிராகாரங்கள் 159

இல்லதாய்த்தோற்றுமிக்கவீசனின்சமாதிதானே
நில்லதானிகருவிகற்பனாட்டுதலாகுமென்று
மல்லிலாவிந்தவாசானருளவுஞ்சீடன்சொல்வா
னெல்லையாஞ்சகங்களெந்தவுகத்தினினுதித்ததத்தை 160

ஆரிடமுதித்ததிந்தவறுஞ்சகமாராலென்று
மாரியவிவையுங்கூறியகமயலகற்றுமென்ன
வாரியனவிலுகிற்பானமைந்தவிச்சங்கைநன்று
வீரியமிகுந்தமைந்தவென்றிவைவிளம்புவானே 161

சகமெனவில்லைமுன்னேசாற்றினேன்பின்னுமுன்ற
னகமிதினையங்கொண்டுமறைந்தனைமாயையுண்டோ
வகநில்லையவனின்மாயையக்கினிச்சூடுபோலு
மிகவமிழதனினின்பமேலுமேயானபோலும் 162

ஏகமேயிருக்கமாயையெங்குளத்துவுமித்தை
பாகமாமதுவேயல்லாதாகிலப்பங்கந்தன்னி
னூகமாஞ்சகத்துண்டாமோவுருத்திரன்முதலாந்தேவ
ராகமேமித்தையென்னினறுஞ்சகம்பொய்யோமெய்யோ 163

பிரபஞ்சமித்தையென்னல்பேசலன்முன்னாட்சொன்னா
னரவிந்தனதுவேசொன்னானரவிந்தைநாதன்சொன்னா
னுரமிகுமிவர்களெல்லாமுரைத்ததுமித்தையாமோ
வுரமிகுமைந்தவென்றுமோதுவன்கேணீயந்தோ 164

சகமதுபொய்யேயென்னச்சாகையுஞ்சாற்றுமிக்க
வகமதினாரணத்திற்கறுஞ்சகமுதித்தல்சொல்ல
வகமில்லையென்னவென்னிலறைதலாற்பயனொன்றில்லை
நிகமமுஞ்சிருட்டிசொல்லுநேரதாயென்னையாயின் 165

மந்தமாமனத்தினோர்க்குமனத்தினறிவுண்டாகா
தந்தனோரதனாற்சாகையறைதலாஞ்சகச்சிருட்டி
யிந்தயிவ்விபரங்காணாரியம்புவர்சகமெய்யென்றும்
பந்தமாமிதற்கோர்காதைபகருவனென்றுபன்னும் 166

பாரினிவ்வுலகின்முன்னாட்பரிபவமிலாதோர்பிள்ளை
நேரதாந்தாயார்முன்னர்நவிலுவன்றாயேயென்ற
னாரல்மிக்காகமெல்லாமழிகுறும்போலவாகு
னீரதற்கொருமருந்துநிகழ்த்தல்செய்தருள்வாயம்மா 167

புத்திரன்கூறவம்மைபுதல்வனினாகனோக்கிப்
பத்திரமிகுந்தமைந்தபாலனேமருந்துமிந்தோ

பத்தியோடருந்துவாயேற்பறத்தல்செய்திடுவேனத்தை
வத்தியமடையலொட்டாவகையுறுங்கசப்புமிக்க 168

இம்மருந்தருந்துவாயேனீறுறாமுன்வியாதி
யெம்மகவாசையாலேயியம்பினனென்னமைந்த
னம்மையேகைத்தலெவ்வாறருந்துவனென்றனாகங்
கம்பலைமிகவந்தந்தங்காணினுமருந்தேனென்றான் 169

மைந்தனிவ்விதமேகூறமாணவவுன்னைவிட்டு
மெந்தனாட்பிரிந்ததந்தோயீறுறாவகையேயாகங்
கந்தமோடமிழ்துமானகாந்தியாமருந்துமீவே
னந்தனாவென்றுகூறிநவிற்றினள்வஞ்சமாக 170

அவ்வையேயென்றனக்குமாகுமிம்மருந்தேயீவா
யிவ்விதமதலைகூறவெண்ணுவண்மாதாவிந்தச்
செவ்வியசிறுவனோய்க்குச்செப்பியகைத்தலல்ல
தெவ்விதமருந்தினானுமீறுறாதென்றேயெண்ணி 171

ஆகினுமிவன்கசப்பையருந்தலனதற்குமுள்ள
மாகியவன்னைபின்னையறைகுவளருமைமைந்த
சாகுறுநோய்க்குமிக்கச்சாரமாஞ்சாரமான
பாகுறுமிம்மருந்தைப்பருகுவாயென்னமெய்யன் 172

பருகினன்பின்புதெளவைபார்த்ததிகசப்புமான
வருமருந்ததைமறைத்துமருந்தியமருந்தினூடே
பருகவேசெய்துமாதாபாலனுக்குறுவியாதி
யருகல்செய்தனளாமென்றுமறைந்தனனையனன்றே 173

இத்திறமாசான்கூறவீசனோயுற்றவென்ன
கத்தினினையமாறவருளியதனைத்துந்தேரே
னுத்தமவென்றுசீடனுஞ்சாவியபின்னரைய
னத்தையென்றவடான்சாகையம்மகன்சீவராகும் 174

வியாதியென்பதுதான்கேணீவீழ்வுறும்பவமாமிக்க
வ்யாவுறுங்கசப்பேஞானமமிழ்தெனற்கருமமாகும்
பயாபயமற்றமைந்தபராவுறுஞ்சாகையுள்ள
மயானமாமான்மஞானமடைவதேயாகுமன்றே 175

அதிகாரிபேதனோக்கியறைவுறுஞ்சாகையின்னு
முதியாதனாமேனுமாமென்றுளங்கருதலெண்ணுச்
சதியாகுமதுவேநாமாமென்றவர்க்கறையுங்கன்ம
மதிமிகுமைந்தவென்றுமதிமிகுமாசான்சொல்வான் 176

அன்னவரகங்கடோரவாகமஞ்சொல்லுமன்றி
யின்மையாஞ்சகத்தைச்சொல்லவிசையுமோவாரணந்தா
னன்மையாஞ்சகத்தினுள்ளநாடுகடோறுஞ்சென்றும்
புன்மையாமனமுநீங்கிப்புண்ணியமிகுந்துபின்னும் 177

அகமதுசத்தியாகிவாரணமுடிவுதேரு
மகமதுவாகுமட்டுமறுஞ்சகமுளதேயாகு
மகமெனவில்லையாயினழிவுறுஞ்சகத்துமில்லை
யகமெனவீறுமட்டுமழிவுறாதுலகமெய்யா 178

சாகையின்சகசவுண்மைசகமெனவொன்றுமில்லை
யாகினுமந்தபுத்தியாகினோரறிஞராகப்
பாகமாயாரணந்தான்பகர்வுறும்புவனமில்லை
யேகமேயாகுமெல்லாமென்றனனாசானன்றே 179

பின்னுமாரியனும்பேசும்பிறிவுறுமகத்தோரான
யின்னலஞ்ஞானிகட்குமிறுஞ்சகமுண்மையாகும்
பன்னருமுத்தியிச்சைபாலகவுள்ளோர்க்கெல்லா
மின்னமுமசத்துஞ்சத்தாலாயிலகுறுஞ்சகந்தானன்றே 180

மாயையின்மயக்கநீங்கிமகேச்சுரனானவர்க்கு
மாயையாஞ்சகத்துத்தோன்றாமைந்தனேயிதுவுமெய்யா
மாயையினாதன்முன்னாண்மிழற்றினன்மைம்மாவாக
மாயையான்மதித்துநீயுமதனகோபாலனாவாய் 181

ஆரியனிவ்வாறோதவருமைமாணாக்கன்சொல்வா
னாரியவென்றனையவார்த்தர்களானோருக்கு
மாரியமிகுந்தவிந்தவறுஞ்சகத்தோற்றுவானே
னாரிமிக்கவனேயென்னவன்னவனறைதலுற்றான் 182

கானலினீருந்தோற்றுங்கிளிஞ்சினிற்றாரமுந்தா
னீனமில்லவர்கட்கெல்லாமெத்தொழிற்குதவியாகு

ஞானமாமவர்க்குத்தோற்றுநற்சகம்பயன்படாது
ஞானமிக்கமைந்தமைந்தாஞானனேஞ்சகமாங்கேளே 183

இதற்கொருகாதைமுன்னாளிராகவன்விரத்திகொள்ள
விதர்க்கணஞ்செய்யுங்காலைவீரமாமவன்பிதாவும்
பதவியவசிட்டன்றன்னைப்பார்மிசைவணங்கியேத்திப்
பதப்படுமிராமன்புந்திபண்ணவவறிந்திலாயோ 184

காகுத்தன்முதல்வன்ராமன்கடவியவினைசெயாம
லோகுக்கொண்டதுவேயானானுண்மையாமதுவேயாகி
யாகுறுஞ்சகத்தினிச்சையற்றனன்றுறவியாக
நீகுருவாகையாலேநின்னயவிராமனுக்கு 185

அருளியவுபதேசத்தாலாகுவன்றுறவியாக
மருளறுகுருவேயென்றன்மைந்தனாமிராமன்றன்னை
யிருநிலந்துறத்தலொண்ணாவெண்ணமேசெய்துமிந்தத்
தருணமேதலத்தையாளத்தக்கவனாகச்செய்வாய் 186

இவ்வகையரசன்கூறவீசனேர்வசிட்டன்சொல்லு
மவ்விதமுடையமைந்தனம்புவிதுறத்தலொண்ணா
வவ்வகையாக்குவேனென்றன்னவனரசைநீங்கிப்
பவ்வியமிகுத்தராமன்பதியிடையேகினானே 187

ஈசனாமிவனைக்கண்டுமிராகவனிறைஞ்சியேத்தித்
தேசிகவென்னைக்காணத்தேவரீரணுகலாமோ
வாசயமெதுவோவத்தையடியனேனாசரித்த
லாசயமெனக்குமையவென்றனனவனுங்கூறும் 188

துறவிநீயாகவெண்ணித்துணிந்தனைபோலுமெய்யோ
துறவறமொன்றினானேதுவிதமற்றதுவேயாமோ
துறப்பதுமெதைவிட்டெச்சதுறுமிகுஞ்சகமுமுண்டோ
துறவிநீயாகவெண்ணித்துணிந்ததுமெத்தினாலோ 189

சகமகநிலையைவேறேசற்குணமிகுந்தராம
சகலமுமதுவேயல்லாற்சாற்றறிடினயனுமுண்டோ
வகனினைவென்னிடத்திலறைகுவாயென்னவன்றே
ணிகமமுமெல்லாந்தேர்ந்தநின்மலச்சாமிசொல்வேன் 190

உலகிதின்விரத்திகொள்ளவுண்மையாயெண்ணங்கொண்டே
னலமிகுமையவென்னநான்மறைமுடிவுணர்ந்தும்
பலகலைகற்றவன்றானென்பார்த்திராகவனேயென்றுஞ்
சலனமற்றதுவேயாகுஞ்சகமெனவில்லையாகும் 191

அந்தமாஞ்சகமுமாகாவசலமுமொன்றுவேறு
விந்தவோர்விபரந்தன்னையெனக்குரைத்தப்பாணீயே
வந்தவிவ்வுலகநீங்கிவாழுமில்லறத்தினின்றுஞ்
சந்தயமில்லாதேநீசாற்றியதுறவேகொள்வாய் 192

அருந்தவனிவ்வாறோதவன்னவன்கூறுகிற்பா
னருமிகுமுலகுமாதியுண்மையாம்பொருளுமொன்றே
குருமிகவாகுனதகுறிக்கலேன்றுறவுகொள்ளே
னருளியபடியேசெய்வேனென்றனனிராமனன்றே 193

இந்தநற்காதைபோலவிருஞ்சகமீசனென்றே
நந்தனுவென்றுகூறிநல்லவன்கூறுகிற்பான்
பந்தமாமையம்போச்சோபளிங்குபோலகமுமாச்சோ
சந்ததிமிகுந்தமைந்தசாற்றெனச்சீடன்கூறும் 194

குரவனேதேவரீராற்குணமுறுமகத்தினுள்ள
வுரமிகுமையமெல்லாமோடினவொளியைக்கண்ட
திரமிலாதுகினம்போலுந்தேசிகவென்றுமீட்டும்
பரமனேயென்னையாண்டபகவனேபரமனாதா 195

மறைமிகுமனத்தோனமதியிலாவென்னையாண்ட
மண்றமுடிவாகுநீயேமதித்தேனைநீயுமாக
மறைவிலாவாக்கியத்தைகதித்தெனக்கருளுமையா
மறைவிடமொன்றுமில்லைமன்னுபூரணமேயெங்கும் 196

சகமுழுதெல்லாநானேசகசமுநானேனற்றே
னக்கியமெல்லாமாறுமகண்டமாமதுவுமானே
னிகலுறதோற்றுகின்றதென்னிடையென்னையன்றி
யிகமிதினென்றுமில்லையீசனேயென்றபின்னும் 197

செய்வகையொன்றுமில்லாச்சேதனனீயேயென்று
முய்வகையெனக்குச்செப்புமுத்தமவுருவேயீச

னெய்தைமிக்கச்சுதாநின்நீதியையென்னசொல்வே
னெய்யல்செய்தாசையெல்லாமுள்வழியானேனின்றால் 198

பராபரசொருபவும்மாற்பராபரனேயென்று
பராமரித்ததுவேயானேன்பரமனேபரமமூர்த்தி
பராங்கதன்முதலாமூவர்பராவுமுஞ்சோதியாதீ
பராவுதலரையையபரமமேயாமெனின் 199

என்னையான்வணங்கலாமோவீசனேயேகதேவ
முன்னவவென்றுபோற்றிமுறையினற்பதத்திறழ்ந்து
பன்னியவட்டவங்கமாகவேபரவியேத்தி
யென்னினும்வேறலாதவிறைவனேகுரவரேறே 200

ஆனந்தங்கொண்டுமிவ்வாறன்னவனறையவாசா
னீனமிலில்லானம்பாலிருத்தலேயிசையுமென்று
ஞானனுங்குரவன்கூறஞானமாமகனுஞ்சொல்வா
னூனமில்லவனேநம்பாலுமுதலாலென்னவென்று 201

சீடனிவ்விதமேகூறச்சின்மயச்சாமிசொல்வா
ரேடணைமூன்றுந்தள்ளியிசைவுமுஞ்சீடநீகே
ணீடுதலில்லாவிந்தநிலமிதிற்கசுதுக்கங்க
ளேடவிற்றுக்காதேனுமிருகணிற்றுக்குமன்றே 202

ஆகையினயனத்தாலேயாகியததுவுந்தோன்று
தேகமாநிருவிகற்பமாகுதலாலேயாகு
மோகையினம்மினுண்டாமுயர்வுமும்பிரமானந்த
மாகையினதுவேயாவோமென்றுபின்னிருவோருந்தான் 203

திரிபுடிமூன்றுந்தள்ளித்திகழுருவிவரிடத்திற்
றரிபுவேறில்லாதந்தத்தேவனேயாமுரென்னே
திரிவிதமலமுமற்றுத்திகழொளியானார்போலத்
திரிசனமெல்லாமற்றுத்திகம்பரமடைவோனுமே 204

சாதனநான்குந்தேர்ந்துஞ்சற்குருவுபதேசித்த
வோதருபெருமைவாய்ந்தவுத்தமரெல்லோருந்தா
னுத்ரவாகனூமனவரதமுநேராய்ந்துஞ்
சோதிபோயாவோநாமுஞ்சுபவிருப்புகங்கொண்டோரே 205

## அம்பரக்கண்ணி.

நூற்கள்பலகற்றேனுண்ணறிவையான்காணே
னேற்கவருளுவையோயின்பேயென்னம்பரமே 206

சாத்திரங்களாராய்ந்தேன்சகசநிலையான்காணே
னேத்திரமேநின்மலமேநித்தியமேயம்பரமே 207

காணாதமோனநிலைக்காணக்கருத்துளனே
சேணேயென்செம்பரமேசேர்கின்றவம்பரமே 208

தேடிப்பலகாலந்தித்திக்குஞ்சற்குருவை
நாடிப்பலன்கண்டேனானேயென்னம்பரமே 209

ஓடிவருமுள்மனமுமெங்கேயேவையையோ
நீடுநிலைநிற்கவிலைநேரேயென்னம்பரமே 210

விகற்பமறவுன்னிடத்தேதவேணபடிகண்டுநிரு
விகற்பநிலையானடையவேணுமிகவம்பரமே 211

மூவாசையாலேயென்முன்னுள்ளமோனமிறு
மாவாவிதுநிலையோவந்தோவென்னம்பரமே 212

செய்கின்றசெய்கையெலாஞ்சேணாவறிவதுவே
வுய்கின்றமார்க்கமெனவுள்ளேனென்னம்பரமே 213

சத்தங்கடந்தநிலைசவ்விகற்பமாகுமிக
நித்தம்பரமிதுவேநீதமிகுமம்பரமே 214

எங்குமுனதருளேயென்னேயென்னம்பரமே
மங்கும்படிநீயாமார்க்கமுறுமம்பரமே 215

## கண்மணிக் கண்ணி

கோசங்கடந்தநிலைகண்டேனதுகாணேன்
பாசப்பரஞ்சுடரேபார்க்கின்றகண்மணியே 216

கண்டேனான்பாணிலத்தைக்காணேனெனைக்காணே
னுண்ணேனெனையறியவுள்ளாயென்கண்மணியே 217

ஆசிரியனுக்கின்றவன்னவன் மாவாக்கியத்தைப்
பேசியுமேபேசாமற்பேர்ந்தேனென் கண்மணியே 218

விருத்தியெழும்போதுவேணசுகநித்திரையே
யருத்திமிகவந்தடைந்ததையோவென் கண்மணியே 219

சுந்தரமாயோகத்தாற்சோகம்பதனானே
யந்தரமாயானநிலையானோவென் கண்மணியே 220

ஐயோபரசிவமேயன்பேயென்னாருயிரே
மெய்யேவுனையறியமெஞ்ஞானக்கண்மணியே 221

சோகம்பதங்கடந்துசொல்லிறந்தநிர்க்குணத்தே
யேகம்பரமெனவேயெண்ணேனென் கண்மணியே 222

காணேனெனையன்றிக்கண்டவிடமெல்லாமுஞ்
சேணையுனையொழியச்சேரேனென் கண்மணியே 223

பேச்சொன்றுமில்லாதபேசாதமோனநிலை
யாச்சேயகநிலையேயன்பேயென் கண்மணியே 224

பாராதமோனநிலைபார்க்கின்றேனெவ்விடத்து
மாராலறியதொணாவம்பரமேகண்மணியே 225

## நாயகக் கண்ணி

கண்டேனா*னாடரியைக்கண்டுமனந்தீர்ந்தேனா
னுண்டேனெனைநானேயுள்ளேனென்னாயகனே 226

அன்பார்ந்தவப்புறமேயந்தாமேயென்னகமே
வுன்பானானாழியனேவூறியாநாயகனே 227

*ஆடரி, சுப்பிரமணியன். அதாவது, சு, சுசாதி விசாதி சுவகதபேதரகிதஸ்திதியுமானவனும், ப்ர, சொப்பிரகாச சொரூபமானவனும், மணியன், அந்நியப்பிரகாசங்களையபேக்ஷியாது தானே தன்னைப்பிரகாசிப்பிக்கிறவனுமானவனெவனோ அவனே சுப்பிரமணியன்.

தித்திக்குஞ்செங்கரும்பேதேனேயென்னாரமுதே
பத்திக்குவித்தானபரமேயென்னாயகனே 228

ஆருமறியாதவாரணனேயன்றேனு
னாருமதுவானேனுத்தமமாநாயகனே 229

என்னையுணர்ந்தபினுமேகாந்தங்காணேனு
னுன்னையுணருவதுமொன்றேயென்னாயகனே 230

அற்றேன்பிறவியெலாமாரினிமேலென்னறிவா
றுற்றேனெனையுனையேவூரில்லாநாயகனே 231

கண்டவிடமெல்லாநீகாண்கின்றதானு
முண்டவிடநானேயாமுண்மையுறுநாயகனே 232

செல்வோர்க்குச்செல்கதியேசீபதியேதற்பரமே
யல்லார்க்குமாரமுதேயன்பேயென்னாயகனே 233

நானேயதுவானேனான்பிரமமானேனே
தேனேயென்றெள்ளமுதேதேவேயென்னாயகனே 234

ஆழுங்கடந்தநிலையானேனென்னாயகனே
நீறும்படியானேநின்மலமாநாயகனே 235

வேறு

வாழி

வேதாந்தனுல்வர்க்காகவிளம்புமாலீசன்வாழி
நாதாந்தசோதிக்கண்ணாவிற்றுறுகீதைவாழி
நாதாந்தநெறியும்வாழிநம்மனோரெல்லாம்வாழி
வேதாந்தநூலும்வாழிவிரிஞ்சநமிகவும்வாழி 236

வேறு

பீதாம்பரநாதன்னெனபெம்மானவன்வாழி
பீதாம்பரைபதியாமவன்பிரமனுருவாழி
மாதாசகவவளெம்முதன்மாலாமவள்வாழி
நீதாவெனவெண்ணும்பலகிதியோரவர்வாழி 237

ஓம்தத்ஸத்

